## பெருவுக்கு பயணமானார் அமைச்சர் ரவி

லிமா, ஒக்.7
பெரு தலைநகர் லிமாவில் நடைபெறவுள்ள உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அங்கு சென்றுள்ளார். பக்கம் 24


# உதயன்

சுடர் 30 | கதிர் 315 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 20, புதன்கிழமை 07.10.2015


# கலப்பு நீதிமன்றால் சபையில் களேபரம்

## விமல் அணி- ஆளும்தரப்பு இடையே கடும் சொற்போர் மோதல் நிலை உருவாகியதால் சபை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 7
இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் கலப்பு (ஹைபிரிட்) நீதிமன்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுச் சபைக்குள் போராட்டம் நடத்தினர்.
இதற்கு ஆளும்கட்சி பக்கம் 24



## ரணில் -மங்கள முறுகல் பூதாகரமாகும் அபாயம்

கொழும்பு, ஒக். 7
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையிலான முறுகல் நிலை பூதாகரமாக வெடிக்கக்கூடிய அபாயம் எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
பிரதமரின் நடவடிக்கைகளுக்கு வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் ஒத்து பக்கம் 24



## இன்ரபோல் மூலம் கைதாவார் ரவிராஜ் கொலைச் சந்தேகநபர்

### பொலிஸ் தலைமையகம் தகவல்

கொழும்பு, ஒக்.7
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலையுடன் தொடர்புடைய முக்கிய சந்தேகநபரை இன்ரபோலின் உதவியுடன் சுவிற்ஸர்லாந்திலிருந்துவிசாரணைக்காக இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
கடந்த 2006 ஆம் பக்கம் 24

## அரசியல் தீர்வைக் காண்பதே புதிய அரசின் முதல் இலக்கு

### ஜப்பானிய நாடாளுமன்றில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 7
இலங்கையின் தற்போதைய அரசு எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களுக்கு ஜப்பானிய அரசு உதவிக்கரம் நீட்டும் என எதிர்ப்பார்ப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜப்பானிய நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.



இலங்கையில் தேசிய ஒற்றுமை, மத, இன ரீதியாக உள்ள பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே புதிய அரசின் பிரதான நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
ஜப்பானுக்கான ஐந்து நாள் பயணத்தை மேற்கொண்ட பக்கம் 24

## முகாமைத்துவ உதவியாளராக 2,635 பேருக்கு நாளை நியமனம்

கொழும்பு, ஒக்.7
அரச முகாமைத்துவ உதவியாளர்சேவையில்புதிதாக இணைத்துக்கொள்வதற்காக நடத்தப்பட்ட திறந்த பரீட்சையில் தெரிவாகிய2ஆயிரத்து635பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வுநாளைவியாழக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது என அரச நிர்வாக மற்றும் பக்கம் 24

## ஐ.நா. தீர்மானம் குறித்து ஆராயக் கூடுகின்றது சு.க.

கொழும்பு, ஒக்.7
ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் குழு விரைவில் மீண்டும் கூடவுள்ளது.
குறித்த தீர்மானம் தொடர்பில் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை உறுதிசெய்வது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஏழு பேர் கொண்ட விசேட குழு நியமிக்கப்பட்டது. அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவில் அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, டிலான் பெரேரா, சுசில் பிரேமஜயந்த, எஸ்.பி.திஸாநாயக்க, மஹிந்த சமரசிங்க உள்ளிட் பக்கம் 24

## மகிந்த ஆதரவு எம்.பிக்கள் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, ஒக்.7
மகிந்த ஆதரவு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின்கூட்டம்ஒன்று நேற்றுக் காலை பக்கம் 22

## வடக்குக்கான ரயில் சேவை நேற்றுப் பாதிப்பு

கொழும்பு, ஒக்.7
வடக்கு ரயில் பாதையின் அம்பத்பொல - கல்கமுவ வரையான பகுதியில் ரயிலொன்று தடம்புரண்டுள்ளமையினால் வட பகுதிக்கான ரயில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பக்கம் 24

## சாவுத் தண்டனையைக் கோரி நாடாளுமன்றில் பிரேரணை

### நேற்று முன்வைத்தார் ஹிருணிகா எம்.பி.

கொழும்பு, ஒக். 7
சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம், படுகொலைச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளி களுக்கு சாவுத் தண்டனை வழங்க வேண்டும் என்று நேற்றுச் சபையில் வலியுறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, இந்த விடயத்தில் சமயம் பற்றிய குழப்பத்துக்கு உள்ளாக வேண்டாம்என்றும்- சமயம் வேறு- சட்டம் வேறு- என்றும் குறிப்பிட்டார்.



வீட்டில் பெண் பிள்ளைகளை இரண்டாம் பட்சமாக எண்ணும் மனநிலை பெற்றோர்களிடம் மாற வேண்டும் என்றும் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை சிறுவர் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகம், படுகொலைகள் முதலான குற்றச்செயல்களுக்கு சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்தக் கோரும் பிரேரணையைச் சபை ஒத்திவைப்பு வேளை பக்கம் 23

## தீவுப் பகுதி மக்களுக்காக வந்தது அம்புலன்ஸ் படகு

### வடக்கு சுகாதாரத் திணைக்களத்திடம் கையளித்தார் ஜனாதிபதி மைத்திரிபால



யாழ்ப்பாணம், ஒக். 7
தீவுப் பகுதி மக்களின் மருத்துவத் தேவைக்காக, கடற்படையினரால் தயாரிக்கப்பட்ட அம்புலன்ஸ் படகு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.
ஒரே தடவையில் 15 நோயாளர்களுடன், நெடுந்தீவிலிருந்து 15 நிமிடங்களில் குறிகாட்டுவான் துறைமுகத்தை வந்தடையக் கூடியதாக இந்த அம்புலன்ஸ் படகு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக பக்கம் 23



1717 FOLLOW US

மொபிடெல் முற்கொடுப்பனவு சேவையூடாக வழங்கப்படும் விசேட SMS பொதிகளுடன், விரும்பியவாறு குறுந்தகவல்களை அனுப்பி, உங்கள் அன்பான உறவுகளுடன் உறவாடிட கவர்ச்சிமிகு 4 பொதிகளுள் விரும்பியதைத் தெரிவு செய்யுங்கள்.

| | | SMS (M2M) | |
|---|---|---|---|
| (Texter) | 5.00 | 30 | 1 நாள் |
| (Texter Plus) | 44.00 | 275 | 5 நாட்கள் |
| (Super Texter) | 99.00 | 645 | 10 நாட்கள் |
| (Maxxa Texter) | 115.00 | 1050 | 20 நாட்கள் |

செயற்படுத்தலுக்கு அழையுங்கள் #767#

TRC/M/Promo/15/04

Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நிரந்தர நியமனம் கோரி வன்னி தொண்டராசிரியர் கவனவீர்ப்பு

## நாளை வட மாகாண சபை முன்பாக

யாழ்ப்பாணம், ஒக்.7

நிரந்தர நியமனம் கோரி வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் நாளை கைதடி வடக்கு மாகாண சபைக்கு முன்னால் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளனர்.

பல வருட காலமாக நியமனம் கிடைக்கும் என எதிர்பார்த்து இன்று வரை குறித்த ஆசிரிய நியமனம் வழங்கப்படாத நிலையில் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து வலயங்களின் தொண்டர் ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு, வவுனியா வடக்கு –துணுக்காய் கல்வி வலயங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களே கவனவீர்ப்பில் ஈடுபடவுள்ளனர். இந்த கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுப்பதாக தீர்மானித்துள்ளதாகவும், அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் வன்னி தொண்டர் ஆசிரிய சங்க தலைவர் ஜெயராஜ் அழைப்பு விடுத்துள்ளார். (ற–21)

# உணவு உற்பத்தித் தேசிய வேலைத்திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ். மாவட்டத்தில் உணவு உற்பத்தித் தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதான நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் இடம்பெற்றது.


இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், வாழ்வின் எழுச்சிப்பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொண்டு பழமரக் கன்றுகளை நட்டனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த அரச அதிபர்:–

வெளிநாட்டு உணவு இறக்குமதியைக் குறைத்து உள்நாட்டு உற்பத்தியை அதிகப்படுத்தி எமது நிலவளங்களை அதிகமாக பயன்படுத்தி அதியுச்சப் பயனைப் பெறுவதன் மூலம் இலங்கையை தன்னிறைவான தேசமாக உருவாக்க முடியும். பால், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி உற்பத் திகளை ஊக்குவித்தல் மற்றும் உணவு இறக்குமதிக்காக செலவிடப்படும் 200 மில்லின் ரூபாவை மீதப்படுத்தல், இரசாயனப் பசளை பாவனைகளைக் கட்டுப்படுத்துவதோடு சுற்றுச் சூழலுக்கு இசைவான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தரம்மிக்க உணவுஉற்பத்தியைஉறுதிப்படுத்தி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதே இந்த உணவு உற்பத்தி.தேசிய வேலைத்திட்டத்தின் நோக்கம். விவசாயிகள் உள்ளிட்ட அனைவரும் இதற்கான ஆதரவை முழுமையாக வழங்க வேண்டும் – என்றார்.

மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது. (ற–10)






பாலியல் குற்றவாளிகளுக்குத் சாவுத் தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று இ.போ.சபினர் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டனர். வவுனியா பஸ் நிலையத்தில் நேற்று இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. புங்குடுதீவு மாணவி மற்றும் கொட்டதெனியாவ சிறுமி ஆகியோரின் கொலைக்குக் காரணமானவர்களுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று அரசை வலியுறுத்தும் வகையில் பொதுமக்களின் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன. அத்துடன் பாலியல் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்ற வேண்டும் என்று கோரி இ.போ. சபினரால் மேற்கொள்ளப்படும் கொழும்பு நோக்கிய நடைபவனிக்கு ஆதரவு தெரிவித்தும் கையெழுத்து வேட்டை இடம்பெற்றது. (ற–402)

# வடக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் முதியோர் தின நிகழ்வுகள்

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர் தின விழா நேற்று கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெற்றது. நேற்று காலை 8 மணியளவில் கிளிநொச்சி காக்கா கடைச் சந்தியில் ஆரம்பித்த நிலைத்திருக்க கூடிய விதத்தில் முதியோரின் வயதுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற நகர சூழல் என்றும் தொனிப்பொருளிலான நடை பயணம், ஏ–9 வீதி வழியாக கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தை வந்தடைந்ததுடன் நிகழ்வு ஆரம்பமானது. அதில் வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், முதியோர் இல்லங்களின் உத்தியோகத்தர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். தொடர்ந்து மண்டபத்துக்கு வருகை தந்த வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட அதிதிகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து முதியவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ற–21)



## ஆசிரியர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.7

யாழ். நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் ஆசிரியர்தினம் இன்று புதன்கிழமை மு.ப.10 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு, பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணம் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.தவலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை நிலையப் பணிப்பாளர் செ.கமலநாதனும், கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் முன்னாள் அதிபர் செ.செல்வநாயகமும், முன்னாள் பிரதி அதிபர் உ.யோகானந்தாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற–ரி6)

# குடும்ப தலைமைத்துவ பெண்களுக்கான தேசிய செயலகம் விரைவில் அமையும்

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தகவல்

கிளிநொச்சி, ஒக்.7

குடும்பத்துக்குத் தலைமை தாங்கும் பெண்களுக்கான தேசிய செயலகம் மிக விரைவில் கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

புதிய அரசு அமைக்கப்பட்ட பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் கிளிநொச்சிக்கு வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சிவில் சமூகக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார். அதில் போரால் பாதிக்கப்பட்ட – கணவனை இழந்து குடும்பத்துக்குத் தலைமைதாங்கும் பெண்களுக்கான தேசிய செயலகம் ஒன்று கிளிநொச்சியில் அமைக்கப்படும் என்று அவர் கூறியிருந்தார்.

தற்போது புதிய அரசு அமைக்கப்பட்டு 9 மாதங்கள் நிறைவடைந்துள்ளது. குறித்த தேசிய செயலகம் அமைப்பது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிக் கேட்டபோதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பான வேலைத் திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம், சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் சந்திராணி சேனாரத்ன அண்மையில் கிளிநொச்சிக்கு வந்து குறித்த தேசிய செயலகத்தை அமைப்பது தொடர்பான விவரங்களைப் பெற்றுச் சென்றுள்ளார்– என்று அவர் குறிப்பிட்டார்.

இது வடமாகாணத்துக்கு மாத்திரமன்றி தேசிய செயலகமாக அமைய இருப்பதால் மேலும் சில திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மிக விரைவில் கிளிநொச்சியில் குடும்ப தலைமைத்துவ பெண்களுக்கான தேசிய செயலகம் அமையும். அதேபோன்று மாற்றுவலுவுள்ளோர்களுக்கான சிறந்த பொது அமைப்பு ஒன்றை உருவாக்கி அதனுடைய விவரங்களை தருமாறு சம்மந்தப்பட்டவர்களிடம் கூறியிருந்தேன். அவர்கள் சிறந்த பொது அமைப்பு ஒன்றை உருவாக்கி அது தொடர்பான விவரங்களை தரும் பட்சத்தில் அவர்களுக்கான விசேட திட்டம் தொடர்பாகவும் உரியவர்களிடம் கலந்துரையாடி அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் – என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (ற–21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீட்டுத் திட்டத்துக்காக பாலியல் இலஞ்சம்

# கிளி. மாவட்டச் செயலகமும் விசாரணை ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஒக்.7

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய வீட்டுத் திட்ட உதவியை வழங்குவதற்காக பாலியல் இலஞ்சம் கோரப்படுகின்றது என்று கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் எழுந்துள்ள குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் ஆரம்பித்துள்ளது என அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தத் திட்டத்தின் கீழான பயனாளிப் பெண் ஒருவரிடம் பாலியல் இலஞ்சம் கோரப்பட்டுள்ளது. இது குறித்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் அந்தப் பெண் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது தொடர்பாக நானும் அறிந்திருக்கின்றேன். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினுடைய தலைமை அலுவலகத்தில் இருந்து அதிகாரிகள் வந்துள்ளார்கள். அவர்களுடன் எமது மாவட்டச் செயலகமும் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இது தொடர்பான உண்மைத் தகவல்கள் மாவட்டச் செயலக அதிகாரிகளாலும் சேகரிக்கப்படும் – என்றார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்பு அதிகாரிகளே இந்திய வீட்டு திட்டத்துக்கான நிதி விடுவிப்புக்கு அனுமதியை வழங்குபவர்கள். அவர்களில் இருவரே நிதியை விடுவிப்பதற்காகப் பாலியல் இலஞ்சம் கோரினார் என்றே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ந–21)

## நாகர் காலத்து பொருள்கள் மகிழடித்தீவில்

மட்டக்களப்பு, ஒக். 7

மட்டக்களப்பு, மகிழடித்தீவு கண்ணகி அம்மன் ஆலயத்தில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகர் காலத்து பொருள்கள் எனக் கருதப்படும் அம்மி, குழவி, ஓட்டுச்சிதைவுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதில் தமிழ் பிராமி எழுத்துக்கள் உள்ளன என்றும் நாகர்களது வேள்ணாகன், நாகன் மகன் கண்ணன் போன்ற பட்டப்பெயர்களும் அதில் எழுதப்பட்டுள்ளன என்றும் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தருமான கலாநிதி சி.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கண்டெடுக்கப்பட்ட அம்மி, குழவி ஆகிய இரண்டும் ஒன்றாக முதன் முதலாக இங்குதான் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள முன் மண்டபத்தின் வாயிலில் உள்ள கற்களை ஆராய்ந்ததில் அவை தாந்தாமலையில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளதுடன், அவற்றிலும் நாகமன்னர்களது பெயர்கள் உள்ளன. இதன் மூலம் கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் பிற்காலத்தில் இருந்த வன்னிமைகளை போல நாகரின் சிற்றரசு இருந்தது என்றும் அல்லது அவர்களது சிற்றரசு ஒன்றில் கொக்கட்டிச்சோலை அடங்கி இருந்தது என்றும் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது – என்றார். (ந–10)

## கல்வி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 7

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழக தமிழ் மாணவர்களால் க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது

வடக்கு – கிழக்கு, மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மகாணங்களின் 14 மாவட்டங்களில் இலவசக் கல்விக் கருத்தரங்கை கணித, விஞ்ஞான பாடங்களில் நடத்தவுள்ளனர். அந்த வகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, இரத்தினபுரி, நுவரெலியா, மொனராகலை, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் 180 க்கும் அதிகமான பாடசாலைகளை உள்ளடக்கி 88 மையங்களில் சுமார் 10 ஆயிரம் சாதாரணதர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கை நடத்தவுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக இன்று புதன்கிழமை, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் ஆரம்பமாகவுள்ளதாக ஊடகக் கருத்தரங்கு தொடர் இணைப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ந–ரி6)

## கஞ்சாவோடு கைதானவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.7

15 கிலோகிராம் கஞ்சா வைத்திருந்து விற்பனை செய்த ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்தது யாழ்.மேல்நீதிமன்று. அதனைச் செலுத்தத் தவறின் 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக் கேணியைச் சேர்ந்த பு.மயூரன் என்பவர் 15 கிலோகிராம், 346 கிராம் கஞ்சா வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடுத்தனர்.

அந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்கள ஆலோசனைக்கமைய கடந்த வருடம் ஒக்ரோபர் 13 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் அது தொடர்பான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. அதன்படி இரண்டு குற்றச்சாட்டுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அதனைச் செலுத்தத் தவறின் தலா ஒவ்வொரு வருடமும் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. (ந–4)

# இந்திய மீனவர் அத்துமீறலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க

### மீன்பிடி அமைச்சரிடம் வலியுறுத்தியது வடமாகாண கடற்றொழிலாளர் இணையம்

யாழ்ப்பாணம், ஒக். 07

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடியை கட்டுப்படுத்தல் மற்றும் உள்நாட்டு இழுவைப் படகுகளின் பாவனையை தடை செய்தல் ஆகியவற்றை இறுக்கமாக நடைமுறைப்படுத்துமாறு மீன்பிடி அமைச்சரை நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளது வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம்.

இது தொடர்பில் சாதகமாக ஆராய்வதாக கடற்றொழில் அமைச்சரும் உறுதியளித்துள்ளார் என்று வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.வி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

எமது கடற் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து, மீன் வளங்களை அழித்து – எமது வலைகளை அறுத்து – வாழ்வாதாரத்தை சீர்குலைத்து – எமது சந்ததியின் எதிர்கால வாழ்வைக் கேள்விக் குறியாக்கும் இந்திய இழுவைப் படகுகளைக் கைப்பற்றி அவற்றை அரசுடைமையாக்க வேண்டும். அந்தப் படகுகளில் வரும் மீனவர்களை கைது செய்து தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் நடத்தியிருந்தோம்.

போராட்டத்தின் முடிவில் பல்வேறு தரப்பினரிடமும் மனுக் கையளித்திருந்தோம். ஆனால், இதற்கான பதிலும் இல்லை, நடவடிக்கையும் இல்லை. இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்கள் இன்னமும் அதிகரித்திருக்கின்றது. மழைக் காலம் ஆரம்பித்துள்ளதால், இந்திய இழுவைப் படகுகளை நாம் அடையாளம் காணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் எமது சிறு படகுகளுடன் மோதி உயிராபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. இதனை கடற்றொழில் அமைச்சரிடமும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

> மழை காலம் ஆரம்பித்துள்ளதால், இந்திய இழுவைப் படகுகளை நாம் அடையாளம் காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் எமது சிறு படகுகளுடன் மோதி உயிராபத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி, நங்கூரமிடும் மையங்கள் செப்பனிடுதல், வெளிச்சவீடுகளை அபிவிருத்தி செய்தல், மீனவர் ஓய்வூதியம், சட்ட விரோத கடற்றொழில்கள், உள்நாட்டு இழுவைப் படகுகளின் பாவனைகளைத் தடை செய்தல் போன்ற கோரிக்கைகளையும் கடற்றொழில் அமைச்சரிடம் இணையம் முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் சாதகமாக ஆராய்வதாக கடற்றொழில் அமைச்சர் தெரிவித்ததுடன், இந்த மாத இறுதிக்குள் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார் என்று அமைச்சர் தெரிவித்தார்– என்றுள்ளது. (ந–5,ரி4)

# நடப்பு நிதியாண்டுக்கான நிதியில் 19 சதவீதமே இதுவரையும் செலவு

### வடக்கு மாகாண சபை உத்தியோகபூர்வ தளத்தில் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.7

வடக்கு மாகாண சபையால் நடப்பு நிதியாண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 19 சதவீதமான நிதியே கடந்த ஓகஸ்ட் மாத இறுதி வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையால் 2015 ஆம் ஆண்டுக்குரிய வரவு – செலவுத் திட்டத்தில், மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடையாக ஆயிரத்து 440 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அதில் 337 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் 268 மில்லியன் ரூபாவே செலவு செய்யப்பட்டுள்ளது.

குறித்தொதுக்கப்பட்ட நன்கொடையாக 400 மில்லியன் ரூபா வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. அதில் 85 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், 53 மில்லியன் ரூபாவே செலவு செய்யப்பட்டுள்ளது.

மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடையாக ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 400 மில்லியனில், முதலமைச்சர், அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்களுக்கு 216 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 6 மில்லியன் மாத்திரமே செலவு செய்யப்பட்டுள்ளது. பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட 168 மில்லி யன் ரூபா செலவு செய்யப்பட வில்லை.

விவசாய அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்களுக்கு 173 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 48 மில்லியன் ரூபா மாத்திரமே செலவு செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்களுக்கு 303 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் 14 மில்லியன் ரூபா மாத்திரமே செலவு செய்யப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்களுக்கு 367 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில்– 72 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. மீன்பிடி அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்களுக்கு 213 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் – 126 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை– 2013 ஆம் ஆண்டு சமர்ப்பித்த 2014 ஆம் ஆண்டுக்குரிய வரவு – செலவுத் திட்டத்தின் வேலைத்திட்டங்கள் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதமே முடிவுக்கு வந்திருந்தது. இந்த நிலையில், நடப்பு ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்கள் இன்னமும் 25 சதவீதம் கூட பூர்த்தியாகத நிலையில் உள்ளது. வருடம் முடிவடைவதற்கு இன்னமும் இரண்டு மாதங்களே எஞ்சியுள்ள நிலையில், நடப்பு ஆண்டு வேலைத் திட்டங்களும் அடுத்த ஆண்டிலேயே நிறைவடையக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந–5)



வலிகாமம் மேற்குப் பிரதேச சங்கானைக் கோட்டத்தின் முன்பள்ளி ஆசிரியர் தின விழா நேற்று வலி.மேற்கு பிரதேச சபைமண்டபத்தில் சங்கானைக் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் தலைமையில் இடம்பெற்றது. குறித்த விழாவில் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், கோட்ட முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் வலிகாமம் கல்விக் கோட்டத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர்களான செல்வி க.விக்னேஸ்வரி, திருமதி உ.றூபா உட்படப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (ந–101)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கூட்டுக் குடும்ப முறைமை வழக்கொழிந்து போகிறது

## முதியோர் தின நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.7

ஒவ்வொரு குடும்பமும் தமது சொந்த பந்தங்கள், உறவினர்கள் என ஒரு கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை மையைக் கைக்கொண்டிருந்தனர். ஒரு வீட்டில் ஒருவருக்கு துன்பம் ஏற்படுகின்ற போது அனைவரும் கூட்டாகச் சேர்ந்து அவர்களுக்கு உதவி ஒத்தாசைகள் புரிந்து அவர் களது குடும்ப சுகதுக்கங்களில் தாமும் பங்குபற்றி அவர்களது தனிமையைப் போக்குகின்ற ஒரு அமைப்பாக இக் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைமை காணப்பட்டது. ஆனால் அம்முறையானது தற்பொழுது மலையேறி விட்டது – இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் நடத்திய முதியோர் தின விழா கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இங்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இன்று கூட்டுக் குடும்ப முறைமை இல்லாது போகின்றது. நிலைமை முற்றாக மாற்றமடைந்து ஒவ்வொரு குடும்பமும் தனிமைப்படுத்தப்பட்டு கணவன் மனைவிமார் இயந்திர வாழ்க்கைக்குள் சிக்குண்டு தமது சுக வாழ்க்கையை, சுற்றத்தாருடனான வாழ்க்கை முறைமையை இழந்து இயந்திரங்களாக சுழன்று கொண்டிருக்கின்றார்கள். பல வீடுகளில் எல்லா சுகபோகங்களும் இருக்கின்ற போதிலும் நிம்மதி இல்லை. தாய், தந்தையரைப் பராமரிக்க நேரமில்லை, குழந்தைகளைக் கவனிக்க நேரமில்லை. முதியோர்களைப் பராமரிக்க 'முதியோர் இல்லம்', குழந்தை களைப் பராமரிக்க 'குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள்' பெண்களைப் பராமரிக்க'மகளிர் இல்லங்கள், போரினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு 'அநாதைகள் ஆச்சிரமங்கள்' எனப் பல நிலையங்கள் துளிர்விட்டுள்ள காலம் இது.

முதியோரைப் பொறுத்த வரையில் பல காலங்கள் உழைத்து உழைத்து முதுமை நிலையை அடைந்து விட்ட இந்த முதியவர்களை தனிமை வாட்டுகின்றது. அந்தத் தனிமையைப் போக்கவல்ல உற்றார், உறவினர்கள், குழந்தைகள் ஆகியோர் தத்தமது வேலைகளில் மூழ்கி நிற்கின்றார்கள். முதியோர்களுக்காகத் தமது நேரங்களை ஒதுக்க முடியாது தத்தளிக்கின்றார்கள். இதனால் தானோ என்னவோ பலர் இன்று தமது தள்ளாத வயதில் முதியோர் இல்லங்களை நாடி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த வருடம் முதியோர் தின விழாவுக்கு நான் கைதடி முதியோர் இல்லத்திற்கு சென்றிருந்தேன். அவர்களுடன் அளவளாவியபோது அவர்களுள் பலர் கல்வியறிவு படைத்தவர்களாகவும், சிறந்த தொழில் முயற்சிகளில் இருந்து ஓய்வு பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். அவர்களுள் பலருக்கு எல்லா வசதிகளும் இருந்த போதும் தனிமை என்கின்ற துன்பச் சூழலில் இருந்து விடுபடுவதற்காக முதியோர் இல்லங்களை நாடி வந்திருந்ததை அவதானித்தேன். காலத்திற்குக் காலம் முதியோர் இல்லங்களுக்கு வருகை தருகின்ற வைத்திய கலாநிதிகள் மற்றும், சமூக சேவை அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இவ் வயோதிபர்களின் உடற்சுகாதாரம், உளச்சுகாதாரம் ஆகியவற்றைப் பரிசீலனை செய்து அவர்களை சுகதேகிகளாக நடமாட வைத்திருப்பது மேலும் ஒரு சிறப்பம்சம் ஆகும்.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு முதியோரைப் பராமரிக்க வேண்டிய தேவைகள் பற்றி உணர்த்துவதற்காக க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் சோதனைகள் முடிவுற்றதும் முதியோர் இல்லங்களுக்கு ஒருநாளேனும் அழைத்துச் சென்று முதியோர்களின் இருப்பிடங்களைச் சுத்தம் செய்தல், படுக்கை விரிப்புக்களை மாற்றிப் புதியனவற்றைப் பாவிக்க வைத்தல், கட்டில்கள், மெத்தைகள், தலையணைகள் போன்றவற்றை ஒழுங்கமைத்தல், மேலும் முதியவர்களுக்கான உணவைத் தயாரித்தல் அத்துடன் நின்றுவிடாது அவர்களுடன் பகிர்ந்துண்ணுதல், பழங்கள், இனிப்புப் பண்டங்கள் போன்ற பொருள்களை அவர்களுக்கு கொண்டு சென்று வழங்குதல் ஆகிய செயற்பாடு கள்பாடசாலை மட்டங்களில் முன்னெடுக்கப்படுவதாக அறிகின்றேன். அதுமட்டுமல்லாது காரியாலயங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் இன்னோரன்ன தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்களும் இவ்வாறான செயற்பாடுகளில் பங்காளர்களாகத் தம்மை மாற்றிக் கொள்ளலாம்.

வழக்கமாக நான் எனது பிறந்த நாள் நெருங்கும் போது என்னால் முடிந்ததை குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களுக்கும் வயோதிபர் இல்லங்களுக்கும் வழங்குவது வழக்கம். தாய் தந்தையரின் இறந்த திதித் தினம் வரும் போதும் அவ்வாறே செய்வேன். விருந்துகளிலும், களியாட்டங்களிலும் பணத்தைச் செலவழிப்பதிலும் பார்க்க கவனிப்பாரற்றவர்கள் வாழ்வில் சற்று மகிழ்ச்சியை ஏற்படுத்த முன்வருவதை நான் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

அதனால்தான் போலும் இறைவன் என்னை என் முதுமையிலும் ஒரு நல்ல நிலையில் இதுவரையில் வைத்திருக்கின்றான் என்று நம்புகின்றேன். முதியவர்களை மிகச் சந்தோஷமானவர்களாக, மனமகிழ்வுடையவர்களாக அவர்களின் எஞ்சியுள்ள சொற்ப காலங்களை அவர்கள் சிறப்புடன் கழிக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும்– என்றார்.

(ற–10)

# 30 வயதின் முன் குழந்தை பிரசவித்தால் மார்பக புற்றுநோயிலிருந்து தப்பலாம்

## சிரேஷ்ட சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் ஜயந்த பலவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.7

30 வயதுக்கு முன்னர் திருமணம் செய்து கொண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மார்பகப் புற்றுநோய் ஆபத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று மஹரகம புற்றுநோய் நிறுவனத்தின் சிரேஷ்ட சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் ஜயந்த பலவர்தன தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள பெண்களிடையே அதிகளவில் காணப்படுவது மார்பகப் புற்றுநோயே என்பதால் அதைத் தவிர்த்துக் கொள்வது எவ்வாறு என்பது குறித்தும் மார்பகப் புற்றுநோய் மாதமான ஒக்ரோபர் மாதத்தை முன்னிட்டும் கடந்த 29 ஆம் திகதி அரச தகவல்கள் திணைக்களத்தில் இடம்பெற்றிருந்த ஊடகச் சந்திப்பொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்வியைத் தொடர்தல், வேலை வாய்ப்பைத் தேடிக் கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் யுவதிகள் தாமதமாகவே திருமணம் செய்து கொள்கின்றனர். ஆயினும் விரைவில் திருமணம் செய்து கொண்டு 30 வயதுக்கு முன்னர் முதலாவது குழந்தையைப் பிரசவிக்க இயலுமானால், அது மார்பகப் புற்றுநோய் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

திருமணம் செய்து கொண்டாலும் கூட, குழந்தைகள் இல்லாத பெண்களுக்கும் கூட ஹோர்மோன்களின் செயற்பாடு காரணமாக மார்பகப் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து அதிகமாகின்றது. 11 வயதளவில் மாதவிடாய் ஆரம்பமாகி 55 வயதுக்குப் பின்னரும் கூட மாதவிடாய் நின்று போகாத பெண்களும் இந்த ஆபத்துக்கு முகம் கொடுக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உடற்பருமன், கொழுப்பு அதிகமுள்ள உணவுகளை உண்ணல், மதுபானப் பாவனை, கதிர் வீச்சுக்களுக்கு உள்ளாதல், மனக் கவலை, புகைப்பிடித்தலுக்கு அடிமையாகிவிடுவது என்பனவும் மார்பகப் புற்றுநோய் ஆபத்தை அதிகரிக்கின்றது என்று அவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாகத் தேசிய புற்றுநோய் ஒழிப்புச் செயற்றிட்டத்தின் பணிப்பாளரான வைத்தியர் திருமதி இசானி பெர்னாண்டோ தெரிவித்ததாவது:–

இது முதியோர்களின் சனத்தொகை அதிகரிப்பதன் காரணமாக ஏற்படும் நோயொன்றாகும். இந்த நாட்டுப் பெண்களிடையே காணப்படும் அனைத்து விதமான புற்று நோய்களுக்கிடையில் கால் பங்குக்கு மேற்பட்டதாக மார்பகப் புற்றுநோயே காணப்படுகிறது. அனைத்துப் புற்றுநோய்களிலும் 1/3 ஐத் தவிர்த்துக்கொள்ள முடியும். முன்னதாகவே இனங்கண்டு கொண்டால் மேலும் 1/3 ஐக் குணப்படுத்திக்கொள்ள முடியும். முன்னதாகவே இனங்கண்டு கொள்வதால் குணப்படுத்திக் கொள்ளக் கூடிய நோய்வகைகளில் ஒன்றாகவே மார்பகப்புற்று நோய் உள்ளது.

பெண்கள், ஆண்களென இரு சாராருக்கும் மார்பகப்புற்று நோய் ஏற்படலாம். பெண்களில் 97.6 வீதத்தினருக்கும், ஆண்களில் 2 வீதமானோருக்கும் மார்பகப்புற்று நோய் ஏற்படலாம்.

இலங்கையில் கொழும்பு, கண்டி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் மார்பகப்புற்று நோய் அதிகளவில் காணப்படுகிறது. சனத்தொகை அதிகரிப்புபோன்றே சமூக நிலைப்பாடு உயர்மட்டத்தில் நிலவுவது அதற்குக் காரணமாகிவிடக் கூடும்.

சமூக நிலைப்பாட்டில் உயர்மட்டத்தில் இருப்பவர்க ளுக்கு பெரும்பாலும் மார்பகப் புற்று நோய்த் தாக்கம் அதிக முள்ளது. பெண்களில் 1/10 பங்கி னருக்கு ஏதோ ஒரு விதத்திலான புற்றுநோய் ஆபத்தொன்று காணப் படுவதோடு பெண்களுள் ஒவ் வொரு 1/40 பங்கு பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் ஆபத்து உள்ளது.

மார்பகப்புற்று நோய்க்கு சிகிச்சைகளை வழங்கும் 9 சிகிச்சை மையங்கள் நாடு முழுவதிலும் உள்ளன. முக்கியமாக பெண்கள் தமது மார்பகங்களை சுயமாகவே பரிசோதித்துக் கொள்வது குறித்து அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும். வித்தியாசமான நிலையொன்றை இனங்கண்டு கொண்டால் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.– என்றார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமான மருத்துவ நிபுணர் பாலித மஹிபால இங்கு கருத்துத் தெரிவித்தபோது:–

ஆண்டுதோறும் உலகில் 1.8 மில்லியன் மார்பகப் புற்று நோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர். அவர்களுள் 5 லட்சத்து 8 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். இலங்கையில் ஆண்டொன்றில் 2 ஆயிரத்து 500 பேர் வரையில் இனங்காணப்படுகின்றனர். 800 உயிரிழப்புகள் வரையில் பதிவாகிறது. முன்னதாகவே இனங்கண்டு சிகிச்சைகளை மேற்கொள்வதன் மூலம் இதனால் ஏற்படும் மரணங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும். – என்றார்.

சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய பிரதியமைச்சரான பைஸல் காசீம், சத்திர சிகிச்சை நிபுணர் கனிஷ்கடி சில்வா, வைத்தியர் சுராஜ் பெரேரா ஆகியோரும் இதன்போது கருத்துக்களை வழங்கியிருந்தனர்.

(ற–22)

# யானைகளின் தாக்குதலை போரதீவுப்பற்றில் கட்டுப்படுத்த நடவடிக்கை



மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேச மக்கள் யானைகளால் தாக்கப்படும் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது. போரதீவுப்பற்று பிரதேசசபையின் மண்டபத்தில் நடைபெற்ற விசேட உயர் கூட்டத்திலேயே இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டது.

போரதீவுப்பற்று பிரதேசத்தில் தொடரும் யானைகளின் தாக்கு தலை கட்டுப்படுத்துமாறு கோரி குறித்த பிரதேச மக்கள் நேற்றுக் காலை பிரதேசசெயலகம் மற்றும் மண்டூர் – மட்டக்களப்பு பிரதான வீதியை மறித்து போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டமானது நேற்று மாலை வரை தொடர்ந்த நிலையில் இது தொடர் பில் ஆராயும் கூட்டம் மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் ஞானசிறி நேசன், கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான மா.நடராஜா, இரா.துரைரெட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது வனஜீவராசிகள் திணைக்களத்துடன் படையினரும் இணைந்து கிராமங்களுக்குள் நுழைந்துள்ள யானைகளை துரத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் யானைகளின் தாக்குதலுக்குள்ளாகும் கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் கிராமங்களுக்குள் தாக்குதல்களை நடத்தும் யானைகளை மயக்க ஊசியை செலுத்தி ஹபரணையில் உள்ள யானைகள் சரணாலயத்துக்குக் கொண்டு செல்வதற்காக அனுராத புரத்தில் உள்ள வனஜீவராசிகள் திணைக்கள ஊழியர்களை வரவழைப்பது எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

யானைகளின்தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கும் வகையில் அவை மறைந்திருக்கும் பற்றைக்காடுகளை துப்புரவுசெய்யும் நடவடிக்கையை முன்னெடுக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் மாவட்ட அரச அதிபர் தெரிவித்ததையடுத்து பொது மக்களின் மறியல் போராட்டம் முடிவுக்கு வந்தது.

கடந்த ஒரு மாத காலத்தில் போரதீவுப்பற்று பிரதேசத்தில் யானைகளின் தாக்குதல்கள் காரணமாக ஐந்து பேர் உயிரிழந்திருந்தனர்.

(ற–10)

### "மாசறு" குறுந்திரைப்பட வெளியீட்டு விழா

உதயரூபனின் 'மாசறு' குறுந்திரைப்பட வெளியீட்டுவிழா இன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பெண் அறிமுக இயக்குநர் உ. சோபிகாவின் இயக்கத்தில் முரளியின் இசையில் உருவாக்கப்பட்ட 'மாசறு' குறுந்திரைப்பட வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். செல்வா திரையரங்கில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(ற–ரி6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த இழைத்த தவறுகளே அழுத்தத்துக்குக் காரணம்

## சாடுகின்றார் அனுரகுமார திசாநாயக



கொழும்பு, ஒக்.7
தமிழ் மக்களுக்கான அங்கீகாரத்தை அன்றே மகிந்த ராஜபக்ச வழங்கியிருந்தால் இன்று எமக்கு எதிரான அழுத்தங்கள் வந்திருக்காது. அன்று மகிந்த செய்த தவறுக்கு இன்று அனைவரும் விளைவை அனுபவிக்கவேண்டியுள்ளது. – இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக தெரிவித்தார்.

வடக்கில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும். இனியும் காலம் கடத்துவது பிரச்சினைகளை வளர்க்கும் செயற்பாடாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் உண்மைகளை கண்டறிய வேண்டும் எனவும், பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் எனவும் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் சுட்டிக்காட்டி வருகின்ற நிலையில் தமது கட்சியின் நிலைப்பாடு குறித்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கையில் நடைபெற்ற போர் நாட்டைப் பாதுகாக்கும் நல்லதொரு விடயமாக இருந்தாலும் போரின் போது மனித உரிமை மீறல்கள் மற்றும் இராணுவ குற்றங்களில் ஈடுபட்டிருந்தால் அது போர் தர்மத்துக்கு முரணான விடயமாகும். அதேபோல் இந்த நாட்டில் பொது மக்கள் அமைதியாக வாழவும், நாட்டின் சூழல் அமைதியாக இருக்கவுமே பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டதே தவிர, தனிப்பட்டஎவரையும் மகிழ்ச்சிப்படுத்தவல்ல. எனினும் இலங்கையில் போர் முடிவடைந்த பின்னரே அதிகளவான அழுத்தங்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக போரின்போது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆராயவேண்டும் என்ற பலமான அழுத்தம் சர்வதேச தரப்பினால் முன்வைக்கப்பட்டது. இன்றும் அது தொடர்ந்து கொண்டு உள்ளது.

போர் முடிவடைந்த ஒரு நாட்டின் மீது இவ்வாறான அழுத்தங்கள் கொடுக்கப்படுவது யதார்த்தமான ஒன்றாகும். இவ்வாறான செயற்பாடுகளைக் கையாள்வது இலங்கைக்கு மட்டுமல்ல. இதற்கு முன்னரும் பல நாடுகளுக்கு எதிராக மனித உரிமை அமைப்புகள் இவ்வாறான குற்றசாட்டுகளை முன்வைத்துள்ளன. அவற்றுக்கு எதிரான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த விடயத்தில் நாம் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

எனினும் இவ்வாறு முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை நிவர்த்தி செய்வது அரசின் முக்கிய கடமையாகும். எமது இராணுவத்தின் மீது தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் போது ஏதேனும் ஒரு வகையில் அரசு அந்த குற்றச்சாட்டுகளை நிவர்த்திசெய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதேபோல் குற்றங்கள் நடந்திருப்பின் அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். இந்த இரண்டும்இல்லாது மறுப்புத்தெரிவிப்பதால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை.

ஆனால் கடந்த காலங்களில் மகிந்த தரப்பினர் இந்தச் செயற்பாட்டையே மேற்கொண்டனர். சர்வதேச தலையீடு வேண்டாம் என வலியுறுத்திய அதேவேளை, உள்ளக பொறிமுறைகளை முன்னெடுக்காது பிரச்சினைகளை வளர்த்தனரே தவிர எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிக்கவில்லை.

அதேபோல் போரின் பின்னர் வடக்கு மக்களின் நிலைமைகளை கவனத்தில் கொள்ளவும் இல்லை. இன்றும் வடக்கு மக்களைப் பயங்கரவாதிகள் என்ற போர்வையிலேயே மகிந்த தரப்பு பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அவ்வாறு இருக்கையில் எவ்வாறு நாட்டில் நல்லிணக்கம் ஏற்படும். போர் முடிவடைந்தவுடன் நாட்டில் நல்லதொரு அரசியல் தீர்வைப்பெறக் கூடிய வாய்ப்பும் நாட்டில் நல்லிணக்க முறைமையில் ஆட்சியைக் கொண்டுசெல்லவும் நல்லதொரு வாய்ப்பு இருந்தும் மகிந்த தரப்பினர் அந்த சந்தர்ப்பத்தைத் தவறவிட்டனர். மாறாக இனரீதியிலான அரசியல் நடவடிக்கைகளையே முன்னெடுத்தனர்.

போர் முடிவடைந்த பின்னர் மகிந்த தரப்பு ஆட்சி செய்த ஐந்து ஆண்டுகளிலும் போர் வெற்றி, புலிகளின் பயங்கரவாதம், புலம்பெயர் தமிழ் பயங்கரவாதிகள் தொடர்பில் மட்டுமே பேசி பரப்புரை செய்தனரே தவிர, நாட்டில் மூவின மக்களும் ஒன்றாக வாழக்கூடிய சூழல் தொடர்பில் சிந்திக்கவில்லை. ஆகவே மகிந்த தரப்பினரே நாட்டில் மிகப்பெரிய தவறை இழைத்தனர். அதற்கான விளைவுகளை இன்று நாம் அனுபவிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்போது நாட்டில் சரியான வகையில் சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்ட வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அதேபோல் வடக்கில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும். தொடர்ந்தும் சர்வதேச விசாரணைகள், ஆக்கிரமிப்புகள் என்ற கதைகளைக் கூறி காலத்தைக் கடத்துவது அர்த்தமற்ற செயற்பாடாகும் – என்றார். (ற)

# மகிந்த அரசின் நட்டங்களை சரி செய்கின்றது புதிய அரசு

## அமைச்சர் சம்பிக்க கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.7
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களால் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது. அதனைச் சீர்செய்து நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்லும் முயற்சியை தற்போதைய அரசு மேற்கொள்கின்றது. – இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு கொழும்பு–மாளி காவத்தையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் மிதக்கும் சந்தை, சுதந்திர சதுக்க கட்டடத்தொகுதி மற்றும் அங்கு அமைக்கப்பட்ட மீன் தொட்டி போன்றவைக்கு பலகோடி ரூபாவைக் கடந்த அரசு செலவிட்டுள்ளது என்று தெரிவித்த அமைச்சர், இதனால் பணம் செலவழிந்து நட்டம் ஏற்பட்டது மாத்திரமே எஞ்சியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் தற்போதைய அரசு இதனைச் சீர்செய்து, இலங்கையை தொழிநுட்ப கேந்திர வலையமாக மாற்றுவதற்கு முயற்சித்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# தோற்கடிக்கப்பட்டிருக்காவிடில் ஜனாதிபதி பிரபாகரன் ஐ.நாவில்

## இப்படிக் கூறுகின்றார் டலஸ் அழகபெரும



கொழும்பு, ஒக்.7
இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டிருக்காவிடின், ஜனாதிபதி வேலுப்பிள்ளை பிரபாகரன் ஐ.நா சபையில் உரையாற்றியிருப்பார் என்று முன்னாள் அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

போரை வென்றதன் காரணமாகவே எம்மீது போர்க் குற்றமும் மனித உரிமை மீறல் குற்றமும் சுமத்தப்படுகின்றன. தோற்றிருந்தால், இவை எதுவும் இருக்காது. ஜனாதிபதி வேலுப்பிள்ளை பிரபாகரன் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றியிருப்பார்.

1776 ஆம் ஆண்டு அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வாஷிங்டன் பதவியேற்றத்தில் இருந்து கடந்த 239 வருடங்களில் அமெரிக்கா 22 பிரதான போர்களில் ஈடுபட்டுள்ளது. அப்படியானால், 10 வருடங்களுக்கு ஒரு முறை அமெரிக்கா போர் செய்துள்ளது. இவர்களே இலங்கையின் போர்க் குற்றங்கள் பற்றித் தேடுகின்றனர். மனித உரிமைகளைப் பற்றி இவர்களே தேடுகின்றனர்.

போரை வென்றதன் காரணமாகவே எம்மீது போர்க் குற்றமும் மனித உரிமை மீறல் குற்றமும் சுமத்தப்படுகின்றன. போரில் வென்றதன் காரணமாகவே எம்மை ஜெனிவாவுக்கு கொண்டு செல்கின்றனர். போரில் தோற்றிருந்தால் இவை எதுவும் இருக்காது. ஜனாதிபதி வேலுப்பிள்ளை பிரபாகரன் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றியிருப்பார். ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஈழம் என்ற பெயரில் 194ஆவது நாடு சேர்க்கப்பட்டிருக்கும். போரில் வென்றதால், எம்மீது போர்க் குற்றம் சுமத்தப்படுகிறது. – என்றார். (ற)

# ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஏமாற்றம்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவிப்பு

மன்னார், ஒக்.7
இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் சபையால் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானம், போரின் பேரவலத்தால் பாதிக்கப்பட்ட தமிழருக்கு சந்தேகங்களையும், ஏமாற்றத்தையும் தருகின்றன. இந்தப் பிரேரணை மீது ஒத்த கருத்தில்லாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களின் நிலைப்பாடும் எமக்கு வேதனையைத் தருகின்றது. – இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

தமிழ் மக்களின் எண்ணங்களையும், உணர்வுகளையும் பிரதி பலிக்கக்கூடிய நிலைப்பாட்டை ஒன்றுகூடி ஒருமித்து எடுத்த பின்னர் ஜெனிவா செல்லும் குழு கட்சியின் தலைமையால் தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும்.

தத்தமது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளும், இதர கட்சிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களும் ஒட்டு மொத்த தமிழினத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் வரலாற்று நிகழ்வொன்றில் தனித்தனியான பயணம் மேற்கொண்டமை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

கட்சிகளின் உறுப்பினர்களை கட்டுப்படுத்தும் தகைமை கட்சித் தலைவர்களிடமும், கூட்டமைப்பின் தலைமையிடமும் இல்லாத குறையை ஜெனிவா பயணத்தில் காணக்கூடியதாக இருந்தது.

இந்தப் பிரேரணை சம்பந்தமாக தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்லாது தமிழ் கட்சித் தலைமைகளிடமும் குழப்பமும், தெளிவின்மையும் இருக்கின்றதை நாம் மறுக்க முடியாது. எமது மக்களுக்கு தெளிவான ஒரு விளக்கத்தைக் கொடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் கூட்டமைப்புக்கு உண்டு.

ஜனநாயக ரீதியில் தேர்தல்கள் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட கட்சியொன்று அந்த மக்களுக்கு பதிலளிக்கும் கடமைப்பாட்டையும் கொண்டுள்ளதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்று பல விமர்சனங்கள் எழுகின்றன. இவை தீர்க்கப்பட வேண்டும். ஜெனிவா செல்லும் முன்னர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டப்பட்டிருக்க வேண்டும்.


நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஏகோபித்த முடிவுகள் எட்டப்பட்டிருக்க வேண்டும். கூட்டமைப்பின் அங்கத்துவக்கட்சிகளின் தலைவர்கள் கூடி பேசியிருக்க வேண்டும். கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு என்றால் யாருடைய தலைமையில் சென்றார்கள்?. எல்லாம் முடிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது.

அடுத்து என்ன செய்வது என்பதையாவது ஒன்றாக கூடி பேச முடியுமா?. ஜெனிவாவிலிருந்து எமது தலைவர்கள், பிரதிநிதிகள் நாடு திரும்பியவுடன் அடுத்த கட்ட நிலைப்பாட்டையாவது எமது மக்களுக்கு எடுத்துசொல்லவேண்டும். கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஒன்றாக, ஒருமித்து கட்சியின் நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். எமது மக்கள் கூட்டமைப்பின் தலைவர்களிடம் இதனையே எதிர்பார்க்கிறார்கள். எதுஎப்படிஇருப்பினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் துரோகம் செய்யாது என்பது புரிந்துகொள்ளக் கூடியதாக இருப்பினும் விமர்சனங்களை ஏற்றுக்கொள்வதும், பரிகாரம் காண்பதும் தலைமையின் பொறுப்பாகும்.– என் றார். (ற–56)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

cmyk



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** செயல்களில் நிதானம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி சுமாராக இருக்கும். செலவில் சிக்கனம் நல்லது. குடும்ப ஒற்றுமையில் சிறு பிரச்னை வரலாம்; கவனம் தேவை. பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டாம்.

**இடபம்:** இன்று நடக்கும் நன்மைகளை எண்ணி மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். வெகு நாள் சந்திக்க நினைத்த நண்பரை சந்திப்பீர்கள்.

**மிதுனம்:** இரக்க சிந்தனை இல்லாதவர்களைச் சந்திக்க வேண்டி வரலாம். முன் எச்சரிக்கை தேவை. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**கடகம்:** தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாகும். பெண்களுக்கு பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். பணியாளர்கள் பாராட்டுப் பெறுவர்.

**சிங்கம்:** உறவினர்களுக்கு இயன்ற உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் சிறு தொந்தரவு வரலாம். சேமிப்புப் பணத்தை அத்தியாவசிய செலவுக்கு எடுக்க வேண்டி வரும். மாணவர்கள் பாதுகாப்புக் குறைவான இடங்களுக்கு செல்ல வேண்டாம்.

**கன்னி:** பிறருக்கு உதவுகிற சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த குளறுபடி சரியாகும். தாராள பணவரவு கிடைக்கும். நண்பர்களுடன் சுபநிகழ்ச்சி அல்லது விருந்தில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** உயர்ந்த குணம் உள்ளவரின் நட்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படும். ஆதாய பணவரவு பெறுவீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**விருச்சிகம்:** செயலில் தடுமாற்றம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவு இலாபம் கிடைக்கும். உறவினர் வகையில் அதிக பணம் செலவு செய்ய நேரிடலாம். வாகனத்தில் மித வேகம் பயணத்தைச் சுகமாக்கும்.

**தனுசு:** நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்க புது வழியைக் கடைபிடிப்பீர்கள். கூடுதல் செலவு ஏற்படும். உடல்நலத்தில் சிறு பிரச்சினை வரலாம்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பர்களின் நற்செயலை பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். மேலதிக பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் வெகுமதி பெறுவர்.

**கும்பம்:** முன்னர் செய்த உதவிக்கான நற்பலன் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். எதிர்காலத் தேவைக்குப் பணம் சேமிப்பீர்கள். தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.

**மீனம்:** திட்டமிட்ட பணியில் மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். வீடு மற்றும் வாகன பாதுகாப்பில் தகுந்த கவனம் வேண்டும்.

## ஒன்று கூடிய திரையுலக இயக்குநர்கள்

தமிழ் சினிமாவில் தற்போது தான் இரசிகர்கள் இயக்குநர்களுக்காக படம் பார்க்க ஆரம்பித்து உள்ளனர். அந்த வகையில் வெற்றிமாறன் இயக்கிய விசாரணை படம் வெனிஸ் திரைப்பட விழாவில் விருதுகளைப் பெற்றுள்ளது. இதைக் கௌரவிக்கும் பொருட்டு சமீபத்தில் இப்படத்துக்கான நிகழ்ச்சி ஒன்றில் மணிரத்னம், ஷங்கர், ராம், மிஷ்கின், பாலா என ஒட்டுமொத்தத் திரையுலக இயக்குநர்களும் கலந்து கொண்டனர். இதில் பேசிய மிஷ்கின், நீ கலையின் உச்சியைத் தொட்டுவிட்டாய், உன் வாழ்வின் அர்த்தத்தை முழுமையாக்கும் படமொன்றைப் படைத்து விட்டாய், பாலுமகேந்திரா மட்டும் இருந்திருந்தால் உன்னைக் கட்டித்தழுவி நெற்றியில் முத்தமிட்டு சந்தோஷத்தில் மூழ்கியிருப்பார் என மிக நெகிழ்ச்சியாக தெரிவித்துள்ளார்.

நடிகர் தனுஷ் மற்றும் இயக்குநர் வெற்றிமாறன் தயாரிப்பில் உருவாகியுள்ள விசாரணை திரைப்படத்தை வெற்றிமாறன் இயக்கியுள்ளார். காவல்துறையின் விசாரணை முறை மற்றும் அதன் பின் உள்ள கொடூரத்தை காட்டும் படமாக விசாரணை உருவாகியுள்ளது. இந்தியாவில் இன்னமும் வெளியிடப்படாத விசாரணையில், தினேஷ், ஆனந்த், அஜய் கோஷ், சமுத்திரக்கனி, முருகதாஸ், மிஷா கோஷல் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். முன்னதாக தனுஷ் - வெற்றிமாறன் கூட்டணி தயாரிப்பில் உருவான காக்கா முட்டை இரசிகர்கள் மத்தியில் பல எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளதனால் விசாரணை படமும் இரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர் பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பேஸ் புக்கில் பிடித்தவை...



ஒரு மழை நாளில் உன்னுடன் வந்தபோதுதான் தெரிந்தது உன்னுடைய சுயரூபம்.. கொய்யால புல்லா மேக்கப்..



கல்யாணம் செய்தால் பொறுப்பு வருமாம் இதையே நான் ஸ்கூல் போகும் போது செய்திருந்தால் இப்ப டாக்டராவோ அல்லது இஞ்சினியராவோ இருந்திருப்பன். தாமதமாவே யோசிக்க வைக்கிறிங்களேடா...








இன்று வாங்கி நாளை விற்றால் பல இலட்சம் இலாபம் பெறலாம். வீடு, மனை விற்பவர்கள் சொல்கின்றனர். அடேய் இதுக்கு நீங்களே வைத்திருந்து நாளை வித்துவிடலாமே ?



யார் இடத்தில வந்து யார் வீடு கட்டுறது வெளியே வாங்கடா.



வாடா தம்பி இன்டைக்கு தோட்டத்த ஒரு கை பாத்திடலாம்

உலக மகா சோம்போறியக் கூட வேலை வாங்கலாம்... ஆனால் இந்த தொடுபேசி (ஸ்மாட் போன்) பாவிக்கிறவங்களிடம் ஒரு வேலையும் வாங்கமுடியாது..



புலி படம் ஓடலையாம்..!! புலி படம் பார்க்க தியேட்டருக்கு போனவங்க தான் ஓடுறாங்களாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி நடவடிக்கை இடம் பெறமாட்டாது

மக்கள் வங்கியின் பிராந்தியங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவை முன்னிட்டு யாழ். பிராந்திய மக்கள் வங்கிகளின் வங்கி நடவடிக்கைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறமாட்டாது என யாழ். பிராந்திய முகாமையாளர் அறிவித் துள்ளார். எனினும் தன்னியக்க இயந்திரத்துடனான பணப் பரிமாற்றம் மேற் கொள்ளப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ஐ–422)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க ஞாபகார்த்த
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
நேற்று நடைபெற்ற நிகழ்வில்
"பிரதீபா பிரபா"
விருதினைப் பெற்றுக்கொண்ட எமது
வித்தியாலய ஆசிரியை
**திருமதி கமலாதேவி ஞானச்சந்திரன்**
அவர்களைப் பாராட்டுவதோடு மேலும்
பல சிறப்புக்களைப் பெற
வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை சமூகம்.
யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய
மகாவித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





திருமதி
**மீனலோஜினி இதயசிவதாஸ்**

சங்கரராஜசர்மா
**இராஜராஜேஸ்வரன்**

எமது வித்தியாலய முதல்வர் திருமதி . மீனலோஜினி இதயசிவதாஸ் அவர்கள் பல்துறை ஆற்றல், ஆளுமை மிக்க முதல்வருக்கான "பிரதீபா பிரபா" விருதினை இவ்வாண்டு பெற்றுக் கொண்டார்.
எமது வித்தியாலய ஆசிரியர் சங்கரராஜசர்மா இராஜராஜேஸ்வரன் அவர்கள் நல்லாசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருதினை இவ்வாண்டு பெற்றுக் கொண்டார்.
இவர்களுக்கான விருதினை 06.10.2015 இல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதி வழங்கிக் கௌரவித்தார்.
இவர்கள் இருவரது சேவையும் மென் மேலும் வளர்ந்து சுடர்விட்டுப் பிரகாசிக்க மனமார வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
கிளி/ உருத்திரபுரம் ம.வி, உருத்திரபுரம், கிளிநொச்சி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்







தம்பிராசா ஜெயக்குமார் | செல்வி திருமகள் தேவராஜா | திருமதி திருவாணி பாலகுமார்

06.10.2015 அன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப அரங்கில் "குரு பிரதீபா பிரபா" விருது பெற்ற எமது கல்லூரி ஆசிரியர்களான **தம்பிராசா ஜெயக்குமார், செல்வி திருமகள் தேவராஜா, திருமதி திருவாணி** பாலகுமார் இவர் களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

புனித திரேசாவின் பூங்காவின் எதிர்கால விருட்சங்களுக்காய்
ஆசிரியத்துவம் பேணி நல்லறம் ஊட்டி அறியாமை இருள் நீக்கி
அகல் தீபங்களாகிய குரு பிரதீபா பிரபா விருதின் வெற்றி நாயகர்களே!
இன்றுபோல் என்றும் உயர்ந்து நீர் பணிசெய்ய
உளமார வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம், (63672) (13.15.17)
கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி கிளிநொச்சி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க
ஞாபகார்த்த சர்வதேச
மாநாட்டு மண்டபத்தில்
நேற்று (06.10.2015)
நடைபெற்ற
நல் அதிபர்,
ஆசிரியர்களுக்கான
"குரு பிரதீபா பிரபா"
விருதினைப் பெற்ற எமது வித்தியாலய அதிபர்
**இராசரத்தினம் ரவீந்திரன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்.

---

"Promote the Rule of Law in Sri Lanka"

**மகளிர் அபிவிருத்தி நிலையம் வன்முறைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு இலவச சட்ட சேவைகளை நடத்தி வருகிறது**

தொடர்புகளுக்கு:
இலவச சட்ட சேவை பிரிவு
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல.07, இரட்ணம் லேன்,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144
மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா,மட்டக்களப்பு மாவட்டங்களில்
(59259) (45.3.7)

## தேவை

யாழ்குடாநாட்டில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் வேண்டப்படுக்கின்றார்கள்

01. கனரக இலகு ரக வாகன சாரதிகள்
02. சந்தைப்படுத்தல் பணியாளர்கள்
03. உற்பத்திப் பணியாளர்கள் (கோப்பாய் பிரதேசசபைக்குபட்ட இடத்தில் வசிப்பவர்கள்)
04. காரியாலய கணினி பதிவாளர் - பெண், அடிப்படை கணினி அறிவுமட்டும் போதுமானது

விண்ணப்பங்கள் யாவும் 25.10.2015 இற்கு முன்னர் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தொடர்பு:- விளம்பர இல- 5078
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

### நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உப அலுவலகம் ஆதனப் பெயர்மாற்றம் 437, அரியாலைவீதி, வட்டாரம் - 12

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் -12 அரியாலை வீதியிலுள்ள இல. 437 எனும் ஆதனம் எமது பதிவேட்டில் **சொந்தக்காரர் உ.கோ. குமாரசாமி சண்முகதாஸ்** எனும் பெயரில் உள்ளது.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி கண்டுக்குளி கோவிற்பற்று அரியாலை இறை பிரதேச செயலர் பிரிவு நல்லூர், கிராம சேவகர் பிரிவு J/90 பள்ளிக்கூடத்தடி நிலப்பரப்பு 14 குளி 04.46 இது பிரசித்த நொத்தாரிசு சுதா கஜேந்திரகுமார் அவர்களால் வரையப்பட்ட 629/2013.08.29 ஆம் இலக்க அறுதி (வெளிப்படுத்தல்) உறுதி மூலம் சண்முகதாஸ் சிவதர்சனும் சண்முகதாஸ் பிரயதர்சனும் ஆகியோரிடமிருந்து அ.கிருபாகரனும் பெண் சிவமலரும் என்பவர்களை வந்தடைந்தது.

இவ் உறுதியில் சண்முகதாஸ் சிவதர்சன், சண்முகதாஸ் பிரயதர்சன் ஆகியோர் தங்கள் பிதா காலஞ்சென்ற குமாரசாமி சண்முகதாஸ் என்பவரின் பிதா காலஞ்சென்ற முத்துச்சாமி குமாரசாமியின் பெயரில் நிறைவேறிய அறுதி உறுதியின் பிரகாரம் தமது பிதாவழி முதுசமாக இருந்து தம்மை வந்தடைந்ததாக குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பான உறுதிகள் நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக தொலைந்து விட்டதாகவும் வெளிப் படுத்தியுள்ளனர்.

நல்லூர் பிரதேச சபையின் ஆதனப்பதிவேட்டில் குறித்த ஆதனத்தினை தனது பெயரிற் மாற்றம் செய்து தருமாறு அ.கிருபாகரனும் பெண்சிவமலரும் என்போர் விண்ணப்பித் துள்ளனர்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள் களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அ.கிருபாகரனும் பெண்சிவமலரும் என்பவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2015.10.07

திருமதி தி.அன்னலிங்கம்
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

(சி.19198)(13.15)

## தேவை

### யாழ் நகரில் இயங்கும் தனியார் வைத்தியசாலைக்கு பின்வரும் தகைமைக்கு ஆள்கள் தேவை

01. **Nurses (தாதி)**: Medical ward , Surgical ward , Operation Theature Experiance உள்ளவர்கள் மட்டும் (பெண்கள்) விண்ணப்பிக்கவும்.
**விண்ணப்பத்தில்:** வேலை செய்த இடம்,காலம் விலாசம், தொ.பே. இலக்கம் குறிப்பிடவும்.
**வயதெல்லை :** 50 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.
**சம்பளம்:**-22,000/=-28,000/= வரை (அடிப்படை)
திறமை, அனுபவத்திற்கேற்ப சம்பள உயர்வு வழங்கப்படும்.
02. **வைத்தியசாலை நிர்வாகி** (AO)! தனியார் துறை,அரசாங்கம் என்பவற்றில் குறிப்பிட்ட பதவிகளில் இருந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
(தமிழ், ஆங்கிலமொழி பேச,எழுத தெரிந்திருத்தல் வேண்டும்)
03. **காசாளர்** (பெண்)
[illegible]

விளம்பர இல : 5077 மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

---

தொடர்புக்கு–
advt@uthayan.com
0215671111

## மோட்டார் வாகன விற்பனை

Hero Honda CD Dawn, Hero Honda SS, Super Cup C50
மோட்டார் வாகனம் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு : 021 22 16061**

## விதை நெல் விற்பனைக்கு

விவசாயப் பகுதியினரால் சுத்திகரிக்கப்பட்டு சிபாரிசு செய்து அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்ட B.G. 406 ரக விதை நெல் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 659 2044
(60620)(10.15.17)

## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

**பதவி வெற்றிடங்கள்**
கனிஷ்ட பாதுகாப்பு
உத்தியோகத்தர்கள்
பெண்கள் - ஆண்கள்
கைதடி, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
**நேர்முகப் பரீட்சை:**
08/10 வியாழன், 09/10 வெள்ளி,
10/10 சனிக்கிழமைகள்
**ஆவணங்கள்:**
கிராம அதிகாரியின் நற்சான்று,
பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்,
க.பொ.த (சா/த), தே.அ.அ.
201/7,நாவலர் வீதி, யாழ்ப்பாணம். **பணிப்பாளர்.**
(C/19196) (10.15)

## காணி விற்பனைக்கு

கைதடி, நாவற்குழி, கோவிலாக் கண்டிப் பகுதியில் போக்குவரத்து வசதியுடன் கூடிய இடத்தில் கடற்கரையை அண்மித்ததாக 10 ஏக்கர் தென்னந்தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**077 6090931**
(65143) (10.15.17)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கடல் உணவு ஏற்றுமதி முன்னணி நிறுவனமொன்றுக்கு வாகனத்தில் நன்கு அனுபவமுள்ள (AD) சாரதி அனுமதிப்பத்திரமுள்ள வாகனப் பராமரிப்பாளர் உடன் தேவை. சம் பளம் நேரில் பேசித் தீர்க்கப் படும்.
(65164) (11.15)
தொடர்பு கொள்ள : **021 3003590**



* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 654 4731 (தர்ஷினி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகமும் அரங்கியலும் செய்முறை வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக், 07
க.பொ.த. உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் பரீட்சைக் குத் தோற்றி, விரைவில் அதன் செய்முறைப் பரீட்சைக்கு தோற்ற வுள்ள மாணவர்களுக்கான இரு நாள் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன. திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளதுடன், துறைசார்ந்த, தகுதிவாய்ந்த, வளவாளர்கள் இதனை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இரு நாள் பயிற்சி வகுப்புகளிலும் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பெயர் விவரங்களை 238, பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளதிருமறைக்கலாமன்ற அலுவலகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பதிவு செய்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

# சிறந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்க ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

### பீடாதிபதி சிதம்பரநாதன் தெரிவிப்பு




வவுனியா,ஒக்.07
ஆசிரியர்கள் சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கவேண்டும்.மாணவர்கள் மீது பாரபட்சம் காட்டாது பணிவுடனும் மதிப்புடனும் நடந்து கொள்ளவேண்டும். வேலை கிடைக்கவில்லையென்று போராட்டம் நடத்துகின்றனர், வேலை கிடைத்ததும் வேலையைச் செய்யப் பின் நிற்கின்றனர். இவ்வாறு தெரிவித்தார் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி கு. சிதம்பரநாதன்.
வவுனியாவில் சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது. இதன் போது தலைமையுரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கும் போது:
ஆசிரியர்கள் தம்மை சுயமதிப்பீடு செய்ய வேண்டும். செய்த விடயங்கள், செய்யப்போகும்விடயங்கள்என்பன தெளிவாக ஆசிரியர்களுக்குத் தெரிய வேண்டும். சில ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் புரியாமல் பாடம் நடத்துகின்றனர். மாணவர்கள் திருப்பிக் கேட்டதும் புரியாமல் பதில் சொல்கின்றனர். குறைந்த அறிவை மட்டும் வைத்து போதிக்காமல் நிறையத்தெரிந்து கொள்ள ஆசிரியர்கள் முன்வரவேண்டும். பின்தள்ளப்பட்ட சமூகத்தின் மீது அக்கறை கொண்டு செயற்படப் பழகிக்கொள்ள வேண்டும். சில ஆசிரியர்கள் சம்பளம் பெறுவது பாடசாலையில், பாடம் கற்பிப்பது தனியார் கல்வி நிறுவனங்களில். படிப்பை வைத்துச் சில ஆசிரியர்கள் வியாபாரத்தை மேற்கொள்வது கவலைக்குரியது. மாணவர்களை விளையாட்டுக்கு அழைத்துக் கொண்டு செல்லுங்கள் என்று சொன்னால் நேரம் இல்லை என்று கூறிவிடுவார்கள். பார்த்தால் தனியார் கல்வி நிறுவனங்களில் பாடம் கற்பித்துக் கொண்டிருப்பார்கள். ஆசிரியர்களினால் மட்டுமே சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். கோபம், பொறாமை, எரிச்சல், வஞ்சகம், தீய எண்ணங்கள் என்பன ஆசிரியர்களிடம் இருக்கக் கூடாது. மாணவர்கள் மீது அக்கறை கொண்டு செயற்படவேண்டும். தற்போது பத்திரிகையைப் பார்த்தால் மாணவர்கள் மீது ஆசிரியர்கள் தாக்குதல், துஷ்பிரயோகம் என்ற செய்திகள் தான் வருகின்றன. இந்நிலை மாற வேண்டும். நேரத்தைக் கழிக்க பாடசாலைக்கு வரக்கூடாது எனத் தெரிவித்தார். நிகழ்வில் உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், பயிலுநர் ஆசிரியர்கள், எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



# வீதிப் போக்குவரத்துக் கருத்தரங்கும் செய்முறைப் பயிற்சிக் கண்காட்சியும்

மாங்குளம்,ஒக்.07
வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறையைக்கடைப்பிடிப்பது தொடர்பாக மற்றும் விபத்துக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல் தொடர்பான கருத்தரங்கும், செயன்முறைப் பயிற்சிக்கண்காட்சியும் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.
பருத்தித்துறைப் பொலிஸாருடன் வடமராட்சி அரிமா கழகத்தினரும் இணைந்து விழிப்புணர்வுக் கருத்தரங்கையும் நடத்தவுள்ளனர். இந்தக் கருத்தரங்கில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறைச் செயன்முறைக் கண்காட்சி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் –இடம் பெறவுள்ளதாக வடமராட்சி லயன்ஸ் கழக செயலாளர் லயன் எஸ்.சிவரஞ்சன் தெரிவித்துள்ளார். (ஐ-422)

# போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும்

### கிளிநொச்சியில் போக்கு வரத்துத் துறை அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா தெரிவிப்பு

கிளிநொச்சி,ஒக்.07
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச,தனியார் போக்குவரத்துச் சேவையில் உள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படவுள்ளதாகப் போக்கு வரத்துத்துறை அமைச்சர்நிமால்சிறிபாலடிசில்வா தெரிவித்துள்ளார்.கிளிநொச்சிமாவட்டத்துக்கு கடந்த திங்கட்கிழமை [illegible] [illegible] ளுக்கும் சென்றிருந்தார். இதன் போது கிளிநொச்சியில் அரச, தனியார் போக்குவரத்துச் சேவைகளில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களால் அமைச்சருக்கு எடுத்துக் கூறப்பட்டது. இதனை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள போக்கு வரத்துப் பிரச்சினைகள், அரச, தனியார் பஸ் சேவைகளுக்கிடையிலான நிலைகள் தொடர்பாக எமக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப்பிரச்சினைகிளிநொச்சிமாவட்டத்தில் மட்டுமன்றி இலங்கையில் ஏனைய மாவட்டங்களிலும் காணப்படுகின்றது. எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். அமைச்சருடன் வடக்குமாகாணபோக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன், மற்றும் அதிகாரிகள் ஆகியோர் இணைந்திருந்தனர். (ஐ-21)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஸ்ரீமதி
தபோநிதி கந்தசாமி
தோற்றம்
02.08.1939
மறைவு
18.09.2014
திதி: தசமி (07.10.2015)
நீங்கள் இந்த உலகை விட்டு நீங்கி
ஆண்டொன்று சென்றாலும்
எமை விட்டு நீங்காத
உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
துணைவர்
குடும்பத்தினர்.
இடைக்காடு அச்சுவேலி.

பாரினை விட்டகன்று பத்தாண்டுகள்

செல்வி மாதவராஜா
தனுஷா
(பழைய மாணவி - வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், இரண்டாம் வருட கலைப்பீடமாணவி - யாழ்.பல்கலைக்கழகம்)
எமது இதயம் நிறைந்த நாள்
22.08.1984
எம் உதிரம் உறைந்த நாள்
07.10.2005
கண்ணை இழந்திருந்தால் காலஞ்செய் விதியென்போம்
பொன்னை இழந்திருந்தால் போகட்டும் என்றிருப்போம்
உன்னை இழந்திருந்த உலகத்தில் வாழ்வதென்றால்
என்னென்று ஆகுமம்மா ? ஏனம்மா எமைப் பிரிந்தாய்?
பொன்னையா மாதவராஜா
"அண்ணாவி வளவு"
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.
மீளாத் துயருடன்
அப்பா, அம்மா, தம்பி.

18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் வேலுப்பிள்ளை நற்குணராசா

ஈரொன்பது ஆண்டுகள்
இருந்தோடி மறைந்திடினும்
இதயமதில் உங்கள்
நினைவுகளே....!
பொருளைத் தொடரும்
நிழலெனவே - உம்
அன்பின் வழி தொடரும்
நினைவுகள்
நித்தா ரெல்லாம் பரமகதி
அடைவாரெனில்
நீரும் எமக்கு பரமனல்லவோ! -
ஆதலால் நாமும்
வேண்டுகின்றோம்
உங்கள் அருளாசி தனையே!
மலர்வு
24.02.1929
உதிர்வு
26.09.1997
மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்
மாலை வடக்கு, புத்தூர் சந்தி,
கொடிகாமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.07

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர் தின நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை அதிபர் செல்வி சாந்தினி மாணிக்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் முகிழ்நிலை ஆசிரியர்களின் கலை ஆற்றுகைகளும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லத்துரை தவறஞ்சன்


மலர்வு 23.05.1969 — உதிர்வு 07.10.2014

ஓர் ஆண்டு ஓட மறைந்தாலும்
ஆறாது எம் துயர்
கூடப் பிறந்தவனே தம்பி
நாடித்துடிப்புள்ளவரை
உன் நினைவுகள் நிச்சயம்
ஆறு அக்காக்களுக்கும்
ஒரு அருமைத் தம்பி நீ
எங்கள் தவப்புதல்வனே
உனக்கு நிம்மதி வேண்டித்தான்
ஆண்டவன் தன்னுடன் இணைத்துக்
கொண்டார் போலும்
ஓம் சாந்தி!

அக்கா மனோரஞ்சினி
(கிளி) குடும்பம்.
சிறுவிளான்,
இளவாலை.

(65197)(14.15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 25.03.1947

மறைவு 08.09.2015

### அமரர் கிருஷ்ணர் சுப்பிரமணியம்

கடந்த 08.09.2015 சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் கிருஷ்ணர் சுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (08.10.2015) வியாழக்கிழமைமு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால். தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
உற்றார், உறவினர்,நண்பர்கள்,
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(65231)(12.15.17)

குடும்பத்தினர்.

## 34 ஆவது பிறந்தநாளும் நீங்காத நினைவில் ஆண்டுகள் ஆறும்





### இரவி பிரசாத்
(றாயு)

மண்ணில் 07.10.1981


விண்ணில் 19.09.2009

ஆண்டாறுகாலம் ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் மனம் நீ கடசி
- வந்த நேரம்
உறவுகள் சுற்றிவர இருக்கின்றோம்
- வருகிறாய்
புத்தாடையுடுத்து பிறந்தநாள்
- அன்றுதான்
திறக்கின்றோம் பெட்டியை நீ நிரந்தர
- உறக்கமாய்
அம்மா என்று அழைக்காயோ
- என ஒரு ஏக்கம் பெருமூச்சாய்
வந்த காற்று எம்மை நீ அணைப்பது போல
- விழிக்கின்றோம்
சுய நினைவில் வாடுகின்றோம்.

உன் பிரிவால் தவிக்கும்
அம்மா, அப்பா தங்கைமார்.

விலாசம்: இ.இரவி
புகையிரத வீதி, கொடிகாமம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06.09.1990

மறைவு 07.10.2014

### அமரர் டோமினிக் தனுசன்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
எங்கள் உயிரின் உயிராய் கலந்தவனே!
ஆண்டு ஒன்று சென்றாலும் துயரங்கள் நீங்கவில்லை
உன் அன்பான பேச்சும் உன் குறும்புத்தனமான
செயலும் என்றும் உன் நினைவுகளை
- தந்துகொண்டிருக்கின்றன.
காலத்தின் செயல்களால் கண்சிமிட்டும் நொடிக்குள்
- நீ எம்மைவிட்டு சென்றுவிட்டாய்
காலங்கள் கடந்துசென்றாலும் கடசிவரை உங்கள்
நினைவுகள் எம்மை விட்டு அகலா



அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (07.10.2015) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொழும்புத்துறை பரிசுத்த செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

27/1. A.V. றோட்.
கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 197 0261

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 01 ★ 08 ★ 1934

இறப்பு 07 ★ 10 ★ 1998

**அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை**
(ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர்)

அணையா விளக்காக வீற்றிருக்கும் அப்பாவே!
ஆண்டுகள் பதினேழு கடந்திடினும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
வையகத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து
வானுலகம் சென்றிட்ட உங்களின்
ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள் (லண்டன்)



## யாழ்.நகரில் பிரபல்யமான கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி
**Mobile Phone Repairing Course**

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்
- தனிப்பட்ட கவனிப்பு
- Smart Phone கள் உட்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்.
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக:

- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களும்

Oct-10ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 10,11,12,13 ஆகிய நான்கு தினங்களில்

Special Trainer
**Ganesh Sir**

| பாடநெறிக் கட்டணம் | பதிவுக் கட்டணம் |
|---|---|
| 10000 | 2500 |

வயதெல்லை இல்லை.
ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**BTEC** Hospital Road Vembadi Junction, Jaffna. 0777444225 0776131358




### வீதியில் உயிரினங்களை மோதிக் கொல்லும் வாகனச் சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை

*ஓமந்தைப் பொலிஸார் தெரிவிப்பு*

வவுனியா,ஓக்.7

ஓமந்தை ஏ–9 வீதியில் குறுக்காகக் கடக்கும் உயிரினங்களைக் கவனத்தில் எடுக்காது பயணிக்கும், சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிசார் தெரிவித்துள்ளனர். ஓமந்தை ஏ–9 வீதியில் வேகக்கட்டுப்பாட்டை மீறி வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளால், அடிக்கடி பாதையைக் கடக்கும் மாடுகள், நாய்கள், குரங்குகள் உட்பட பல்வேறு மிருகங்கள் அடித்துக் கொல்லப்படுகின்றன.. குறித்த சாரதிகள் உயரினங்களைக் காப்பாற்ற நினைக்காது தப்பித்துச் செல்கின்றனர். இதேவேளை உயிரினங்களின் இறப்பை அடுத்து அவை அப்புறப்படுத்தப்படாமல் மேலும் பல வாகனங்கள் அவற்றின் உடல்களை மோதுவதால் சிதைந்த துண்டுகள் வீதிகளில் கிடப்பது வேதனைக்குரிய விடயமே. இவ்வாறு மனிதாபிமானம் அற்ற முறையில் நடப்போரை சட்டத்தின் முன்நிறுத்தி தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஓமந்தை பகுதியில் உள்ள பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ–402)

### நூல் வெளியீட்டு விழா

சம்பூர்,ஓக்.7

வைத்திய கலாநிதி சம்பூர் அ. ஸதீஸ்குமார் எழுதிய சம்பூர் பத்திரகாளி 'அம்பாள் ஆலய வரலாறும், மகிமையும்' எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலய முன்றிலில் கவிஞர் க. யோகாநந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி ஆறு. திருமுருகன், கௌரவ விருந்தினர்களாக திருகோணமலை மாவட்ட உதவி அரச அதிபர் நடராசா பிரதீபன், கலாநிதி கனகசபாபதி சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்வர். நூலின் அறிமுக உரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன் வழங்க, நயவுரையை சேனையூர் மத்திய கல்லூரியின் அதிபர் இரா. இரத்தினசிங்கம் வழங்குவார். (ஐ–40)

### அமுத விழாவுக்கு ஏற்பாடு

முல்லைத்தீவு,ஓக்.7

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 80 ஆவது ஆண்டு அமுத விழாவையும், பாடசாலையின் பெயர் மாற்றத்தை யும் மேற்கொள்ள ஏற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக பாடசாலையின் அதிபர் சி.நாகேந் திரராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆண்டு விழாவை சிறப்பாக நடத்துவதற்கு பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் அவசியம் தேவையெனவும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ–500)


## மாணவர் உள்வாங்குகை : கல்வியாண்டு 2015, ஒக்ரோபர்
## BCAS Campus - Jaffna

தனியார் உயர் கல்வித்துறையில் 16 வருட அனுபவத்தையும் நம்பிக்கையும் கொண்ட **BCAS Campus** யாழ் வளாகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் (BTEC Pearson edexcel HNDs)

கற்கை நெறிகள்

- **Civil Engineering**
- **Biomedical Science**
- **Quantity Surveying**
- **Computing & System Development**
- **Business Management**
- **Business Marketing**
- **HR Management**

காலம் : நான்கு கல்வி அரையாண்டுகள் (1வருடம் 6 மாத கற்கை காலம் +6 மாதகால தொழில்சார் பயிற்சி)
கட்டணம் : கற்கை நெறிக்கேற்ப வேறுபடும்
மொழிமூலம் : ஆங்கிலம்
அனுமதி : க.பொ.த உயர் தரம் (பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்)



மேற்கூறப்பட்ட கற்கைநெறிகள் நான்கு கல்வி அரையாண்டுகள் கொண்டதாகவும், இக்கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் (UGC) சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஒருவருட / இறுதியாண்டு (Top-Up) கற்கையை 105 க்கு மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களிலோ அல்லது எமது நிறுவனத்தின் கொழும்பு வளாகத்திலோ தொடர்ந்து பட்டத்தை பெற முடியும்.

### டிப்ளோமா கற்கை (Diploma)



கற்கை நெறிகள்

- **CAD & BS**
  க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் கட்டிட நிர்மாணத் துறையில் 6 மாதகால படவரைஞர் பயிற்சி நெறியின் இறுதியில் UK edexcel அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.
- **BTEC edexcel National Diploma in Engineering (IEF)**
  Engineering துறையில் க.பொ.த சாதாரண தரம். அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் சர்வதேச இளமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான 1 வருட (2 கல்வி அரையாண்டுகள்) அடிப்படை கற்கை நெறி UK edexcel அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

### கணனி மற்றும் ஆங்கில பயிற்சி பாடநெறிகள் (UK edexcel)

கற்கை நெறிகள்

- **English**
  நான்கு மாத காலம் கொண்ட ஆங்கில பாடநெறி ஆங்கிலத்தில் பேச எழுத வாசிப்பதற்குரிய முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதுடன் சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.
- **Information Technology (IT)**
  Concept of Information Technology, Computer Maintenance & File Management, Microsoft Office, Information & Communication, Website Development, Computer Programming & Hardware & Networking போன்ற பிரிவுகளில் முழுமையாக பயிற்சியளிப்பதுடன் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.
- **IELTS**
  சர்வதேச ஆங்கில மொழித் தகைமைகளை உத்தரவாதப்படுத்தும் இப்பாட நெறியில் Speaking, Listening, Reading and Writing போன்ற பிரிவுகளில் முழுமையானதும் தனிப்பட்ட கவனமும் செலுத்தப்படுகிறது.

**BCAS CAMPUS** BRITISH COLLEGE OF APPLIED STUDIES JAFFNA

மேலதிக தகவல்களுக்கு:
**077 710 2131**
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka
T: 021 2219910

16 YEARS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் மணிவிழா










யாழ்ப்பாணம், ஒக்.07
யாழ். சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் மணிவிழா நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. வித்தியாலயத்தின் முன்பாக நடைபயணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வு வித்தியாலய அதிபர் அருட் சகோதரி எம். ஜீவன்தி தலைமையில் நடை பெற்றது. இந்த நடைபயணத்தை யாழ். ஆயர் தோமஸ் சவுந் தரநாயகம் ஆண் டகை வழிபாட்டை மேற்கொண்டு ஆரம்பித்து வைத்தார். இந்த நடைபயணத்தில், யாழ். சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயமாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். பாடசாலைச் சின்னத் துடன், மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்ட ஊர்வலம் யாழ். கோவில் வீதி வழியாக, யாழ். பஸ்தியன் வீதியைச் சென்றடைந்து அங் கிருந்து, சோமசுந்தரம் வீதி வழியாக வித்தியாலயத்தில் நிறைவடைந்தது. அதன் பின்னர், மணி விழா நிகழ் வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில், வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும், வடமா காண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.
நிகழ்வில், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. நிகழ்வில் கலை நிகழ்வுகளுடன் மணிவிழா சிறப்பிதழும் வெளியிடப் படவுள்ளமை குறிப்பிடத்தக் கது.
(ஐ–10,106)

# தளத்தில் கணித நண்பன்




எழுத்தாளர்கள் தட்டச்சு செய்வதற்குஎன்றேபிரத்தியேகஎழுதிகள் இருக்கின்றன. வழக்கமான தட்டச்சு மென்பொருளான வோர்டு பிராசஸரை விட இவை மேம்பட்டவை. அதைவிட முக்கியமாக, கவனச்சிதறல் இல்லாமல் எழுதுவதில் மட்டும் ஈடுபட உதவுபவை. இதேபோல விஞ்ஞானிகள் மற்றும் பொறியியலாளர்களுக்கு எனத் தனியே எழுதி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளமை உங்களுக்கு தெரியுமா? கேல்கா அந்த எழுதியைப் பயன் படுத்தும்போது நடுவே கணக்குப் போட்டுப் பார்க்கலாம். கணித வியல் சமன்பாடுகளையும் பயன் படுத்திக்கொள்ளலாம்.
இயற்பியல் அல்லது வேதியியல் போன்ற பிரிவுகளில் தட்டச்சு செய்யும் போது சமன்பாடுகளைப்பயன்படுத்தவேண்டியிருந்தால் அவற்றைத் தட்டச்சு செய்யும் போதே பின்னணியில் அதற்கானகணக்குப் போடப்பட்டு விடை தானாகத் திரையில் தோன்றும்.
நிதி மற்றும் பொருளாதார விடயங் களைத் தட்டச்சுச் செய்யும் போது வட்டி, கூட்டுவட்டி போன்றவற்றை குறிப்பிட்டாலும் இந்த எழுதியே கணக்கு போட்டு விடை அளிக்கும். கணினியில் தட்டச்சு செய்யும் போது, எளிய கூட்டல் கணக்கை இடம்பெற வைக்கவேண்டும்என்றால் கூட,வெளியேவந்துதனியே கல்குலேட்டரைப் பயன்படுத்தும் நிலையில் இருந்து கால்கா அளிக்கும் வசதி எத்தனை மேம்பட்டது என்று அதை பயன் படுத்திப் பார்த்தால் தான் புரியும். கல்குலேட்டர் உதவி இல்லாமலேயே எளிய கணக்குகளைப் போட்டுப் பார்க்கவிரும்பினால் நோட்பேட் கல்குலேட்டர் இருக்கவே இருக்கிறது. கிழிக்கப் பட்ட காகிதம் போல இருக்கும் இதன் முகப்புப் பக்கத்தில் குறிப்பெழுதுவது போல எழுதத் தொடங்க வேண்டியதுதான். இப்படி தட்டச்சு செய்யும் போது கூட்டல், கழித்தல்களைப் பயன்படுத்தினால் அந்த சமன்பாட்டுக்கான விடை அருகே வந்து நிற்கிறது.

# செயலி புதியது



ஐபோனுக்காக அறிமுகமாகி இருக்கும் புதிய செயலி, 'ஹூக்டு'. இந்த செயலியில் தொடுபேசி (ஸ்மார்ட் போன்); தலைமுறை இக்கால இலக்கியத்தை வாசிக்கலாம். அதாவது, வாட்ஸ் அப் செய்திகளைப் படிப்பது போலவே இந்த கதைகளையும் படித்து விடலாம். அதற்கேற்ற வகையில் எல்லாமே சில நிமிட வாசிப் புக்கு ஏற்ற சின்னக் கதைகள். கதையின் அளவு மட்டும் அல்ல, அவை சொல்லப்படும் விதமும் நவீன தலைமுறைக்கானது. கதைகள் வர்ணனை, விவரிப்பு எல்லாம் இல்லாமல் குறுஞ் செய்தி வடிவில் அமைந்திருக்கும். பேசியில் வரும் குறுஞ்செய்திகளை படிப்பது போலவே இந்தக் கதைகளை சுவாரஸ்ய மாக படித்து முடித்து விடலாம். தொடுபேசி (ஸ்மார்ட் போன்) தலை முறைக்கு ஏற்ற வகையில் இப்போது குறுஞ்செய்தி வ[illegible] 'ஹூக்டு' செயலி [illegible] அறிமுகமான வேகத்தில் ஹூக்டு பரவலான கவனத்தை ஈர்த்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

St.John Bosco's Vidyalayam

# யா/புனித ஜோன் பொஸ

# 1955 -



## On the 60th anniversary of St.John Bosco Primary School



I am happy to note that one of the leading Primary school in Jaffna is the St. John Bosco Children School situated at the Racca Road Junction. It had a humble beginning as a Catholic religious educational institution which was started 60 years ago by Rev. Fr. P.T. James OMI, with only 3 teachers .More and more children joined the school and due to lack of space. Rt. Rev. Dr. J. Emilianuspillai OMI Bishop of Jaffna built a bigger school in the present location.

In 1957 the school was under the management of Apostolic Carmel Sisters who brought a change as a well - known School for Primary education with English. Sr. Stanislaus Mary of the Apostolic Carmel Religious Order became the principal of the school and her dedicated service was much appreciated. The school was a registered and the students excelled in public examinations. When the Govt, introduced the Scholarship Examination for 5std Children, St. John Bosco School children were prepared so well and a higher number of students from the school became eligible for Govt. Scholarship. Late Bishop Rt. Reverend Dr. B. Deogupillai also took keen interest in the growth of this school.

Today John Bosco is highly spoken up as a leading schooLin the Jaffna Town and there is such a demand from the parents to get admission to this prestigious institution. The dedicated service of the Principal and staff bring out the best performance of students. It is noteworthy that in the year 2014, 167 students out of the 230 children obtained above 100 marks with 72.60 % qualified. Sister Principal and her hard working and loyal staff of teachers ,this school continues to present students for the Scholarship Vstd and obtain year after year outstanding performance in the Public examinations.

On the happy occasion of the 60th anniversary of the school, I join with school community the Parents, congratulate Rev. Sr. M.Jeevanthi A.C, Principal and staff and wish God's blessings that this leading Primary Institution will continue to serve for the Glory God.

**Rt.Rev.Dr. Thomas Savundaranayagam**
Bishop of Jaffna.

## Felicitation Message



I am very pleased to send my warmest wishes to St.John Bosco Vidyalayam, Jaffna that is reaching sixty years of service in the field of education. Sixty years of existence and above all, excelling in studies and formation all the time is something worthy of praise. My hearty congratulations to the Principals and the teachers, both present and past, for their dedicated service to develop this school to this high standard of learning.

The school had its humble origin in 1954 with two teachers and eighty one students. But, over the years, through the dedication of the Carmelite Sisters the school progressed very smoothly to reach the top. The academic performances and the co-curricular activities have been quite exemplary. The Reverend Sisters looked after the tender ones that came under their care and formed them for a successful secondary education elsewhere. The Principals of different schools to which these children found admission to further their education have appreciated the formation and values that have been inculcated into these children. Being a Primary School, I am sure the Reverend Sisters and teachers would have crossed many a hurdle in maintaining the high standard of education. Even during displacements, and afterwards too, the school kept its record of high standards. The dedication of the Staff of the school, both presents and past, has to be congratulated for their excellent services.

May I take this opportunity to wish the Reverend Principal, the Sisters and the teachers many more fruitful years of service in the field of educating the young ones. May your heavenly patron. St.John Bosco continue to shower his blessings on you and guide you in the coming years as well.

**Revd. Dr. Justin B. Gnanapragasam**
Vicar general - Jaffna Diocese

## வாழ்த்துச் செய்தி



யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் அறுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

1954 ஆம் ஆண்டு தற்காலிக கொட்டகையுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1962 இல் அரச பாடசாலையாக கல்வி அமைச்சு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது வடமாகாணத்தில் தரம் III பாடசாலைகளில் முன்னணி பாடசாலைகளில் ஒன்றாக உயர்வு பெற்றுள்ளது.

கல்வியும் ஒழுக்கமும் மாணவர்களின் வளர்ச்சியில் இன்றியமையாதவையாகும். அந்த வகையில் இப்பாடசாலை கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குவது பாராட்டத்தக்கதாகும். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இப்பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை பெற்று வருகின்றனர். கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் இப்பாடசாலை 72.60 சித்தி வீதத்துடன் தமிழ் பாடசாலைகளில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டதன் மூலம் மாணவர்கள் பாடசாலைக்கும் வடமாகாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர். இவ்வாறான உயர்ந்த சித்திவீதத்தை பெற்றுக்கொடுப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.

இப் பாடசாலையின் அறுபதாவது ஆண்டு மலரை வெளியிடுவதனூடாக பாடசாலையின் அபிவிருத்தியை சுட்டிக் காட்டுவதிலும் பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்ததையிட்டு அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன். இப்பாடசாலை கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மென்மேலும் உயர்வடைந்து மாகாண மற்றும் தேசியமட்டத்தில் மேலும் பல சாதனைகளைப் படைக்கவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.க.இரவீந்திரன் - செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்.

Best Wishes

## 60 th Year of Founding J/St. John Bosco School in Jaffna



Education widens knowledge, broadens the vision, sharpens the mind, and moulds the character of the children.

St. John Bosco school has been playing a gigantic role in imparting quality education in Jaffna for the last 60 years. With great joy I thank God for His many blessings showered on the prestigious institution.

Beginnings are always tedious. It's the same with St. John Bosco too and It was inaugurated by Rev. Fr. John Mary Couchouron OMI under the patronage of the then Bishop of Jaffna Rt. Rev. Dr.J. Emilianuspillai way back in 1955. Later his Lordship who had envisaged the importance and continuity of education inspired Sr. Odelia the then Superior of the Convent of Our Lady of Lanka Atchuveli. She in turn requested Sr. Stanislaus Mary and handed over the school to her. She accepted the noble task as the 1st Principal in1957 with very limited facilities trusting in God alone. The number of children were 80. Thus the golden era of St. John Bosco School dawned in Jaffna.

Historically Jaffna peninsula had to face many challenges arising from political and administrative changes. St. John Bosco was not spared. It stood the test. It is remarkable to note that this school has faithfully maintained its standards, despite unfavorable vagaries of the weather. Our sincere thanks go to the officials of the Education Departments, Principals, Teachers and parents for their unstinted support at all times. Therefore you stand as a light house to the nation.

I would like to express my profound appreciation to the pioneers who toiled hard to build up the school to what it is today. At present there are 1190 students on roll, St. John Bosco has created outstanding and excellent records in the grade 5 scholarship examination in 2014 ranking 2nd in the national level and 1st among the Island wide Tamil medium schools.

On this happy occasion, I extend my cordial felicitations to Sister Jeevanthy, the principal and to all the devoted staff members and students. May the spark of enthusiasm and undaunted courage coupled with Vigour and vision be enkindled in the hearts and homes of every inmate of dear st. John Bosco and be true and Loyal to their 'motto Love and service'.

**Rev.Sr.M.Sunitha A.C**
The Provincial Superior
Sri Lanka - Pakistan.

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் கல்விப் பணியினை யாவரும் அறிந்ததே. இவ்வித்தியாலயம் அகவை அறுபதை அடைந்து மணிவிழா கொண்டாடும் முகமாக வெளியிடும் மலருக்கு வாழ்த்து தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ் வித்தியாலயம் 1954ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் 1955ஆம் ஆண்டு புனிதர் ஜோண் பொஸ்கோ அவர்களின் திருநாளன்று அருட்திரு ஜேம்ஸ் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. இவ் வித்தியாலய அதிபர்கள், ஆசிரியர்களது அர்ப்பணிப்பான சேவையினால் மாணவர்களது கல்வி, ஒழுக்கம் என்பன சிறந்து விளங்குவது, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் இரண்டாம் இடத்தினையும் தமிழ் பாடசாலைகள் வரிசையில் முதலாம் இடத்தினையும் 2014ஆம் ஆண்டு பெற்று தன்னுடைய கல்வித்தர சிறப்பினை வெளிப்படுத்தியதை இவ்விடத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமாக அமைகின்றது.

"அன்பும் சேவையும்" எனும் மகுட வாசகத்தை தன்னகத்தே கொண்டு விளங்கும் இவ் வித்தியாலய மாணவச் செல்வங்களுக்கு மனித விழுமியங்களையும் கல்வி, ஒழுக்கம் என்பவற்றையும் மிக இறுக்கமாக வளர்த்தெடுப்பதில் முன்னணியில் தன்னாலான பணியினைத் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, மலர் இருக்கும் மணிவிழா மலர் சிறக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. நா. வேதநாயகன்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
யாழ். மாவட்டம்.

## வாழ்த்துச் செய்தி



யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் 60 ஆம் ஆண்டு நிறைவு விழாவினை கொண்டாடுவதையிட்டு வெளியிடப்படும் நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ். வலயத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் முன்னிலையில் இப் பாடசாலை திகழ்ந்து வருகின்றது. ஆரம்பக் கல்வி நிலையில் சிறப்பான கல்வியினை இப் பாடசாலை வழங்கி வருகின்றது. ஆரம்பத்தில் குறைந்தளவு மாணவர்களுடனும், குறைவான வளங்களுடனும் இயங்கிய இப்பாடசாலை தற்போது ஏறத்தாழ ஆயிரம் மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையினது மாணவர்களில் அதிக எண்ணிக்கையானோர் ஆண்டு தோறும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வருகின்றனர். அத்துடன் ஆங்கில தினப் போட்டிகள் போன்ற ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் முன்னிலையில் திகழ்ந்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

பல அருட்சகோதரிகள் இப்பாடசாலையில் அதிபர்களாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளனர். தற்போது அருட்சகோதரி ஆ.ஜீவந்தி அவர்களது சிறப்பான வழிகாட்டலில் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி பெற்று வருகின்றது. 2014ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இப்பாடசாலை அகில இலங்கை ரீதியாக இரண்டாமிடத்தையும், தமிழ்மொழி மூலம் பாடசாலைகளில் முதலாமிடத்தையும் பெற்றமை பாராட்டுக்குரியது.

இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சி பெற்று சிறந்த ஆரம்பக் கல்விப் பாடசாலையாக சமூகத்திற்குச் சேவையாற்ற வாழ்த்துகின்றேன்.

திரு.செ.உதயகுமார்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.-
வடக்கு மாகாணம்.

## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண நகரின் மத்தியில் கல்விப்புகழைப்பரப்பிநிற்கும் தலைநிமிர் கல்விக்கூடமே புனித பொஸ்கோ வித்தியாலயம்.

தனது 60 வருடத்தை கொண்டாடும் கல்விசாலை பல்லாயிரக் கணக்கான மாணவச் சமூகத்தை இப்புவிக்கே தந்து பெருமை கொள்கின்றது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு உயிர்கொடுத்த உத்தம பாடசாலை என்றால் மிகையாகாது.

இதற்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல 2014 ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு அகில இலங்கை ரீதியாக தமிழ் மொழிப் பாடசாலைகளில் முதலாம் இடத்தைப் பெற்று தனக்கென ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டமை பாராட்டுக்குரியது.

தனது 60 வருடத்தை கொண்டாடும் புனித பொஸ்கோ வித்தியாலயம் மேலும் பல சிறப்புக்களை எல்லாம் பெற்று கல்விப் பயிரை வளர்க்க எல்லாம் வல்ல இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

"வித்யா விஜயஸ்ரீ" கலா. பிரதீபா பிரபா" சு.சண்முககுமார்
(D.E.O) B.A.Sci, Td,p.G.G.D, M.E.d

## பாடசாலை வரல

1954 ஆம் ஆண்டு ஏழைச் சின்னஞ் சிறார்களின் கல்வி வளர்
கொட்டகையில் யாழ்ப்பாண நகரத்தின் மையப்பகுதியிலே, றக்கா வீதி
அழகிய குளமும், மருதமர நிழலும் சூழ்ந்திருந்த பகுதியிலே தனது கல
இப்பாடசாலை.

1955 இல் கத்தோலிக்க பங்குத்தந்தை ஜேம்ஸ் அடிகளாரும், அப்போ
ஆண்டகை அவர்களின் முயற்சியாலும் மேற்றிராசனுக்குச் செ
அமைக்கப்பட்டது. (தற்போது தரம் 1, 2 அலுவலகப்பகுதியில்)

1955.01.31 இல் புனித ஜோண் பொஸ்கோவின் திருநாளன்று புனித
வைத்தார் ஜேம்ஸ் அடிகளார்.

1957.07.22 இல் கார்மேல்சபை அருட்சகோதரிகள் பாடசாலையைப்
பொஸ்கோ றோ.க.த.க பாடசாலை எனப் பெயர் வழங்கப்பட்டது.

1962.04.01 முதல் பாடசாலை அரசு மயமானது. அதன் பின்னர்
வித்தியாலயம் என்ற பெயரில் இப்பாடசாலை இயங்கி வருகின்றது.

இப்பாடசாலையை நிர்வகித்த அதிபர்கள், கற்பித்த ஆசிரியர்களின்
வேண்டியதொன்றாகும்.


அதிபர்கள் வரிசையில்

1. அருட்சகோதரி ஸ்ரனிஸ்லஸ் மேரி (A.C) 2. அரு
3. அருட்சகோதரி மேரி ஜெறோம் (A.C) 4. அரு
5. அருட்சகோதரி மரிய

இவர்கள் சேவை அளப்பரியதாகும். இப்பாடசாலை தன் வளர்ச்சிப் பா
கண்டு, யாழ்ப்பாணத்திலே ஆரம்பப் பாடசாலைகளில் முன்னணி
பெருமை சேர்க்கின்றது என்றால் மிகையாகாது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியிலே, தமிழ்ப்
பாடசாலையாகத் திகழ்வது மட்டுமன்றி, இணைப்பாடவிதானச் செய
வெற்றிகளையும், சாதனைகளையும் தனதாக்கிக் கொண்ட பெருமை இ
சகல துறைகளிலும் தலை நிமிர்ந்து தரணியில் தன் பெருமை
இப்பாடசாலையின் புகழ் என்றும் நிலைக்கவும், மேன் மேலும் ஓங்க
அருளும் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப்போமாக!

## Blessing Message from the



This is to give thanks for the opportunity th
the last 10 years. I am really grateful to God for the
experienced His goodness in the ups and downs c
instrument to work for the little ones and build up

Our students are molded after the vision of
special way. The social values are inculcated in the
Our students fly up to national level in all the ac
known far and wide.

I express my sincere thanks to the staff who have been toiling
remember with grateful heart for their services and had gone out of this in
support raised this institution to the heights.

My gratitude to the parents who have been the pillars of this instit
in every step developed this institution to the fullest.

I raise my heart in gratitude to God for my Staff, Students , Pare
support to me all through these 10 years.

My thankfulness to the Superior Generals , Provincial Superiors a
the Bishop of Jaffna Diocese, Rev. Fathers and Rev. Sisters and specially t
supported me through the years to carry out my duties.

## வைர விழா மலருக்கான வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தி
யாழ்ப்பாண சமூகத்தில் பெருமதிப்பையும் ஆதரவை
மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை
கொண்டதாக இயங்குகின்றது 60 வருட கல்விப்பண
தொடர்பாக வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்

1954, 1955, 1965, 1979, கால வளர்ச்சிப்பா
இப்பொழுது "யாழ்ப்பாணம் ஜோண் பொஸ்கோ வித்தி
கல்வித்தடம் பதித்து வருகின்றது. இப்பாடசாலையி
பணியாற்றி யதன் வெளிப்பாடு தேசிய மட்ட அ
தொழிற்படுவதன் மூலம் உயர் அடைவுக்கான
மிகச்சிறந்த அடையாளமாக உள்ளது.


எல்லா மாணவர்களையும் "பொஸ்கோ" அனுமதிக்கின்றது. நா
இருக்கின்றார்கள். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நல்ல பாடசாலையில் சே
கல்விக்கான எல்லைகளும் வாய்ப்புக்களும் பரந்து செல்கிறது. ப
நோக்கி நகர்வதில் தவறு ஏதும் இருக்க முடியாது. அது சமுதாயத்
பாடசாலைகள் எல்லாம் தரமான கல்வியை வழங்குவ
பயனாளிகளின் விருப்பத்தையும் அவர்களது திருப்தியையும் நி
எதுவும் இருக்க முடியாது.

புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் மேலும் மிடுக்குடன் தனது
தங்களின் பிள்ளைகளை "பொஸ்கோ" வில் சேர்த்து விட வேண்டும் என்று
ஆகும். தொடர்ந்து தரமான கல்வியை வழங்கி தரமான சமூகம்
வாண்மையாளர்களை உருவாக்கும் மனித வளத்தை உறுதி செய்ய
வேண்டும். வைரவிழாவில் "பொஸ்கோ" பட்டை தீட்டிய வைரமாக பிரகாசிக்க
பிரார்த்தித்து வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ஸ்கோ வித்தியாலயம்

# - 2015





## ...லை வரலாறு

... கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு ஒரு தற்காலிகக் ...லே. றக்கா வீதியில் நரிக்குண்டு என மக்களால் அழைக்கப்பட்ட ...யிலே தனது கல்விப்பாதையில் முதல் காலடியை எடுத்து வைத்தது

...ளாரும், அப்போது ஆயராக இருந்த மேதகு எமிலியானுஸ்பிள்ளை ...ாசனுக்குச் சொந்தமான காணியில் பாடசாலைக் கட்டடம் ...பின்)

...னானறு புனிதரின் பெயரைச் சூட்டி பாடசாலையை ஆரம்பித்து

...டசாலையைப் பொறுப்பேற்ற பின் யா/தூர்ாலை புனித ஜோண் ...ட்டது.

...தன் பின்னர் 1979.03.01 இல் யா/புனித ஜோண் பொஸ்கோ ...கின்றது.

... ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவை என்றும் பாராட்டப்பட

2. அருட்சகோதரி அன்ரனீனா (A.C)

4. அருட்சகோதரி பு. செல்வராணி (A.C)

...சகோதரி மரிய ஜீவந்தி (A.C)

... வளர்ச்சிப் பாதையில் அதீத வளர்ச்சியுடன் தடம் பதித்துச் செல்வது ... முன்னணிப் பாடசாலையாகத் திகழ்ந்து எமது மண்ணிற்கு

...லே. தமிழ்ப் பாடசாலைகளில் முதல் தரத்தில் முன்னணிப் ...விதானை செயற்பாடுகளிலும் தேசிய மட்டம் வரை சென்று பல ...டைப் பெருமை இப்பாடசாலைக்குரியதாகும்.

... தன் பெருமைகளைப் பறைசாற்றி, வைரவிழாக் காணும் ...மேலும் ஓங்கவும் புனித பொஸ்கோவின் ஆசியும், ஆண்டவனின்

## ...e from the Principal

...e opportunity that God has given to me to serve this institution for ...ful to God for the marvelous ways in which He led me through. I have ... ups and downs of the growth of this institution. God made me the ...nes and build up their foundation.

... after the vision of the school. They are also given spiritual values in a ... inculcated in them through curricular and co – curricular activates. ...level in all the activities. I am happy to say that this Institution is

...ve been toiling with me for the past ten years and the staff whom I ... gone out of this institution. I can firmly say that their whole hearted

...illars of this institution time after time. Their concern and support

... Students, Parents and Well-Wishers who have been the strong

...incial Superiors and the Sisters of the Apostolic Carmel, His Lordship ...ers and specially the Education Authorities who encouraged me and

**Rev. Sr. Maria Jeevanthi A.C - Principal**

... பொஸ்கோ வித்தியாலயம் யாழ்ப்பாணத்தின் ஆரம்பக்கல்வி தொடர்பான ...யையும் ஆதரவையும் பெற்ற ஒரு வித்தியாலயமாகும். 1954இல் 81 ... இப்பாடசாலை இன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களை ... கல்விப்பணியைக் கொண்டாடும் இப்பாடசாலையின் வைரவிழா ...தில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

... கால வளர்ச்சிப்பாதையில் பல்வேறு பெயர்களை தாங்கிய இப்பாடசாலை ... பொஸ்கோ வித்தியாலயம் என்ற பெயரோடு 60 ஆண்டுகளைக் கடந்து ... இப்பாடசாலையின் அதிபர்கள் ஆசிரியர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் ... தேசிய மட்ட அடையாளமாகவும், பாடசாலைச் சமூகம் அணியாக ... அடைவுகளைப் பெற்று ... [illegible]

...திருக்கிறது. நாங்கள் என்ன செய்வது என்று சொல்கிறவர்களும் ...டசாலையில் சேர்க்க விரும்புவது அவர்களின் தாமின் உரிமையாகும். ... பரந்து விரிந்து செல்லும் உலகில் சமூகம் தரமான பாடசாலை ஒன்றை ... இவ்வாறான ஒரு எதிர்பார்ப்பாகும்.

... [illegible] ... சமூகம் எல்லாப் பாடசாலைகளையும் விரும்பும். ... வேறுபடுகின்ற பாடசாலைகளை நோக்கி சமூகம் செல்வதில் தவறு

...டுக்குடன் தனது கல்விப் பணியை தொடர வேண்டும். பல பெற்றோர்கள் ...ண்டும் என்று தவம் கிடக்கிறார்கள். ஏனெனில் கல்வியே இன்று முதலீடு ... [illegible] ... தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் உயர் ... ஆசிரியர்கள், பெற்றோர்கள் அர்ப்பணிப்புடன் உழைக்க ... பிரகாசித்து கல்வி என்ற ஒளியை பரவச் செய்ய இறைவனைப்

திரு. சே. தெய்வேந்திரராசா

வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம்.

### ஆசிச்செய்தி



கல்விசார் பெருந்தகையீர்!

அனைத்து மதங்களுக்கும் கல்விக்காக உழைக்கும் பாடசாலையான யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் இன்று தனது 60ஆவது ஆண்டு வைரவிழாவினை கொண்டாடுவதனை யிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். நாட்டிற்கு நன்மாணாக்கர்களை உருவாக்கி தருவது பாடசாலைகள் ஆகும். அந்த வகையில் 60வது ஆண்டு காலமாக கல்விக்காக சேவையாற்றி வரும் பொஸ்கோ வித்தியாலயம் பாராட்டத்தக்க வகையில் சிறுவர்களை சிறப்பான முறையில் கல்வி பயிற்றுவித்து மேல் நிலைப் பள்ளிக்கு செல்ல தகுதியான வகையில் சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கு காரணமாக இருந்துள்ளது.

இப்பணியை நீண்டகாலமாக செய்து வரும் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள் இவர்களுடைய இந்தப் புனிதப் பணி இன்னும் பல ஆண்டுகள் தொடர இறைவன் ஆசீர்வதிப்பாராக! நடைபெறும் 60ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்பான முறையில் நடைபெறவும். நம் நாட்டுக்கு இன்னும் நன்மாணாக்கர்களை உருவாக்கித்தரவும் பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடையவும் இறைவன் ஆசீர் வதிப்பாராக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**

**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

## Message from Hon.Governor, Northern Province for Diamond Jubilee Celebration of Jaffna St. John Bosco's Vidyalayam



It gives me great pleasure to offer this message to the book, **"Diamond Jubilation"** being published to mark the Diamond Jubilee celebration of Jaffna St. John Bosco's Vidyalayam, one of the distinguished primary schools in Northern Province of Sri Lanka.

The great service and participation of the St. John Bosco's Vidyalaya- community including past and present principals and teachers, past and present pupils, parents of past and present pupils and well-wishers in the last decades of its history to bring up the school to its upliftment as an academically effective primary school should be admired during this Diamond Jubilee celebration.

The education system should produce pupils with the knowledge, understanding, and the skills and attitudes appropriate for successful living. Total personality development, characterised by creativity, initiative, discipline, team spirit, respect and tolerance for other people and other cultures, should be achieved from Primary level. Jaffna St. John Bosco's Vidyalayam with its motto "Love and Service" plays an eminent role in the primary education of North, particularly of Jaffna to lay foundation for the Total personality development of the students.

Educationists claim today that attending a good pre-school and primary school has more impact on children's academic progress than their gender or family background. A high quality pre-school followed by an academically effective primary school gives children's development a significant boost, the researchers found. The quality of teaching affects both children's social behaviour and intellectual development. Jaffna St. John Bosco's Vidyalayam as an academically effective primary school promotes both children's social behaviour and intellectual development.

**H.M.G.S. Palihakkara**

Governor, - Northern Province.

## Message From the Councillor for Education, Apostolic Carmel, Sri Lanka.



It is with great joy that I note that St. John Bosco Vidyalayam has completed 60 years of dedicated service to the people of Sri Lanka. It gives me much pleasure to be one with the management, staff and students of this school on the occasion which marks the 60th Anniversary. I am happy that this Institution has made steady progress through the years, imparting value based and integral education to the children.

During this period the school has imparted education to a large number of Primary Students of all communities and religions. A good foundation was laid for the students to progress in their future education. Many of them have occupied responsible positions in government and private sectors, and are rendering yeoman service to the society.

I appreciate greatly the generosity of the parents, past students, staff and students for the support that has been extended to all the principals of the past sixty years. I congratulate the staff and students for their excellent performance in the Grade 5 Scholarship Examination for the past many years.


May the rich legacy of education and culture which you have inherited from the past and specially the human values and discipline continue to grow and flourish as you look forward to the further milestones of your journey.

May the Lord bless this school with many more years of faithful service and its Principals, Staff and Students Past, Present and Future, with grace to spread the fragrance of God's love to all who come in contact with this institution.

**Rev. Sr. M. Therese Ranee, A.C.**

Councillor for Education, Provincial House, Colombo 10.

## வைரவிழா வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றில் தன் சாதனையின் தடத்தால் புகழ் மணம் பரப்பும் யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் 60 ஆண்டுகள் நீடித்துயர்ந்த கல்விச் சேவையால் இன்று மணி விழா காண்பது மன மகிழ்வைத் தருகிறது.

துள்ளித் திரிந்து சுறுசுறுப்பாய் மாணவர்கள் திக்கிக்கும் கல்வியை சிறப்பாய் கற்றிட அறிவு பரிபோக்கும் ஆரம்பக் கல்வியின் அடித்தளமாய் விளங்கும் இக் கல்விக் கூடத்தின் அதிபர்கள் அருட்சகோதரிகளாகிய அவர்கள் கடமைப்பணி 60 ஆண்டு காலங்களிலும் மணம் எனும் குரக வானின் உதிரா நட்சத்திரமாய் கோத்தெடுக்க வேண்டியவை.

சிப்பி உடைத்து முத்து சிரிப்பது போல் முத்து முத்தான சித்திரங்களாய் இந்த மண்ணிற்கு இக் கல்லூரியின் ஆசிரியர்கள், பல நல்ல தொழில் நிலை உயர்வு பெற்ற மாணவச் செல்வங்களையும் சமுதாயத்திற்கு நல்ல மனிதர்களையும் தந்திருக்கிறார்கள் இவ் ஆசிரியர்களின் சேவை நன்றியுடன் பாராட்டத்தக்கது.

ஒரு மனிதனின் ஆரம்ப கல்வி பயணம் ஆத்மாவின் இறுதி வரிகளில் நிலைத்திருக்கும். அந்த வகையில் யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் தரம் 5 புலமைப் பரீட்சையின் புள்ளிகளால் மட்டும் [illegible] அரும் பணியாற்றி தனக்கென தனியிடம் பெற்றது.

திரு. சுப்பிரமணியம் . முரளிதரன்

விழாக்குழுத்தலைவர் - யா. புனித ஜோண்பொஸ்கோ

### வாழ்த்துச்செய்தி



1954ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் கல்விச் சேவையில் தனது 60 ஆண்டு களை பூர்த்தி செய்து அதன் வைரவிழா நிகழ்வுகளை சிறப்புற நடாத்து வதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். யாழ்/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியா லயம் என்றவுடன் எம் அனைவருக்கும் ஞாபகத்திற்கு வருவது இதன் ஆண்டு ஐந்து மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறு பேறுகள்.

கடந்த 60 ஆண்டுகளில் பல்லாயிரம் மாணவ மாணவி யர்க்கு அடிப்படைக் கல்வியை அள்ளி வழங்கியது மட்டுமல்லாமல் அவர்களை ஆண்டு ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று சிறப்புற சித்தியடையச் செய்துள்ளது. இப்பாடசாலையில் இடப்பட்ட இறுக்கமானதும் உறுதியானதுமான ஆரம்பக் கல்வி எனும் அத்திவாரமே அம் மாணவ மாணவியரை இடைநிலை மற்றும் உயர்நிலை கற்கை நெறிகளை எதுவித தளம்பல்களுமின்றி சிறப்புற கற்றுத் தேர்ந்து சமூகத்தில் உயர் ஸ்தானங்களில் அமர செய்ததென்று கூறின் அது மிகையாகாது.

காலத்திற்குக்காலம் சிறப்பான அதிபர்களின் தொடர்ச்சியான வழி காட்டலின்கீழ் இப்பாடசாலை அபரிமிதமான வளர்ச்சியை பெற்றுள்ளதை காணக் கூடியதாக உள்ளது. இப்பாடசாலை இன்னும் பல நூறு வருடங்களுக்கு தமது சிறந்த கல்விச் சேவையை எமது ஆரம்பப்பள்ளிச் சிறார்களுக்கு அள்ளி வழங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன். இறைவனை வேண்டுகின்றேன்.

### வாழ்த்துச்செய்தி



யாழ். குடாநாட்டில் சிறந்த மாணவர்களை வெளியீடு செய்வதில் ஜோண் பொஸ்கோ வித்தியாலயமும் முக்கிய பங்காற்று கின்றது. 1955ஆம் ஆண்டு சிறு விழுதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று விருட்சமாக உருமாறி 60ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது.

பெற்றோரின் அரவணைப்பில் தவழ்ந்த குழந்தை முதல் முதலில் புதிய, போட்டி நிறைந்த சூழலில் கால் தடம் பதிக்கிறான். குழந்தைகளின் மாறுபட்ட இயல்புகளுக்கு இசைந்து கொடுக்கும் வகையில் பாடசாலைச் சூழல் அமைந்தால் மட்டுமே குழந்தையை சிறந்த வெளியீடாக மாற்றி சமூகத்திற்கு வழங்கலாம். அத்தகைய சீரிய பணியினை ஜோண்பொஸ்கோ வித்தியாலயம் ஆற்றுகிறது என்பது தரம் 01 மாணவரை அனுமதிக்க போட்டி போடும் அனுமதி அட்டைகளின் விண்ணப்பத்தின் எண்ணிக்கையிலே "வருடா வருடம்" புலனாகும்.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு போட்டிப் பரீட்சையாக அமைந்தாலும் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்குமே தடைதாண் பரீட்சையாக அமைந்துள்ளது எனலாம். விளையாட்டில் லயித்திருக்கும் சின்னஞ்சிறு குழந்தைகளை கற்றலில் ஈடுபட வைப்பது இலகுவான விடயம் அன்று. மாணவர்களின் வெற்றிக்கு களம் அமைப்பதில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் முனைப்புடன் செயற்படுகின்றார்கள் என்பது சென்ற ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் தமிழ்மொழி மூல பாடசாலையில் முதலாம் இடத்தையும் ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் தட்டிச் சென்றமையிலிருந்து புலனாகிறது.

வைர விழாவில் தடம் பதிக்கும் பாடசாலை மேலும் பல சிறந்த மாணவர்களை உருவாக்க வேண்டுமெனவும், விழாவில் வெளியிடப்படும் நூல் சிறந்த ஆவணப் படுத்தலாக அமைய வேண்டுமென வாழ்த்துவதோடு, நூல் வெளியீட்டிற்கு முன்னின்று உழைத்த அதிபர் ஆசிரியர்களை இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

கௌரவ. திரு. த. குருகுலராசா, - அமைச்சர்

(கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர், செயலகம்)

### வாழ்த்துச்செய்தி



அறுபதாவது வைரவிழா காணும் யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தை வாழ்த்துவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். கல்வியின் அடிப்படை மகத்துவத்தை கடந்த 60 ஆண்டுகளுக்கு முன் வேரூன்றி வளர்ந்து தழைத்து தேசிய சாதனைப்படியல் முன்னணியில் விருதுடை போடும் யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தை இந்த ஆண்டு காலப்பகுதியில் அறிவித்துச் சங்கச்செயலாளராக இருந்து வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டு பெருமை அடைகின்றேன்.

யாழ் மாவட்ட கல்வி பெருமை சேர்க்கும் மாவட்டம் அந்த மாவட்டத்திலே தரம் 5 மாணவர்களின் அறிவுத்திறனை கூட்டி இப்பாடசாலை அகில இலங்கையிலே முன்னணி வகிக்கின்றது. சென்ற வருடம் தேசிய ரீதியிலே அகில இலங்கையில் தமிழ் மொழி மூலம் முதலாம் இடத்தினையும் இரு மொழித்திட்டத்தில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினையும் பெற்று 100 வீதம் அடைவு மட்டத்தை அடைந்து சாதனை படைத்தது. இவ்வாறான பாடசாலை துரித வளர்ச்சி அடைகின்றது என்றால் இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களின் அர்ப்பணிப்பான தன்மையே ஆகும். தொடர்ந்து இப்பாடசாலைக்கு அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் களின் அர்ப்பணிப்புச் செய பாடுகள் என்றும் தொடர வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனின் பாதங்களை வேண்டி நிற்கின்றேன்.

திருமதி. வினோதினி சிறிமோகன்

செயலாளர்,

பாடசாலை அபிவிருத்திக் குழு

### வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பக் கல்வியில் ஆணி வேரென தனக்கென தனி இடம் பிடித்துள்ள யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பிதழுக்கான வாழ்த்துச் செய்தியை பழைய மாணவ சங்கத்தினை [illegible] வாயில் வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக பெரும் மகிழ்வடை கின்றேன்.

இவ்வருடம் முதன் முறையாக இப் பாடசாலை அன்னையின் குழந்தைகளாக உருவெடுத்த இலங்கையில் மட்டுமல்லாது உலகெங்கும் பல்வேறு துறைகளில் உயர்ந்துள்ள பழைய மாணவர் களை ஒருங்கிணைத்து பழைய மாணவர் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மணி விழாவில் முதற் தடம் பதிக்கும் இப் பழைய மாணவர் சங்கமானது தொடர்ந்தும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அயராது பங்காற்றும் என்பதில் ஐயமில்லை.

கல்வியே மூலதனமாகக் கொண்ட யாழ் மாவட்டத்தின் கல்வித் துறையில் அரும் பணிபுரிந்து கொண்டிருக்கும் இப் பாடசாலையின் இறைய வரையான 60 ஆண்டு கால வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன்விரும்பிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆகியோருக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ் வைரவிழாவில் சிறப்பாக அமைய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

திரு. இராசகுமாரன், - தலைவர்

பழைய மாணவர் சங்கம்

புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் விளக்கம்

1.வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.
தெய்வத்துக்கென எத்தனையோ அருங் குணங்கள் கூறப்படுகின்றன. உலகில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன் வானில் வாழ்வதாகச் சொல்லப்படும் தெய் வத்துக்கு இணையாக வைத்து மதிக்கப்படுவான்.

2.அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.
அறம் என்று சிறப்பித்து சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும். அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும்.

3.ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா; இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.
தானும் அறவழியில் நடந்து, பிறரையும் அவ்வழியில் நடக்கச் செய்திடுவோரின் இல்வாழ்க்கை, துறவிகள் கடைப்பிடிக்கும் நோன்பைவிடப் பெருமையுடையதாகும்.

4.இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.
கடவுளை அறியவும், அடையவும் முயல்பவருள் மனைவியோடு கூடிய வாழ்க்கையை அதற்குரிய இயல்புகளோடு வாழ்பவனே முதன்மையானவன்.

5.அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிள்
போஒய்ப் பெறுவது எவன்.
அறநெறியில் இல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் பெற்றிடும் பயனை, வேறு நெறியில் சென்று பெற்றிட இயலுமோ? இயலாது.

6.அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
இல்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் தேவை.


7.பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.
பழிக்கு அஞ்சாமல் சேர்த்த பொருள் கணக்கின்றி இருப்பினும் அதைவிட, பழிக்கு அஞ்சிச் சேர்த்த பொருளைப் பகுத்து உண்ணும் பண்பிலேதான் வாழ்க்கையின் ஒழுக்கமே இருக்கிறது.

8.தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.
இறந்து தென்திசையில் வாழ்பவர், தேவர்கள், விருந்தினர், சுற்றத்தார், தான் என்னும் ஐந்து பேருக்கும் செய்ய வேண்டிய அறத்தைத் தவறாமல் செய்வது சிறப்பு.

9.துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.
பற்றற்ற துறவிகளுக்கும், பசியால் வாடுவோருக்கும், பாதுகாப்பற்றவருக்கும் இல்லற வாழ்வு நடத்துவோர் துணையாக இருத்தல் வேண்டும்.

10.இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.
இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகிறவன் அறத்தின் இயல்பை உடைய மூவருக்கும் நல்வழியில் நிலை பெற்ற துணையாவான்.



# பலம் எது? பலவீனம் எது?



ஒரு காட்டில் அநேக விலங்குகள் வசித்து வந்தன. அனைத்து விலங்குகளும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தன. அங்கே வசித்த மயிலொன்று மட்டும் எப் போதும் ஏனைய பறவைகள் மற்றும் விலங் குகளைப் பார்த்து பொறாமைபட்டுக் கொண்டே இருந்தது. உதாரணத்துக்கு யானையைப் பார்த்து பெரியதாய் இருக்கிறது என்றும்,மானைப் பார்த்து வேகமாக ஓடுகிறது என்றும் பொறாமைப்படும். இப்படியிருக்க ஒரு மழைகாலத்தில் அந்த மயில் அழகாக ஆடத் தொடங்கியது. அப் போது பாட ஆரம்பித்த மயில் தனது மோசமான குரலை எண்ணி அழத்தொடங்கியது. அப்போது அங்கு வந்த மைனா மயிலைச் சமாதானப் படுத்தி அருகில் சென்றது. மயில் தனது வருத்தத்தை மைனாவிடம் கூற, மைனா மயிலிடம், நீ மிகவும் அழகாக இருக்கிறாய்,அதை நினைத்து நீ சந்தோஷப்பட்டிருக்கிறாயா என்றது. மயில் சிறிது நேரம் மௌனமாய் இருந்து விட்டு இல்லை என்று பதில் கூறியது. இதனைக் கேட்டு சிரித்த மைனா உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு சிறப்பும் வலிமையும் இருக்கும்,அது என்ன என்பதை உணர்ந்து அதனை மேம்படுத்தவேண்டுமேயன்றி எது எம்மிடம் இல்லையோ அதை நினைத்து வருத்தப்படவோ பொறாமைப்படவோ கூடாது என அறிவுரை கூறியது. தனது தவறை உணர்ந்த மயில் மைனாவுக்கு நன்றி தெரிவித்தது. எம்மிடம் இருக்கும் பலத்தைப் பயன்படுத்தி எமது பலவீனத்தை எதிர் கொள்ள வேண்டுமென்பதே இந்தக் கதையின் நீதியாகும்.

# இயற்கையோடு இணைந்திருக்கும் உயிரினம்




பொதுவாக சில உயிரினங்கள் தங்களின் நிறத்தை சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும் திறன் வாய்ந்தவை.
அவற்றில் Lizards எனப்படும் பல்லி இனம் சூழ்நிலைக்குஏற்பதனது நிறத்தை மாற்றும் வல்லமை கொண்டுள்ளது.

# சிந்தனைக்கு விருந்து !

- சாதனை படைக்கப் பிறந்தவர்கள் . சாதகம் பார்ப்பதில்லை.
- முதல்வனாய் இரு; இயலாவிட்டால் முதல்வனோடு இரு.
- ஊக்குவிக்க ஆள் இருந்தால் இன்று ஊக்கு விப்பவன் கூட நாளை தேக்கு விற்பான் .
- வாழ்க்கை என்பது ஒரு மெழுகுவர்த்தி அல்ல, அது ஓர் அற்புதமான தீபம். பிரகாசமாக அதை ஒளிரச் செய்து அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்க வேண்டும்.
- திறமையானவர்கள் சந்தர்ப்பத்துக்குக் காத்திருப்பதில்லை அவர்களே சந்தர்ப்பத்தை உருவாக்குகிறார்கள்.
- ஒரு முயற்சி நிறுத்தப்படும்போது தோல்வியாகிறது,தொடரப்படும்போது வெற்றியாகிறது.
- நான்தான் செய்து முடித்தேன் என்று மார்தட்டிக் கொள்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் நம்மை அறியாமல் வேறொருவர் உந்து சக்தியாகவும், மூலகாரணமாகவும் இருக்கிறார்.
- விதியை நம்புபவன் எதையும் சாதிக்க மாட்டான்.
- தனியாக இருக்கும்பொழுது சிந்தனையிலும். கூட்டத்தில் இருக்கும்பொழுது வார்த்தையிலும் கவனமாக இருக்க வேண்டும்.
- பிறரைச் சீர்திருத்தும் முயற்சியைவிட, தன்னைச் சீர்திருத்திக் கொள்வதே முதற் கடமை. ஒழுங்கு தவறிய இடத்தில் பயன் இருந்தாலும் மதிப்பு இல்லை.
- பணத்தின் மிகப்பெரிய பயன்,அதை இல்லாதவர்களுக்குக் கொடுத்து மகிழ்வதுதான்.
- மற்றவர்கள் முடியாது என்று நினைக்கிற ஒரு விடயத்தை முடித்துக் காட்டுவதுதான் , நல்ல தலைமைப் பண்பின் அடையாளம்.
- உயர் பதவி என்பது நிரந்தர சிம்மாசனம் அல்ல. அது நமக்குச் சரிப்படாவிட்டால், மற்றவர்களுக்கு இடம் தந்து விலகிவிடவேண்டும்.
- உங்களிடம் பணி புரிகிறவர்களை, மரியாதையோடும்,கண்ணியத்தோடும் நடத்துங்கள்,அவர்கள்தான் உங்களின் மிகப் பெரிய சொத்து.
- இயன்றவரை அனைவரிடமும் மென்மையாகப் பேசுங்கள். பணிவாக நடந்துகொள்ளுங்கள்.
- நாளை என்பது மிக தாமதமாகும்.இன்று முதலே வாழ்க்கையைச் சிறப்பாக நடத்திக் காட்டுங்கள்.
- இயன்றால் மரங்களை வளர்த்து இயற்கையை அழியாமல் காப்பாற்றுங்கள். இயலாவிட்டால் இருக்கும் மரங்களை வெட்டாமல் உங்களை நீங்களே காப்பாற்றி கொள்ளுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதியைப் புனரமைப்பார்களா?

சுன்னாகம் ஐயனார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வீதியின்ஒருபகுதிமோசமாகஉள்ளநிலைதொடர்பாகப் பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதிலும், இந்த வீதிக்குப் பொறுப்பானவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வதாகத் தெரியவில்லை.ஐயனார் ஆலயம் வடபகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாகும். இந்த ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் சிறப்பான வகையில் இடம்பெறுவது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் இந்த ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வீதியின் ஒரு பகுதி தான் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. மழை பெய்யும் போது இந்த வீதியின் வடக்குப் புறத்தில் வெள்ளம் தேங்கி நிற்பது வழக்கமாகி விட்டது. மேலும் வீதியின் பெரும்பாலான பகுதிகள் சேதமடைந்து காணப்படுவதால், இதனைப் பயன்படுத்துகின்ற மக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.இனிமேல்மழைகாலம்ஆரம்பிக்கப்போவதால் இந்த வீதி மிகவும் மோசமான நிலைக்கு மாறிவிடப்போகின்றது. இதனால் மக்கள் தான் பாதிக்கப்படப் போகின்றனர். ஆகவே இந்த வீதிக்குப் பொறுப்பானவர்கள் இனியும் காலம் தாழ்த்தாது இதனைப் புனரமைத்து வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

- **ச.தயாளன்,** சுன்னாகம்

## சேமிப்புப் பணத்தை பயனாளிகளிடம் மீள வழங்குவார்களா?




தென்மராட்சி வரணி வடக்கு ஜே.339 கிராம அலுவலர் பிரிவில் கடந்தகாலத்தில்தற்காப்புவளர்ச்சிக் கழகம்திறம்படஇயங்கியநிலையில், பலபொதுமக்கள் அதில்உறுப்பினர்களாக இணைந்து பணத்தை சேமித்தும்உள்ளனர்.பலர்கடனடிப்படையில் பணத்தையும் பெற்ற நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் மக்கள் இடம் பெயர நேரிட்டதால் கழகச் செயற்பாடுகள் முடங்கிய நிலையில் கழகம் இயங்க முடியாமல் போய்விட்டது. ஆனால் கழகத்தால் சேமிப்பு செய்யப்பட்டதற்கு ஆதாரமாக உறுப்பினர்களுக்குச் சேமிப்புப் புத்தகம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் அமைதி நிலை உருவாகி இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேறிய நிலையில் கழகத்தை இயக்கியவர்கள் மீளவும் கழகம் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பாவி மக்கள் வியர்வை சிந்திச் சேமித்த . பணம் அவர்களது கைகளுக்கு மீண்டும் கிடைக்க சம்பந்தப்பட்ட கழக நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுப்பார்களா? உறுப்பினர்களது பணத்தை வைப்பில் இட்ட பயனாளிகள் தமது சேமிப்புப் புத்தகத்தை வைத்துக்கொண்டு கழகம் மீண்டும் இயங்காதா என வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றனர்.

**சமூக நலன் விரும்பி,**
வட வரணி.

## தமிழில் புகையிரதம் புதையலாமா?

வாசிப்பதென்பது விருப்பத்தோடு செய்யப்படவேண்டிய தொன்றாகும். பெரும்பாலான பிள்ளைகள் வாசிக்காமலே வாழ்க்கையின் பெரும்பகுதியைத் தடைதாண்டி விட்டார்கள். வாய்விட்டு வாசிக்கும் போதுதான் தேகத்தில் ஆய்வுக்கான களம் மேலோங்கும்.

எந்தஊடகமாயினும்,மேலோட்டமாக வாசிக்கும்போது எனக்குப் பயம் வராது.உள்ளேஇறங்கிபையப்பைய வாசிக்கும்போது தடக்குப்பட்டு இடறிவிழுந்து ஒருமாதிரி எழும்பிவிடுவேன். என்ன காரணமாக இருக்கலாம்என்பதைஇதுபோன்றபலசம்பவங்கள்மூலமாகத்தெரிந்துகொள்ள முடியும். இதோ ஓர் உதாரணம்:

இந்தப் பயணச்சீட்டில் 0365 இனை அழைத்து புதையிரத பயணச்சீட்டுக்களை ஒதுக்கிக் கொள்ளுங்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

புகையிரதம்புதையலாமா?

புதையிரதம்எப்படி ஓடும்?

காலப்போக்கில் சீர்செய்யப்படுவதாய் இது அமைய வேண்டுமென நாம் பிரார்த்திக்கின்றோம். இன்னுமொன்று, நேரத்தை முகாமை செய்யும் நேரக்கணிப்பாளர் காரியாலயம் (காரியாலம்). ஆலயம்ஆலமாகி விட்டது கவனத்துக்குரியது. இவை பெரியதொரு பிழையென்று நான் குறிப்பிடாவிட்டாலும், வாசிப்பு அருகித் தோற்றுப்போவதற்கும் இவை வழி சமைக்கும் என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். அல்லாமலும் அடுத்த சந்ததிக்காகத் திருத்தியே கொடுக்கப்பட வேண்டும்.

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

## அவசியம், அவசரம் திருத்தப்படவேண்டிய பிரப்பங்குளம் வீதியும் பி.ஏ.தம்பி லேனும்

மாநகரசபைக்கு உட்பட்ட ஓடை லேன்,ஓட்டுமடம்வீதி,பிரப்பங்குளம் லேன்,கோபால்லேன்முதலானவீதிகளைத்திருத்தம்செய்துஅபிவிருத்தி செய்தமைக்கு மிகவும் நன்றிகள்.

அதேபோன்று பிரப்பங்குளம் வீதி, பி.ஏ.தம்பிலேன் என்பனவற்றையும் மிகவிரைவில் அபிவிருத்தி செய்து தரும் வண்ணம் தயவுடன் வேண்டுகிறோம்.

பிரப்பங்குளம் வீதியில் உள்ள பள்ளங்களில் தினமும் பலர் விழுந்தும் அடிபட்டும் பாதிக்கப்படுகின்றனர். மேலும் பி.ஏ.தம்பிலேனிலும் பல பள்ளங்கள்உள்ளதால் பலரும் பாதிக்கப்படுகின்றனர். வீதி அபிவிருத்தி செய்ய நிதி இல்லாது போனால்தயவுசெய்துஅதில்உள்ள கிடங்குகளையாவது நிரப்பி உதவி செய்யவும்.

**இ.குமாரசாமி சர்மா.**

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# இந்தச் சந்தர்ப்பம் இனிக் கிடைக்காது

இம்மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்காக சர்வகட்சி, சர்வமத மற்றும் புத்திஜீவிகளின் மாநாடுகளை விரைவில் கூட்டவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது கூறியிருந்தார்.

இத்தகைய மாநாடுகள், சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கன்றி நடவடிக்கை எடுப்பதைத் தள்ளிப் போடுவதற்காகவும், வேண்டுமென்றே தாமதிப்புகளை மேற்கொள்வதற்காகவுமே பயன்படுத்தப்பட்டன என்பதை இலங்கையின் கடந்தகால வரலாறுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இதற்கு கடந்த ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட சர்வகட்சி மாநாடும் அதன் பெறுபேறுகளும் சான்றாகும்.

போரிலே வெற்றிபெற்றதையடுத்து பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் முன்னெப்போதுமில்லாத வகையில் பேராதரவைக் கொண்டிருந்தவர் மகிந்த ராஜபக்ச.

ஜே.ஆர். ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும்' மாற்றுவதைத் தவிர பெரும் அதிகாரங்கள் செறிந்த நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை அலங்கரித்திருந்த மகிந்த ராஜபக்ச, 18ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலமாக உச்சபட்ச அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியாக விளங்கினார்.

உச்சபட்ச அதிகாரங்களும் போர்வெற்றி தந்த பேராதரவும் கையிலிருந்த நிலையில் மகிந்த விரும்பியிருந்தால் இனப் பிரச்சினைக்கு மிக விரைவாகத் தீர்வை முன்வைத்திருக்க முடியும். தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி விரைவாகப் போரை முடிவுக்கு கொண்டுவந்த மகிந்த, இனப் பிரச்சினைக்கு விரைவாகவோ, அன்றேல் ஒருபோதுமே தீர்வு காணப்படுவதை விரும்பாமை காரணமாகவே சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருந்தமை தற்போது தெளிவாகின்றது. காலத்தை இழுத்தடிக்கும் பொறிமுறையே சர்வகட்சி மாநாடு. 2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் திகதி சர்வ கட்சிப் பிரதிநிதிகள் மாநாடு மகிந்தவால் கூட்டப்பட்டவேளை முதலாக ஏறத்தாழ ஒவ்வொரு வாரமும் 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை நடைபெற்றது.

ஒட்டுமொத்தமாக 128 தடவைகள் இந்த அமர்வுகள் இடம்பெற்றன. சர்வகட்சிக்குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரணவால் இதன் முடிவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை கிடப்பிலேயே போடப்பட்டது. எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை. போர் நடந்தபோது சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக- இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான பூரணமான அணுகுமுறைக்கு வித்திடக்கூடிய உள்நாட்டில் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் சாசன உருவாக்கத்திற்காகவே சர்வகட்சிப் பிரதிநிதிகள் மாநாடு எனக் கூறப்பட்டது. ஆனால், போர் முடிந்த பின்னர் அது வெறும் கண்துடைப்பு நாடகம் என்பது வெளிச்சமானது.

ஜெனிவாத் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைவாக செயற்படுவதை அரசியல் திராணியுடன் முன்னெடுப்பதைத் தவிர்த்து, இந்த அரசும் ஜனாதிபதியும் சர்வகட்சி மாநாட்டையும் இதர மாநாடுகளையும் கூட்டிக்கொண்டிருந்தால் வெறுமனே காலவிரயமே ஏற்படும். இதனால் ஆக்கபூர்வமாக எதையும் செயற்படுத்துவது சாத்தியமற்றது என்பதை வரலாறு உணர்த்தி நிற்கின்றது.

கடந்த அரசாங்கங்கள்தான் அப்படிச் செய்தன,ஆனால் புதிய நல்லாட்சி அரசில் அப்படி நடக்காது, நம்பிக்கை வைப்பது முக்கியம் எனக் கூறுபவர்கள், பழைய அரசில் நடந்த பல ஏற்க முடியாத விடயங்கள் ஏற்கனவே இந்த நல்லாட்சிப் போர்வை போர்த்திய அரசிலும் நடந்துள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

மஹிந்த தனது குடும்பத்தினரையும் ஆதரவாளர்களையும் அரச செலவில் வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களுக்கு அழைத்துப் போவதாகக் கூறியவர்கள், தற்போது சிறிசேன தனது மகனை நியூயோர்க் அழைத்துப் போனதையும் மகிந்தவுக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்டதைப் போன்ற வரவேற்பு விமான நிலையத்தில் மைத்திரிக்கு வழங்கப்பட்டதையும் கட் அவுட்' கலாசாரம் மீண்டும் அரங்கேற்றப்படுவதையும் ஆள்கள் மாறினாலும் அரசின் போக்கு மாறவில்லை என்பதற்குச் சான்றாகக் கூறுகின்றனர்.

இதுமட்டுமா?

சிறிய அமைச்சரவை என்ற தேர்தல் வாக்குறுதி அப்பட்டமாக தேசிய அரசு என்ற பெயரைப் பயன்படுத்தி மீறப்பட்டு விட்டது. தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் தேசியப் பட்டியல் மூலமாக பின்கதவால் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டமை மட்டுமின்றி செருப்பால் அடித்தாற்போல அமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டுவிட்டனர். ஜனவரி 8 தேர்தல் வெற்றியை அடுத்து நல்லாட்சி அரசால் ஆரம்பிக்கப்பட்ட பல வழக்கு விசாரணைகள் முன்னேற்றமின்றியும், முற்றுப்பெறாமலும் முடக்கப்பட்டுக் கிடக்கின்றன.

குற்றவாளிகள் தொடர்ந்தும் தண்டிக்கப்படாது நீதியை எதிர்பார்க்காது செய்யும் நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலையில் நல்லாட்சி அரசின் மீதான நம்பகத் தன்மையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. முக்கிய விடயங்களில் உடன் நடவடிக்கை எடுக்காமல் இழுத்தடிப்புத் தந்திரத்தைக் கடைப்பிடித்தால் எதிர்பார்ப்புகள் எல்லாம் விரைவாக தவிடுபொடியாகிவிடும். கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில் நீதியை நிலை நாட்டி நல்லிணக்கத்தைஉறுதிப்படுத்தாது விட்டால் வேறெப்போதும் இந்தச் சந்தர்ப்பம் கிடைக்காது போய்விடலாம்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிங்களவர்- தமிழர் மத்தியில் நல்லிணக்கத்தை உருவாக்க...

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் மரமாகவும், சிறுபான்மை இன மக்கள் கொடியாகவும் இணைந்து வாழ்வதே தேசிய ஒருமைப்பாடு என்ற கருத்து, இந்த நாட்டில் பலர் மத்தியிலும் இருந்து வந்திருக்கிறது.

ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் அதனை ஏற்கவில்லை. இப்போதும் அதனை ஏற்க முடியாது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் தமிழ் பேசும் மக்கள் பன்னெடுங் காலமாக இந்தப் பிரதேசங்களில் பெரும்பான்மை இன மக்களாகவே வாழ்ந்து வந்துள்ளார்கள், வாழ்ந்து வருகின்றார்கள்.

தேசிய ஒருமைப்பாடு என்ற எண்ணக்கரு, இந்த நாட்டில் பலர் மத்தியிலும் நிலவி வந்துள்ளது. ஆனால் வடக்கு, கிழக்கு வாழ் மக்கள், அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் சிங்கள மக்களின் தலைவர்களான சேர்.ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ஜே.சமரவிக்கிரம ஆகியோரும் இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வடக்கு, கிழக்கில் எப்போதுமே தமிழ் மக்களே பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்துள்ளார்கள் என்று எடுத்தியம்பி உள்ளனர்.

எமது மக்கள் மதிப்புடனும் மரியாதையுடனும் வாழவேண்டும் ஆயின், எம்மை அவ்வாறான சிறப்புக்களுடன் ஏற்க வேண்டும்.

இரண்டு மரங்கள் ஒருமித்து, ஆனால் பக்கம் பக்கமாக வாழ்வது போன்று சிங்கள தமிழ் மக்கள் வாழவேண்டும் என்பதையே, எமது மக்கள் விரும்புகிறார்கள். பிறிதொரு மரத்தின் கொடியாக வளைந்திருப்பதற்கு அவர்கள் ஒருபோதும் விரும்பியதில்லை.

மேற்போந்த காத்திரமான கருத்தை வெளிப்படுத்தி உள்ளார் வடமாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன். அதுவும் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தமக்குஅருகில் வைத்துக்கொண்டே தமது கருத்தை-- நிலைப்பாட்டை-- வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ஊன்றி, உரத்துக் கூறி உள்ளார்.

கிளிநொச்சி, இரணைமடுவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற நிகழ்வின் போது, தாம் நிகழ்த்திய வரவேற்புரையின் போதே, முதலமைச்சர் தமது மேற்போந்த ஆணித்தரமான கருத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவரான டி.பி.விஜேதுங்க ஒரு தருணத்தில், சிங்கள மக்கள் மரம் என்றும் தமிழ் மக்கள் அந்த மரத்தில் படரும் கொடி என்றும் ஒவ்வாத உவமானத்தை வெளியிட்டிருந்தார்.

அதனை மனதில் வைத்து, வடமாகாண சபையின் முதல்வர், தக்க தருணத்தில், இப்போதைய ஜனாதிபதியை மேடையில் வைத்துக்கொண்டு மேற்போந்த மறுதலிப்பு விவரத்தை வெளியிட்டிருக்கிறார்.

நல்லிணக்கம் என்பது சுக்கும் அல்ல மிளகும் அல்ல. நாடாளுமன்றின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்த லிங்கம், தமது வீச்சான, வீறுகொண்ட பேச்சுக் களின் போது,--

சுதந்திரம் என்பது, என்ன சுக்கா, மிளகா என்று அடிக்கடி, அவர் மேடைகளில் பேசியமை ஞாபகத்துக்கு வருகிறது.

முதல் அமைச்சரும் அதற்குச் சமாந்தரமான கருத்தை வெளிப்படுத்தி இருப்பதும் இங்கே தொட்டுக்காட்டப்பட வேண்டிய ஒன்றே.

நல்லிணக்கம் என்பது உதட்டில் இருந்து பிறக்கும் வார்த்தை அல்ல. உள்ளத்தில் இருந்து நல்லிணக்க சமிக்ஞைகள் வெளிப்படும் போதே, உண்மையான நல்லிணக்கத்திற்கு அடித்தளம் கட்டப்படும்.

நல்லிணக்கத்தை உருவாக்க உண்மை கண்டறியப்பட வேண்டும். அதற்கான பொறிமுறை அத்தியாவசியம்.

அவற்றைச் செயலில் காட்டுவதற்கான உகந்த தருணம் உதித்துள்ளது. நாட்டு மக்களை அந்தப் பாதையில் நடத்திச் செல்லும் மிகப் பெரும் பொறுப்பு, முழுக்க முழுக்க, அரச தலைவர் -நாட்டின் தலைவர்- நல்லாட்சித் தலைவர்- ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடமே பிறக்க வேண்டும். அதற்கான ஆரம்பம் எப்போது.....?



# தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு இனியும் தாமதம் ஏன்?

சேரலாதன்

தீவிரவாத அமைப்புக்கள் உலகின் போக்கை நிர்ணயிக்கக்கூடிய சக்திகளாக உருவெடுத்து வருகின்றமை எதிர்காலத்தில் பெரும் சவால்களை ஏற்படுத்திவிடப் போகின்றது.

குறிப்பாக முஸ்லிம் தீவிரவாதம், முன் எப்போதும் இல்லாத வகையில் வளர்ச்சியடைந்து காணப்படுவதுடன் உலகம் பூராகவும் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் அவற்றின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

தற்போது சிரியா, ஈராக் ஆகிய நாடுகளின் பிரதேசங்கள் சிலவற்றைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்து, இஸ்லாமிய தேசமென்ற ஒன்றை உருவாக்கி, மனித குலத்துக்கே விரோதமான வகையில் ஈவிரக்கமற்ற வகையிலான கொலைகளைப் புரிந்து வரும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு அதன் குரூரக் கரங்களை உலகின் வேறுபகுதிகளுக்கும் நீட்டி வருகின்றது.

முன்பெல்லாம் அல்கொய்தா, தலிபான் ஆகிய முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களே உலகுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் தமது பயங்கரவாதச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தன. ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு தலிபான்கள் பலம் பெற்று விளங்கினார்கள். பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானுக்கு அருகில் அமைந்திருந்ததால் தலிபான்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போய் விட்டது. ஆனால் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஆப்கானிஸ்தானில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லேடன் தலைமையிலான அல்கொய்தா தீவிரவாதிகள் அமெரிக்கா மீது தாக்குதல்களை மேற்கொண்டதால் வெகுண்டெழுந்த அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது மிகக் கடுமையான தாக்குதல்களைத் தொடுத்தது. அல்கொய்தாவுக்கு அடைக்கலம் வழங்கிய தலிபான்கள் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டனர். அல்கொய்தா தீவிரவாதிகள் பலரும் கொன்றொழிக்கப்பட்டனர். ஆனால் தீவிரவாதிகளை முழுமையாக அழிக்க முடியவில்லை. தலிபான்கள் ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் மறைந்து இருந்து கொண்டு அவ்வப்போது தமது தீவிரவாதத் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தனர். பாகிஸ்தானின் ஆசிர்வாதத்துடன் அந்த நாட்டில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லேடனை பல ஆண்டுகளுக்குப் பின்னரே அமெரிக்கப் படைகளால் கொல்ல முடிந்தது. இதன் மூலமாக பாகிஸ்தானின் பொய்முகமூடி கிழித்தெறியப்பட்டது. பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண் பாகிஸ்தான் என்பதும் நிரூபணமானது. இந்தியாவுடனான காஷ்மீர் பிரச்சினையை சாட்டாக வைத்து பாகிஸ்தான், தீவிரவாத இயக்கங்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றமை அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு நன்கு தெரியும். ஆனால் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கென ஆண்டுதோறும் பெரும் நிதியை அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு வழங்கி வருகின்றது. ஆனால் பாகிஸ்தானில் பயங்கரவாதம் ஒழிக்கப்படுவதாகத் தெரியவில்லை. மாறாக பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்துச் செல்வதையே காண முடிகின்றது.

காஷ்மீரில் இந்தியப் படையினரின் அத்துமீறிய செயல்களால் கொதித்துப்போன பாகிஸ்தானுக்கு ஆதரவான தீவிரவாதக் குழுக்கள் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன. ஒரே நாடாக இருந்து இந்தியாவும், பாகிஸ்தானும் வெவ்வேறு நாடுகளாக உருவான நாளிலிருந்து காஷ்மீர் பிரச்சினை தொடர்ந்து கொண்டே வருகின்றது. சுமார் 70 வருடங்களாகப் புரையோடிப்போய்க் கிடக்கும் காஷ்மீர் பிரச்சினை இந்திய, பாகிஸ்தான் நாடுகளின் நிம்மதியைக் குலைத்து வருவதுடன் அடிக்கடி மோதல்களுக்கும் வழிவகுத்து வருகின்றது. இந்தியா தனது கோரமான முகம் வெளியில் தெரிந்துவிடுமோ என்ற அச்சத்தின் காரண மாக காஷ்மீர் பிரச்சினையில் வெளிநாடுகள் சமரச முயற்சிகளில் ஈடுபடுவதை விரும்பாது தடுத்து வரு கின்றது.

அமெரிக்கா மீதான அல் கொய்தாவின் தாக்குதலின் பின்னரே விடுதலைப் புலிகளுக்கு எதிரான அழுத்தங்கள் முனைப்புப்பெற ஆரம்பித்தன. புலிகளும் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அமெரிக் காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் புலிகளுக்குத் தடை விதிக்கப்பட்டது. இறுதிப்போரில் புலிகள் தோற்கடிக்கப்பட்டதற்கும் இதுவே பிரதானமான காரணமாகும். இலங்கை அரசும் இனப்பிரச்சினையை மூடி மறைத்து புலிகளுக்குப் பயங்கரவாதப் பட்டம் சூட்டிக் காரியத்தைச் சாதிப்பதிலேயே குறியாக இருந்தது. சாதித்தும் விட்டது. இதில் வேதனை என்னவென்றால் ஒரு தமிழரின் நாமத்தைத் தாங்கிநின்ற லக்ஸ்மன் கதிர்காமர் தமது இனத்தின் இன்னல்களைக் கருத்தில் கொள்ளாது, அவர்களின் துயரங்களில் பங்கெடுக்காது இலங்கை அரசைக் காப்பாற்றுவதற்காகத் தம்மை அர்ப்பணித்து பெரும் சேவையாற்றினார். இவரும் ஒரு தமிழர் என்ற வகையில் இவரது சொல்லுக்கு வெளிநாடுகள் செவி சாய்த்ததன் விளைவுகளையே இறுதிப்போரின் போது இலங்கைத் தமிழர்கள் அனுபவித்தனர்.

பெரும் வளர்ச்சியும், அறிவு முதிர்ச்சியும் பெற்றுவிட்டதாகக் கூறுகின்ற உலக நாடுகள் இனப் பிரச்சினைக்கான போராட்டத்துக்கும், பயங்கரவாதத்துக்கும் வேறுபாடு காணாமல் போனமை இலங்கைத் தமிழர்களின் துரதிர்ஷ்டம் என்றுதான் கூறவேண்டும். ஆனால் இதே நாடுகள் இன்று ஐ.எஸ். தீவிரவாதிகளின் வெறியாட்டத்தைக் கண்டு கொண்ட பின்னரும் அடக்கி வாசித்துக் கொண்டிருக்கின்றன. ஐ.எஸ்.தீவிரவாதிகள் இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மீது குறிவைத்துக் கொண்டிருப்பதை அதன் தொடர்பாடல்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் உலகின் பல பாகங்களிலிருந்தும் பலர் இந்த இயக்கத்தில் இணைந்து வருகின்றனர். எதிர்காலத்தில் இதன் விளைவுகள் பயங்கரமானவைகளாக மாறிவிடப் போகின்றன. உலகம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே ஐ.எஸ் இன் நோக்கமாகும். பரந்துபட்ட இஸ்லாமிய தேசமே அதன் இலட்சியமாகவும் அமைந்துள்ளது. ஆகவே உலக நாடுகள் விழித்தெழ வேண்டிய தருணம் இதுதான். ஆனால் அவை இன்னமும் விழிப்பதாகத் தெரியவில்லை.

இந்திய எல்லைப் பகுதியில் நிலவுகின்ற பதற்றமான சூழ்நிலை தீவிரவாதிகளுக்குச் சாதகமாக அமைந்து விடப் போகின்றது. இதனால் பாதிக்கப்படப் போவது அப்பாவிப் பொதுமக்கள்தான் என்பதையும் மறந்து விட முடியாது. இலங்கையின் இனப்பிரச்சினையைத் திசைதிருப்பி புலிகளை ஒழிப்பதற்கு உதவிய இந்தியா போரின் பின்னர் இலங்கைத் தமிழர்களை நட்டாற்றில் கைவிட்டுச் சென்றதை மானமுள்ள தமிழர்கள் மறந்து விட மாட்டார்கள். இந்தியா, தான் புரிந்த வஞ்சகத்தின் விளைவுகளை என்றோ ஒருநாள் அனுபவித்தே தீர வேண்டும். அது தீவிரவாதிகளின் உருவிலும் நிறைவேற்றப்படலாம்.

இது ஒருபுறமிருக்க தீவிரவாதத்தைச் சரியாக இனம் கண்டு அதனை முற்று முழுதாக ஒழிக்காதுவிட்டால் இந்த உலகின் எதிர்காலமே இருள் சூழ்ந்ததாக மாறி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுக்களில் ராஜபக்ச சார்பு அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லை

சண்டே ரைம்ஸ்
கட்டுரையிலிருந்து ரெங்கன்

**ராஜபக்ச சார்பு அதிகாரிகள் இன்னமும் சில அமைச்சுக்களில் இருந்து கொண்டு இப்போதைய அரசுக்கு ஒத்துழைக்கிறார்கள் இல்லை. அந்த வகையில் வெளியுறவு அமைச்சிலுள்ள சிலர் குறித்துப் பிரதமர் கவலை. ஜப்பானிலிருந்து திரும்பிய பின் நிலைமை ஆராயப்படும்.**


ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி மாக்ஸ்வெல் பரணகம தலைமையில் காணாமற்போனவர்கள் தொடர்பான விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் நடத்திய பாதுகாப்பு மற்றும் பொலிஸ் துறையைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் கூட்டமொன்றில் தெரிவித்தார். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணிமனையால் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகள் தொடர்பாகப் பிரதமர் அவர்களுக்கு ஒரு கருத்தோட்டமான விளக்கத்தைக் கொடுத்தார். உள்ளக விசாரணை ஒன்று ஆரம்பமாகும் என்று தெரிவித்த பிரதமர் முன்னைய அரசு, அறிக்கைகள் மீது எதுவித நடவடிக்கையிலும் இறங்கவில்லை என்றார். அதனால் இப்போதைய அரசின் மீது அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் அதன் பரிந்துரைகள் தொடர்பாக பிரதமர் குறிப்பிட்டார். காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்திய பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையில் சில இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் இடம்பெற்றிருப்பதாகத் தாம் அறிவதாகக் குறிப்பிட்ட அவர், அவர்கள் யார் என்பதைக் கூறமுடியாமல் இருப்பதாகவும் கூறினார்.

கடந்த வாரம் ஜெனிவாவில் நடைபெற்ற விவாதத்தின்போது இந்த ஆணைக்குழுவின் நம்பகத்தன்மை மற்றும் செயற்திறமை குறித்து விரிவான கவலைகள் தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஆணையாளர் செயிட் அல் ஹுசேன் தெரிவித்திருந்தார். இந்த ஆணைக்குழு கலைக்கப்பட வேண்டும். அதன் விசாரணைக்காக எஞ்சியுள்ள் வழக்குகள் காணாமற்போனவர்களின் குடும்பங்களுடனான கலந்துரையாடலின் பின்னர் நியமிக்கப்படும் நம்பகமான சுயாதீன அமைப்புக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி நிசங்க உடலகம தலைமையிலான ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருப்பதாக அந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் அறிவித்தார்.

இந்த ஆணைக்குழு தனது விசாரணையை 2009 ஆம் ஆண்டு முடித்திருந்தது. முன்னாள் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை, பிரெஞ்சு அரசுசாரா நிறுவனம் ஒன்றின் 17 பணியாளர்கள் மூதூரில் கொல்லப்பட்டமை, திருகோணமலையில் 5 இளைஞர்கள் கொல்லப்பட்டமை மற்றும் 2006 ஓகஸ்ட் 28 ஆம் திகதி அல்லைப்பிட்டியில் வண. நிகால் ஜிம் பிரவுண் பிலிப் குருவானவர் காணாமற்போனமை போன்றவற்றின் விசாரணை விவரங்கள் இந்த அறிக்கையில் காணப்படுவதாகத் தெரிகின்றது.

**அரசமைப்பின்படி உள்ளக விசாரணை**

கடந்த வாரம் வெள்ளிக்கிழமை ஐ.நா. மாநாட்டில் கலந்துவிட்டு இலங்கை திரும்பியிருந்த ஜனாதிபதி சிறிசேன செய்தியாளர் மாநாடொன்றில் அறிக்கை ஒன்றை விடுத்தார். ஆனால் கேள்விகள் எதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை. போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிப்பதற்காக உள்ளகப் பொறிமுறை ஒன்று அரசமைப்பின் பிரகாரம் ஏற்படுத்தப்படும், பதிவு செய்யப்பட்ட கட்சிகளைக் கொண்ட அனைத்துக் கட்சி மாநாடொன்றை நடத்தி அவர்களின் கருத்துக்களும் அறிந்து கொள்ளப்படும்.



## பிரதமர் ரணில் கவலை; நாடு திரும்பியதும் நடவடிக்கை

சமயத் தலைவர்களின் கருத்துக்கள் மற்றும் புத்திஜீவிகளின் கருத்துக்களும் பெற்றுக் கொள்ளப்படும் என்றார். ஜனவரி 8 ஆம் திகதிய ஜனாதிபதித் தேர்தலை அடுத்து சர்வதேச அபிப்பிராயத்தை எமது தேசத்தின் மீது திருப்பிக் கொள்ள முடிந்துள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார்.

வெள்ளிக்கிழமை இரவே நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார். ஆனால் அதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த உரை குறித்து திருப்தி கொள்ளாததால் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை அவர் நடத்தியிருந்தார்.

போரின் கடைசிக்கட்டத்தில் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்களான இராணுவ அதிகாரிகளின் கூட்டமொன்றில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க பேசியபோது தாங்கள் குற்றமிழைத்ததாக விசாரணையின்போது தீர்மானிக்கப்படும் பட்சத்தில் தண்டிக்கப்படுவார்களா எனக் கேள்வி எழுப்பினார்கள். அமைச்சர் பதிலளிக்கையில் இராணுவமானது ஒரு தேசிய நிறுவனம். அதனைக் காப்பாற்ற வேண்டியது அரசின் கடமை. இராணுவம் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டிருந்தது. அது உலகம் முழுவதிலுமான சட்டரீதியிலான செயற்பாடே. ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டிருப்பதற்கு இணங்க சில குற்றச்சாட்டுக்கள் தொடர்பான செயற்பாடுகளுக்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு அரசின் மீது விழுந்துள்ளது. எனவே தவறு செய்தது யார், சட்டத்துக்கு மாறான கட்டளை இட்டது யார் என்பதைக் கண்டுபிடிப்பதே நோக்கமாகும். எவரும் கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால் எவரையும் தேடிச்சென்று குற்றஞ்சாட்டப்பட மாட்டாது. பதில் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில்; போர்க் குற்றங்கள் புரிந்ததாக மனித உரிமை ஆணையாளர் பணிமனை அறிக்கையில் முழு இராணுவத்தையும் குற்றஞ்சாட்டுவதாக எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. இராணுவத்தை, அதன் [illegible] இந்த அரசின் [illegible] என்று கூறினார்.

13 நாடுகளின் இணை அனுசரணையுடன் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்ட 6 பக்க ஆவணத்தில் காணப்படும் 23 முகவுரைப் பந்திகளில் ஒன்றில் நம்பகமான தேசிய பொறுப்புக்கூறும் செயல்முறை காணப்படாததன் காரணமாகவே நடைபெற்றுள்ள பாரதூரமான மீறல்கள் மற்றும் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் தொடர்பாகத் தீர்மானம் விசாரணைகளை வலியுறுத்த நேர்ந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தீர்மானத்தின் முக்கிய பகுதியில் பின்வரும் அம்சம் அடங்கியுள்ளது.

நீதியான ஓர் அமைப்புக்குள் இலங்கையிலுள்ள சகல தரப்பு மக்கள் இடையில் சட்டத்தின் ஆட்சியை மேம்படுத்தி நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது முக்கியம் என்பதை அரசு அங்கீகரித்திருப்பது வரவேற்கப்படுகின்றது. இலங்கை அரசானது, சர்வதேச மனிதாபிமானச் சட்டமீறல்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் ஆகியவற்றை விசாரிப்பதற்காக சிறப்பு நிபுணர்களைக் கொண்ட சட்டப்பொறி முறையொன்றை நிறுவுவதற்கு ஆலோசித்திருப்பது கவனத்தில் எடுக்கப்படுவதுடன் பாராட்டவும் செய்கிறது. அந்தவகையில் கண்ணியத்துக்கும் பக்கம்சாராமைக்கும் நன்கு அறியப்பட்ட பிரமுகர்களின் தலைமையில் சுயாதீனமான விசாரணை நிறுவனங்களையும் உள்ளடக்கியதாக அந்த நம்பகமான நீதித்துறைச் செயற்பாடு அமைய வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

இவ்வாறான இலங்கையின் நீதித்துறை பொறி அமைப்பில் சிறப்பு சட்டவாளர்களின் காரியாலயம், பொது நலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், எதிர்த்தரப்பு சட்டவாளர்கள் மற்றும் அதிகாரம் பெற்ற வழக்குத் தொடுநர்கள், புலனாய்வாளர்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதன் அவசியத்தையும் உறுதிப்படுத்துகின்றது.

தீர்மானத்தின் பல்வேறு அம்சங்களும் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பதை மனித உரிமை ஆணையாளர் சபையின் 32ஆவது மாநாட்டில் வாய்மூலமாகவும் 2017 மார்ச் மாதம் நடைபெறும் 34 ஆவது மாநாட்டில் விரிவான அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

**வெளியுறவு அமைச்சு அதிகாரிகளின் போக்கு;**
**பிரதமர் கவலை.**

வெளியுறவு அமைச்சிலுள்ள சில அதிகாரிகள் முன்னைய அரசுக்கு விசுவாசமாக இருந்தவர்கள். இப்போதைய அரசுடன் ஒத்துழைக்கிறார்கள் இல்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெரும் கவலை கொண்டிருக்கிறார். அரசின் உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து இது தெரியவந்துள்ளது. அண்மையில் பிரதமர் இந்தியாவுக்குச் செல்ல இருந்த சமயம் அவருக்கு வழங்கப்பட்டிருந்த ஓர் அறிக்கை குறித்து பிரதமர் ஏமாற்றம் தெரிவித்திருந்தார். அதன்பிறகு இவ்வாறான அறிக்கைகளை அந்த அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்வதில்லை என்று தெரிவித்துள்ளார். பிரதமர் ஜப்பானிலிருந்து திரும்பியதன் பின்னர் வெளியுறவு அமைச்சில் நிலவும் இந்த நிலைமை குறித்து அமைச்சர் மங்கள சமரவீரவுடன் ஆராய இருப் பதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பிரதமர் வெளியுறவு அமைச்சருடன் கலந்தாலோசிக்க இருக்கும் விடயங்களில் ஜெனிவாவிலுள்ள இலங்கைத்தூதுவர் ஆரியசிங்க தொடர்பானவையும் அடங்கும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 40 | 60 | 60 | 25 |
| கத்தரி | 60 | 60 | 60 | 50 | 40–60 | 80 | 80 | 30 |
| கரட் | 60 | 80 | 60–120 | 80 | 60–120 | 120 | 100 | 100 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 50 | 40–50 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 50 | 60 | 70 | 60 | 80–90 | 120 | 100 | 50 |
| பாகல் | 80 | 100 | 140 | 100 | 100–120 | 130 | 110 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 | 70–80 | 100 | 120 | 70–80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 120 | 80–90 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 110 | 120 | 80–120 | 140 | 100 | 100 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 35–40 | 80 | 50 | 30 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 | 50–60 | 120 | 80 | 90 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 70–80 | 60 | 60 | 30 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 15–20 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 20 | 20–25 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 140 | 160 | 140 | 160–180 | 200 | 200 | 100–120 |
| புடோல் | 50 | 60 | 40 | 50 | 40–50 | 60 | 60 | 30 |
| கோவா | 60 | 80 | 80 | 70 | 40–60 | 80 | 100 | 40–50 |
| வெண்டி | 50 | 40 | 60 | 60 | 70–80 | 60 | 50 | 30 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 140 | 140 | 200 | 160 | 120–140 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 80 | 50–60 | 120 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 60 | 50 | 60 | 45–60 | 40 | 35–40 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–120 | 120 | 100 | 80–120 |
| தேசிக்காய் | 160 | 200 | 240 | 300 | 220–240 | 400 | 160 | 250 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 15 | 08–10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 80 | 80–100 | 120 | 120 | 70–80 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | 180 | 80–90 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 60 | 80–70 | 80 | 120 | 70 |

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 800 | 800 | 800 | 800 | 600 | 600 |
| நண்டு | 300 | 450 | 400 | 400 | 300 | 400 |
| கணவாய் | 500 | 600 | 600 | 600 | 600 | – |
| பாரை | 500 | 500 | 500 | 500 | 400 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 650 | 400 | 450 |
| சீலா | 250 | 500 | 400 | 400 | 400 | – |
| விளை | 550 | 450 | 400 | 450 | 460 | 350 |
| முரல் | 300 | 400 | 400 | 350 | 300 | – |
| கும்பிளா | 350 | 400 | 400 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | 300 | 500 | 300 | – |
| ஒரா | 300 | 400 | 350 | 400 | 400 | 350 |
| திரளி | 200 | 300 | 250 | 300 | 100 | – |
| நகரை | 150 | 250 | 200 | 300 | 150 | 300 |
| சூடை | 100 | 150 | 100 | 120 | 120 | – |
| ஒட்டி | 200 | 200 | 250 | 300 | 200 | 250 |
| திருக்கை | 150 | 300 | 250 | 280 | 200 | 130 |
| பாலை | 350 | 250 | – | 400 | 250 | – |
| வாழை | 100 | 150 | – | 300 | 150 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 120 | – |
| மதனம் | 150 | 200 | 200 | 250 | 200 | 250 |

# மருத்துவக் குணங்கள் தேங்காயிலும்..!



**தேங்காயில் உள்ள ஃபேட்டி அசிட் உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் கரைக்கிறது, உடல் எடையைக் குறைக்கிறது என்று சமீபத்திய ஓர் ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என நேற்றைய உதயனில் தெரிவித்திருந்தோம் அதன் தொடர்ச்சி வருமாறு:–**

இந்தப் ஃபேட்டி அசிட் உடலின் வளர்ச்சி மாற்றத்துக்கு பெரிதும் உதவுகிறது. இதன் மூலம் சக்தியை அதிகப்படுத்துகிறது.

முற்றிய தேங்காய் ஆண்மைப் பெருக்கியாகப் பயன்படுகிறது. அதில் வைட்டமின், முதுமையைத் தடுக்கிறது. தைராய்டு சுரப்பின் செயல்பாட்டை ஊக்கப்படுத்துகிறது. குழந்தை சிவப்பு நிறமாக, குழந்தைகள் நல்ல நிறமாக பிறக்க வேண்டும் என்பதற் காக குங்குமப்பூ சாப்பிடுவது வழக்கம். அதுபோல் குழந்தை நல்ல நிறமாகப் பிறக்க தேங்காய்ப் பூவைச் சாறாக்கி கர்ப்பிணிகளுக்குக் கொடுக்கும் வழக்கமும் உள்ளது.

மனித குலத்துக்கு இயற்கை தந்த பொக்கிஷம் இளநீர். சுத்தமான சுவையான பானம். இளநீரில், செவ்விளநீர், பச்சை இளநீர், இரத்த சிவப்பில் உள்ள இளநீர் எனப் பல்வேறு வகைகள் உள்ளன. இளநீரில் எல்லா வகையிலும் மருத்துவக் குணங்கள் நிறைந்துள்ளன.

அளவுக்கு அதிகமாக உள்ள வாதம், பித்தம், கபத்தைத் தீர்க்கும் மருந்து இளநீர். வெப்பத்தைத் தணிக்கும். உடலில் நீர்ச்சத்து குறையும் நிலையில் அதைச் சரி செய்யும். ஜீரண சக்தியை அதிகரிக்கும். இளநீர் குடல் புழுக்களை அழிக்கிறது. இளநீரின் உப்புத் தன்மை, வழுவழுப்புத்தன்மை காரணமாக வாந்திபேதி நோயாளிகளுக்கு நல்ல சத்து. ஆற்றல் வாய்ந்த கரிமப் பொருள்கள் இளநீரில் உள்ளன. அவசர நிலையில் நோயாளிகளுக்கு இளநீரை சிரை மூலம் செலுத்தலாம். இளநீர் மிக மிகச் சுத்தமானது.

இரத்தத்தில் உள்ள பிளாஸ்மாவுக்கு சிறந்த மாற்றுப் பொருளாக இளநீர் பயன்படுத்தப் படுகிறது. ரத்தத்தில் கலந்துள்ள நச்சுப் பொருள்களை அகற்ற இளநீர் பயன்படுகிறது. இளநீரிலிருந்து தயாரிக்கப்படும் ஜெல் என்ற பொருள் கண் நோய்களுக்குச் சிறந்த மருந்து. இளநீரில் அதிக அளவில் சத்துக்கள் உள்ளன. இளநீரை வெறும் வயிற்றில் குடிக்கக் கூடாது. ஏனெனில் அதில் உள்ள அமிலத் தன்மை வயிற்றில் புண்ணை உருவாக்கும். ஏதா வது ஆகாரம் எடுத்த பின்னரே குடிக்க வேண்டும்.

## ஆன்மிகம் விழிப்படையட்டும்




தன்னம்பிக்கை மூலம் தன்னுள் உறங்கிக் கிடக்கும் ஆன்மா விழித்துக் கொள்கிறது. கைக்கோ, வாளுக்கோ ஆற்றல் ஏது? ஆற்றல் முழுவதும் ஆன்மாவிலிருந்தே வெளிப்படுகிறது.எல்லாப் பெருமையையும், எல்லா ஆற்றலையும், எல்லாத் தூய்மையையும் ஆன்மா தூண்டுகிறதே தவிர, ஆன்மாவைத் தூண்டுவது எதுவும் இல்லை. ஆன்மிக வாழ்க்கையில் பேரின்பம் பெறாமல் போனால், புலனின்ப வாழ்க்கையில் திருப்தியடைய முடியாது. அமுதம் கிடைக்காமல் போனால் அதற்குகாகக் சாக்கடை நீரை நாடிச் செல்லமுடியாது.ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடிய போதிலும் சரி, அல்லது ஆயிரம் ஆண்டுகள் காய்கறி உணவையே உண்டு வந்தாலும் சரி, உன்னுள்ளே இருக்கும் ஆன்மிகம் விழிப்படையாவிட்டால், அதனால் ஒரு பயனும் இல்லை.

## நாளை

**புரட்டாதி-21**
**வியாழக்கிழமை**
**08.10.2015**

திதி: ஏகாதசி
மு.இ.10.38 வரை
நட்சத்திரம்:
ஆயிலியம் பி.ப.05.06 வரை
சுபநேரம்:
07.32-09.02 வரை
இராகு காலம்:
01.32-03.02 வரை
ஏகாதசி விரதம்

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | | 3 | 5 | | | | |
| | | | 8 | | 1 | | 6 | 4 |
| | | | | | | 3 | | |
| | | 2 | | | 6 | | 7 | 9 |
| | | | | 1 | | | | |
| 6 | 4 | | 5 | | | 8 | | |
| | | 8 | | | | | | |
| 3 | 9 | | 1 | | 2 | | | |
| | | | | 8 | 3 | | 5 | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 5 | 4 | 8 | 1 | 7 | 9 | 2 |
| 7 | 4 | 2 | 3 | 9 | 6 | 5 | 1 | 8 |
| 1 | 9 | 8 | 7 | 5 | 2 | 4 | 3 | 6 |
| 2 | 7 | 9 | 6 | 3 | 5 | 8 | 4 | 1 |
| 5 | 1 | 3 | 9 | 4 | 8 | 6 | 2 | 7 |
| 8 | 6 | 4 | 2 | 1 | 7 | 3 | 5 | 9 |
| 4 | 2 | 6 | 1 | 7 | 3 | 9 | 8 | 5 |
| 9 | 8 | 1 | 5 | 6 | 4 | 2 | 7 | 3 |
| 3 | 5 | 7 | 8 | 2 | 9 | 1 | 6 | 4 |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள்; பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஸ்ரேல் பாதுகாப்புப் படையினருக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பலஸ்தீனச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். ரச்சல் கல்லறை யூதக் கோவிலில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலிலேயே சிறுவன் உயிரிழந்துள்ளான் என்று கூறப்படுகின்றது. 13 வயதுடைய அப்தல் ரஹ்மான் ஷாடி என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான். அதையடுத்து அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை டல்கார்ம் பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றின்போது 18 வயதுடைய இளைஞன் ஒருவனும் அண்மையில் கொல்லப்பட்டான். (ற)

## எட்டு வயதுச் சிறுமியை சுட்டுத் தள்ளிய சிறுவன்

### செல்லப்பிராணியைப் பார்க்க அனுமதிக்காததால்

நியூயோர்க், ஒக்.7

செல்லப்பிராணிகள் தொடர்பாக எழுந்த சர்ச்சையால் 8 வயதுச் சிறுமி ஒருவர் 11 வயதுச் சிறுவனால் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் அமெரிக்காவின் டென்னிஸி மாநிலத்தில் நடந்துள்ளது.

குறித்த 11 வயதுச் சிறுவன் இளம் குற்றவாளிகள் பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளான். குறித்த சிறுமி தனது செல்லப் பிராணியை பார்ப்பதற்கு அயல் வீட்டுச் சிறுவனை அனுமதிக்கவில்லை. அதனால் கோபமடைந்த சிறுவன் தனது தந்தையின் துப்பாக்கியை எடுத்து வந்து சிறுமியைத் சுட்டுக் கொலை செய்துள்ளான். குறித்த சிறுவன் எதிர்வரும் 28 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் இடம்பெற்று வரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங் களின் தரவுகளை சேகரிக்கும் நிறுவனம் ஒன்றின் அறிக்கைகளின் படி இந்த ஆண்டில் மாத்திரம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 11 வயது மற்றும் அதற்கு குறைவான வயதுடைய 559 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.(ற)

## மருத்துவத்துக்கான நோபல் பரிசு மூவருக்கு

நோர்வே, ஒக்.7



2015 ஆம் ஆண்டுக்கான மருத்துவத்துக்கான நோபல் பரிசு, வில்லியம் சி.கம்ப் பெல், சடோசி ஓமுரா மற்றும் யுயுது ஆகிய மூவருக்கு கூட்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோபல் பரிசு இரண்டு கண்டுபிடிப்புக்களுக்காக, இரு பிரிவுகளாக பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

ஒன்று, நாக்குப்பூச்சி ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நோய்களை குணமாக்கும் சிகிச்சை முறை குறித்து ஆய்வு செய்ததற்காக வில்லியம் சி.கம்ப் பெல் மற்றும் சடோசி ஓமுரா ஆகியோருக்கும் மற்றொன்று, மலேரியாவுக்கான சிகிச்சைமுறை குறித்து கண்டுபிடிப்புகளை மேற்கொண்டதற்காக யுயுது என்ற பெண்மணிக்கும் வழங்கப்பட்டுள்ளன. (ற–ரி4)

# வெடித்துச் சிதறின கார்க் குண்டுகள்

### ஈராக்கில் 57 பேர் சாவு: பலர் காயம்

பக்தாத், ஒக்.7

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதல்களில் 57 பேர் உயிரிழந்தனர்.

பாக்தாத்தின் வடகிழக்குப் பகுதியான காலிஸபு நகரில் சன நெரிசல் மிக்க சந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலொன்றில் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவசரமாக பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது என்று பொலிஸாரிடம் தெரிவித்த ஒருவர், வீதியில் தனது காரை நிறுத்தி விட்டுச் சென்றார் என்றும், அதன்பின்னர் 5 நிமிடங்களில் கார் வெடித்துச் சிதறியது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



அதேவேளை, அல் சுபைர் நகரில் சந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலொன்றில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

மற்றொரு தாக்குதல் பக்தாத்தின் ஹுசைன் மாவட்டத்தில் நடத்தப்பட்டுள்ளது. அதில் 12 பேர் உயிரிழந்துள்ளர்.

ஈராக் மற்றும் சிரியாவின் முக்கிய பகுதிகளில் நிலை கொண்டுள்ள ஐ.எஸ். அமைப்பு இந்தத் தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்றுள்ளது. (ற)



## இயல்புக்குத் திரும்புகிறது குண்டூஸ்

காபூல், ஒக்.7

ஆப்கனின் முக்கிய நகரான குண்டூஸ் தற்போது வழமைக்குத் திரும்பி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குண்டூஸ் நகர் கடந்த வாரம் தலிபான்களால் கைப்பற்றப்பட்டிருந்தது. அதையடுத்து அந்த நகர் மீது கடும் தாக்குதலை மேற்கொண்ட ஆப்கன் அரச படைகள் அந்த நகரை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இரு தரப்புகளுக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெற்றிருந்தன. இந்த நிலையில் கடந்த சில நாள்களாக அந்த நகரில் மோதல்கள் எவையும் நடைபெறவில்லை என்றும் நகர் அரச படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதையடுத்து மக்கள் தற்போது வழமையான செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர். கடைகள் திறக்கப்பட்டு பொது மக்கள் வீதிகளில் நடமாடத் தொடங்கியுள்ளனர்.

கடும் மோதல்கள் நடைபெற்றிருந்த நிலையில் வீதிகளில் – கால்வாய்களில் உடல்கள் சிதறிக் கிடக்கின்றன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால் நகர் முழுவதும் துர்நாற்றம் வீசி வருகின்றது என்றும் படையினர் உடல்களை அகற்றும் நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்த நகர் மக்களை சுட்டிக்காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன. (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





லிபியக் கடற்கரையில் 85 மனித உடல்கள் கரையொதுங்கியுள்ளன. அவை மத்திய தரைக்கடல் ஊடாக ஐரோப்பாவுக்குச் சென்ற புகலிடக் கோரிக்கையாளர்களினுடையதாக இருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தலைநகர் திரிபோலியில் 75 உடல்களும், சர்ரட்டா நகரில் 10 உடல்களும் கரையொதுங்கியுள்ளன. அதே வேளை இறப்பர் படகுகளில் இருந்து 212 புகலிடக் கோரிக்கையாளர்கள் லிபியக் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆண்டு மட்டும் மத்திய தரைக் கடலை 5 லட்சத்து 15 ஆயிரம் புகலிடக்கோரிக்கையாளர்கள் கடந்துள்ளனர். அவர்களில் 3 ஆயிரம் பேர் வரையில் காணாமற்போயுள்ளனர் அல்லது இறந்து போயுள்ளனர் என்று ஐ.நா. அகதிகள் அலுவலகம் அறிக்கையிட்டுள்ளது. (ற-ரி4)

# நடுவானில் உயிரிழந்த விமானி; உயிர் தப்பிய 147 பயணிகள்

## உதவி விமானியின் சாமர்த்தியத்தால்

நியூயோர்க், ஒக்.7

விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த சமயம் விமானி மாரடைப்பால் இறந்துள்ளார். உதவி விமானி சாமர்த்தியமாகச் செயற்பட்டு விமானத்தைத் தரையிறக்கினார்.

அமெரிக்காவின் பீனிக்ஸ் நகரில் இருந்து போஸ்டன் நகருக்கு அமெரிக்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான எயார்-320 விமானம் பறப்பை மேற்கொண்டது. அதில் 147 பயணிகளும் ஐந்து விமானப் பணியாளர்களும் பயணித்தனர்.

சுமார் 3 ஆயிரத்து 700 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாக இந்தப் பயணம் அமைந்திருந்தது.

விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது விமானி திடீரென சுருண்டு விழுந்துள்ளார். அதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த உதவி விமானி அவருக்கு முதலுதவி அளித்தார். எனினும் அது பயனளிக்கவில்லை. விமானியின் உயிர் பிரிந்தது.

அதையடுத்துத் துரிதமாகச் செயற்பட்ட உதவி விமானி விமானத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். தரைக் கட்டுப்பாட்டு அறையைத் தொடர்புகொண்ட அவர் நிலைமையை விளக்கி உடன் தரையிறங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரினார்.

அதையடுத்து நியூயோர்க்கின் ஓனேன்டகாகவுண்டில் உள்ள சிராகஸ் விமான நிலையத்தில் விமானத்தைத் தரையிறக்க அனுமதி வழங்கப்பட்டது.

விமானத்தை உதவி விமானி பத்திரமாகத் தரையிறக்கினார். அங்கிருந்த மருத்துவக் குழுவினர் விமானி உயிரிழந்ததை உறுதிப்படுத்தினர்.

சுமார் ஐந்து மணி நேரத் தாமதத்தின் பின்னர் விமானம் தனது பயணத்தை மீண்டும் ஆரம்பித்தது. (ற-ரி4)

# துருக்கி வான்பரப்பை ஊடுருவியது ரஷ்யா

## நேட்டா அமைப்பு கடும் கண்டனம்

நோர்வே, ஒக்.7

துருக்கி வான்பரப்பில் ரஷ்ய போர் விமானங்களின் ஊடுருவலானது ஆபத்து மிக்கது என்று கண்டனம் தெரிவித்துள்ள நேட்டோ, சிரியாவில் எதிர்த்தரப்பினர் மற்றும் பொது மக்கள் மீது மொஸ்கோ மேற்கொண்டு வரும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளது.

1949ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 28 உறுப்பு நாடுகளைக் கொண்ட நேட்டோ நாடுகள் அமைப்பின் அவசரக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது, சிரியாவுடனான எல்லை அருகில் துருக்கியின் வான் பரப்பில் நுழைந்து ரஷ்ய போர் விமானங்கள் அத்துமீறி ஊடுருவி வருவது தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

துருக்கியின் இறையாண்மையை மீறும் வகையிலான இந்த வான்வழித் தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை. அதுமட்டுமன்றி இவ்வாறான பொறுப்பற்ற வகையிலான நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தானவை என நேட்டோ அறிவித்துள்ளது.

கடந்த வார இறுதியில் இடம்பெற்ற இந்தத் திடீர் ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது மிகவும் கவலையளிக்கின்றது என்று அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி அசாத் அரசுக்கு ஆதரவாக கிளர்ச்சியாளர்கள் மற்றும் ஐ.எஸ். குழு மீது ரஷ்யா வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. ஜனாதிபதி அசாத்தை எதிர்த்து போராடும் கிளர்ச்சிப் படையினருக்கு நேட்டோ நாடுகள் ஆதரவளித்து வருகின்றன. (ற)

# சகாரா கண்ட நாடுகளுக்கு அதிவேக இணைய வசதி

## பேஸ்புக் நிறுவனம் திட்டம்

நியூயோர்க், ஒக்.7

சகாரா துணைக் கண்டத்துக்கு உட்பட்ட ஆபிரிக்க நாடுகளுக்கு அதிவே இணைய வசதியை ஏற்படுத்துவதற்கு பேஸ்புக் நிறுவனம் தீர்மானித்துள்ளது. பேஸ்புக் பாவனையை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகின் சரிபாதி மக்கள் இணையத் தொடர்பு இல்லாதுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தநிலையில் பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஜுக்கர்பேர்க் இந்த அறிப்பை விடுத்துள்ளார்.

ஆபிரிக்க நாடுகளான நைஜீரியா மற்றும் கென்யாவில் மட்டும் சுமார் 2 கோடி மக்கள் அலைபேசி வாயிலாக பேஸ்புக் மூலம் பிறருடன் தொடர்பு கொண்டு வருகின்றனர். மக்களை பேஸ்புக்கில் இணைக்கும் முயற்சியாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரபல தொலைத் தொடர்பு நிறுவனமான யூடெல் சாட் நிறுவனத்தின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் 'அமோஸ்-6' என்ற செயற்கைக்கோள் உருவாக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக் நிறுவனத்தின் 'இண்டர்நெட் டாட் ஆர்க்' திட்டத்தின் ஒருபகுதியாக இணய வசதி இல்லாத பகுதிகள், இணையத்தின் வேகம் மிகக் குறைவாக உள்ள பகுதிகளில் 'அமோஸ்-6' செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மார்க் ஜுக்கர்பேர்க் தெரிவித்துள்ளார்.

முதல்கட்டமாக 2016 ஆம் ஆண்டு சகாரா துணைக் கண்டத்துக்கு உட்பட்ட ஆபிரிக்க நாடுகளில் அதிவேக இணைய வசதியை வழங்கும் நோக்கில் செயற்கைக்கோள் 'அமோஸ்-6' நிலைநிறுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இந்த இணையச் சேவையின் மூலம் வேலைவாய்ப்பு, வேளாண்மை மற்றும் முகநூல் ஆகிய இணையச் சேவைகள் இங்குள்ள மக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-ரி4)

# பிச்சைக்காரரின் நாய்க்குட்டியை பறித்தெடுத்த விலங்கு ஆர்வலர்

## மக்களின் எதிர்ப்பை அடுத்து மீள ஒப்படைக்கப்பட்டது

தெருப்பிச்சைக்காரர் ஒருவரிடமிருந்து நாய்குட்டி ஒன்றைப் பலவந்தமாகப் பறித்தெடுத்த செயலுக்கு பிரான்ஸ் மக்கள் தங்கள் பலத்த எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். அதையடுத்து மூன்றே மாதங்களான அந்த நாய்க்குட்டி அதன் உரிமையாளரிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பரிஸ் நகரின் மையத்தில் தெருவில் வசிக்கும் வீடற்ற, ரோமா இனத்தைச்சேர்ந்த பிச்சைக்காரர் ஒருவரின் நாய்க்குட்டியை விலங்குகளின் உரிமைகளைப்பேணும் அமைப்பு ஒன்றைச்சேர்ந்தோர் கடந்த மாதம் பலாத்காரமாகப் பறித்தெடுத்துச் சென்றிருந்தனர்.

பிச்சைக்காரரின் மன்றாட்டமான எதிர்ப்பின் மத்தியில்- வீதியில் பல பேர் முன்னிலையில் நாய்க்குட்டியை அவர்கள் பிடுங்கிச் சென்ற காட்சி கண்டோரை மனம் கலங்கச் செய்திருந்தது.

உரிய மருத்துவப் பதிவு இன்றி, தடுப்பூசிகள் ஏற்றாமல் நாய்க்குட்டியை தெருவில் வைத்துப் பிச்சை எடுக்கப் பயன்படுத்தியமை, அதன் உரிமைகளை மீறிய செயல் என்றும்- இதுவிடயத்தில் பொலிஸார் தலையிடாமல் இருந்ததை அடுத்துத் தத்தெடுக்கும் ஒருவருக்கு விற்பனை செய்வதற்காக அந்த நாய்க்குட்டியைத் தாங்கள் மீட்டெடுத்தனர் என்றும் - சம்பந்தப்பட்ட விலங்கு உரிமைபேணும் அமைப்பு தனது செயலுக்கு விளக்கமளித்திருந்தது.

எனினும் தெருப்பிச்சைக்காரரிடமிருந்து நாய்க்குட்டியை பலாத்காரமாகப் பறித்தெடுத்த காட்சியை காணொலியாகப் பதிவுசெய்த ஒருவர், அதனை சமூகவலைத்தளத்தில் பதிவிட்டார். அது சுமார் 17 இலட்சம் தடவைகள் பார்க்கப்பட்டு அந்தச் செயலுக்கு எதிரான கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டன. அது பின்னர் இணையத்தள மனு மூலம் 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் கையொப்[illegible] அளவுக்கு நாய்க்குட்டிக்கான ஆதரவு அலை பெருகியது.



நாய்குட்டியைப் பறித்தெடுத்தமை கடும்போக்கான வன்முறை என்றும் அதற்கெதிராக விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் கோரிக்கை வலுத்ததை அடுத்து சம்பந்தப்பட்ட விலங்கு உரிமை பேணும் நிறுவனத்தின் அதிகாரி ஒருவரை பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை நடத்தினர். நாய்க் குட்டியை அதன் உரிமையாளரிடம் மீள ஒப்படைப்பதாக உறுதி அளித்ததைத் தொடர்ந்து அவர் பின்னர் விடுவிக்கப்பட்டார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்பு யோசனை உள்ளடங்கியுள்ளதா?

## கிரியெல்லவின் கேள்விக்கு மகிந்த மௌனம்

கொழும்பு, ஒக். 7

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் கலப்பு நீதிமன்ற யோசனை உள்ளடக்கப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பதை நீங்களே கூறுங்கள்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியிடம் நாடாளுமன்றத்தில் நேற்று நான்கு தடவைகள் கோரிக்கை விடுத்தார் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, இதற்குப் பதிலளிக்காது சிரித்தபடியே மௌனம் காத்தார்.

அத்துடன், இது விடயத்தில் தன்னைத் தொடர்புபடுத்தாதீர்கள் என்ற தோரணையில் அவர் கை சமிக்ஞை காட்டினார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்குப் பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் விமல் வீரவன்ஸ சட்டப் பிரச்சினையொன்றை எழுப்பினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் கலப்பு நீதிமன்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என வாதிட்டார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, மேற்படி தீர்மானத்தில் கலப்பு நீதிமன்ற யோசனை இல்லை என்று பதிலடி கொடுத்தார்.

இதோ! முன்னாள் ஜனாதிபதி இருக்கிறார். அவரிடமே கேட்டுப் பாருங்கள் என்றும் அவர் தெரிவித்தார். இவ்வாறு தெரிவித்த அமைச்சர், முன்னாள் ஜனாதிபதியிடம் கோரிக்கையொன்றை விடுத்தார்.

ஜெனிவா தீர்மானத்தில் கலப்பு நீதிமன்ற யோசனை இருக்கிறதா, இல்லையா என்பதை நீங்களே கூறுங்கள் என்றார் அமைச்சர் கிரியெல்ல. இந்தக் கோரிக்கையை நான்கு தடவைகள் விடுத்தார்.

மேற்படி நான்கு சந்தர்ப்பங்களிலும் மகிந்த எந்தப் பதிலையும் வழங்காது சிரித்தபடியே மௌனமாக இருந்தார். தன்னை இதில் மாட்டி விடாதீர்கள் என்ற தோரணையில் ஒருவாறு கைசமிக்ஞை காட்டி அமைச்சரைச் சமாளித்துவிட்டார். (த-வ)

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் 162 பேருக்கு உடனடி இடமாற்றம்

ஜனாதிபதி பாதுகாப்புப் பல் பணியாற்றி வந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் உட்பட 162 பேர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு மேலதிகமாக ஐந்து பொலிஸ் பரீட்சகர்கள் (இன்ஸ்பெக்டர்கள்), 15 உப பொலிஸ் பரீட்சகர்கள் (சப் இன்ஸ் பெக்டர்கள்), இரண்டு பெண் உப பொலிஸ் பரீட்சகர்கள், 28 ஆண் சார்ஜன்டுகள், 14 பெண் சார்ஜன்டுகள், இரண்டு சாரதிகள், 04 கான்ஸ்டபிள் சாரதிகள், 64 ஆண் கான்ஸ்டபிள்கள், 23 பெண் கான்ஸ் டபிள்கள், நான்கு தொழில் சட்டப்பிரிவு கான்ஸ்டபிள்கள் ஆகியோர் உள்ளடங்குவதாக பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

சேவைகளுக்கான தேவைகளின் அடிப்படையில் இவர்கள் நாடெங்குமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கான இடமாற்ற உத்தரவு கடந்த சனிக்கிழமை விசேட பொலிஸ் செய்திகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரான கே.எஸ். கே.ரூபசிங்க அம்பாறை மாவட் டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட் டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)


## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் கணினி கல்வி நிலையம் ஒன்றில் பின்வரும் தகைமைகளை உடைய இருவருக்கான வெற்றிடம் உள்ளது.



1) Computer Hardware & Networking
2) Ms office Package
3) Photoshop / Illustrator Designing.

* மேற்படி துறைகளில் கற்பிக்கக்கூடிய திறமையுள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
* ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
* Salary : Negotiable

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரக்கோவையை

jobsjaffna2016@gmail.com

என்ற இணைய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(C/18706)(10.17)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.10.2015 அன்று பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் சிறந்த ஆசிரியருக்கான பிரதீபா பிரபா விருதைப் பெறும் எமது பாடசாலை ஆசிரியை

திருமதி அனற் மரீடா றொபின்

அவர்களை மேலும் பல உயர்வுகள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்

Best Wishes

பாடசாலைச் சமூகம்
சென் பெனடிக்ற் வித்தியாலயம்
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்

(65233) (12.15.17)


## பெண் சாரணிய வழிகாட்டுநர் கூட்டம் நாளை

யாழ். வலயப் பாடசாலைகளின் இலங்கை சாரணியர் மன்றத்தின் பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

யாழ். வலயப் பாடசாலைகளிலிருந்து 2 சாரணிய வழிகாட்டுநரையும், 2 சிறு தோழர் வழிகாட்டுநரையும் தவறாது சமுகமளிக்குமாறு மாவட்ட ஆணையாளர் திருமதி நீலா தர்மகுலசிங்கம் அறிவித்துள்ளார். (த)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் அதிபர்

வே.க.இரத்தினகுமார் SLPS 1

அவர்கள் நேற்று (06.10.2015) கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களினால் "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றதை நாம் வாழ்த்துவதுடன் மேலும் பல விருதுகளைப் பெற இறை ஆசிவேண்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

ஆசிரியர் கழகம்
யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.


## பருத்தித்துறை சட்டத்தரணிகள் நாளை புறக்கணிப்பு

பருத்தித்துறை, ஒக்.7

பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் நாளை வியாழக்கிழமை நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணிக்கவுள்ளனர். சங்கத்தின் உறுப்பினர் ஒருவருடைய வீட்டில் அடாத்தாக உட்பிரவேசித்தமைக்கு எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்தே இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு இடம்பெறவுள்ளதாக பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த குற்றச்செயலை மேற்கொண்டவர்களை கைது செய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ள பருத்தித்துறை சட்டத்தரணிகள், தமது போராட்டத்துக்கு யாழ்.மாவட்ட சட்டத்தரணிகளின் ஆதரவும் பெறப்படுமென குறிப்பிட்டுள்ளனர். (வ)


## பாராட்டிவாழ்த்துகின்றோம்

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்களிடமிருந்து 06.10.2015 அன்று "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்ற மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய ஆசிரியரான

சிவஞானம் சிவகாந்தன்

B.Com, H.N.D.ACC, Dip. in MNG, ESPM, Dip.in PE, Dip in Edu, M.A (Merit)



அவர்களை மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:

வீரபத்திரர் கோயிலடி,
பொலிகண்டி.
வல்வெட்டித்துறை.

த.கணேசு J.P குடும்பத்தினர்,
(ஓய்வுநிலை உப-தபாலதிபர்)
த.[illegible] குடும்பத்தினர்
(பிரதி அதிபர்/[illegible]
வீரகத்தி மகா வித்தியாலயம்)

(62154)(10.17)





AFTER A/Levels

எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும் கற்கைநெறிகள்

PEARSON edexcel
ESOFT is proud to be recognized as a GOLD PARTNER of Pearson (Edexcel), UK

| | | |
|---|---|---|
| DiTEC INTERNATIONAL 1st Diploma<br>Diploma in Information Technology | DiBM 1st Diploma<br>Diploma in Business Management | DiWE 1st Diploma<br>Diploma in Web Engineering |
| PEARSON edexcel | PEARSON edexcel | PEARSON edexcel |
| DiSE 1st Diploma<br>Diploma in Software Engineering | DiCA 1st Diploma<br>Diploma in Computerized Accounting | DiIM 1st Diploma<br>Diploma in Internet Marketing |

2nd Diploma

DiE PEARSON edexcel Diploma in ENGLISH

சேமிப்பு Rs. 8,325
10% off* for the 1st Diploma 25% off* for the 2nd Diploma

New Batches 10.10.2015 | 12.10.2015

பதிவுகளை இம் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுங்கள்

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142

இலங்கையின் மிகப்பெரிய உயர்கல்வி வலையமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பட்ட நலனுக்காகச் சூழலை பாதுகாக்க தவறுகின்றனர் மக்கள்

***ஜனாதிபதி மைத்திரிபால கவலை***

யாழ்ப்பாணம், ஒக். 07

அபிவிருத்திச் செயன்முறைகளில் சூழல்பாதுகாப்புடன்தொடர்புடைய சட்ட திட்டங்கள் போதுமானவையாக இருந்தபோதும், தமது தனிப்பட்ட வர்த்தக நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே அதற்கு முரணாக மக்கள் செயற்படுவதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேசமாநாட்டுமண்டபத்தில்நேற்று முன்தினம்மாலைநடைபெற்றதேசிய பசுமை விருதுகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். முழு உலகத்தினதும் கவனம் சூழல் பாதுகாப்புத் தொடர்பாகக் குவிந்திருக்கின்றது. இவ்வாறான நிலையில், சூழல் பாதுகாப்பு எமது பொறுப்பு என்று கருதாமல் அதுவொரு மானிடக் கடமை என்ற வகையில் செயற்படவேண்டும். சூழல் பாதுகாப்பு, மனிதர்கள் உட்பட அனைத்து ஜீவராசிகளினதும் இருப்புக்கு மிகவும் முக்கியமானதாகும். தனிப்பட்ட பொருளாதார நன்மைகளை மறந்து நாட்டை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கான உணர்வுடன் சூழலைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

நிறுவன ரீதியான ஒருங்கிணைப்பு இல்லாத காரணத்தினால் திண்மக் கழிவு மற்றும் குப்பைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டு கொள்ள முடியாதிருக்கின்றது. இந்தப் பிரச்சினைகளுக்குச் சகல நிறுவனங்களினதும்ஒருங்கிணைப்புடன் ஒரு இணைந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடாக ஒரு தீர்வைக் கண்டறிய புதிய அரசு எதிர் பார்த்துள்ளது – என்றார். (த-5)

# பெண்களின் பாதுகாப்புக்காக விசேட செயலணி உருவாகும்

***ஜப்பானில் பிரதமர் தெரிவிப்பு***

டோக்கியோ, ஒக்.7

பாலியல்வன்புணர்வு மற்றும்பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த நாடாளுமன்றினால் விசேட செயலணி ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெண்களைத்தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்களை கட்டியெழுப்புவதற்காகத் தேசிய நிலையம் ஒன்று அமைக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பான் நாடாளுமன்றில் நேற்று ஆற்றிய உரையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது நாட்டின் சனத்தொகையில் பெண்கள் பெரும்பான்மையாக உள்ளனர். எனவே பெண்கள் உரிமைகள் சட்டம், பெண்களுக்கெதிரான பாகுபாடுகளை இல்லாதொழிக்கும் ஐ.நா. சபையின் சட்டங்களுக்கமைவாக அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

அத்துடன் அரசியலில் பெண்களின் பங்கு 5 சதவீதமாக உள்ளது. எனினும் எதிர்வரும் உள்ளூராட்சி, மாகாண சபைத் தேர்தல்களில் பெண்களின் பங்கு 25 சதவீதமாக இருப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் பாலியல் வன்புணர்வு மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைக்கட்டுப்படுத்துவதற்கு விசேட செயலணி உருவாக்கப்படும்.

மேலும், பெண்களை தலைமைத்துவமாகக்கொண்டகுடும்பங்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக தேசிய நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதன் தலைமையகம் வடக்கு மாகாணத்தில் அமைக்கப்படும்–என்றார். (த-வ)

## மரண அறிவித்தல்கள்



### சிவகுரு மணிமாறன்

(பொலிஸ் உத்தியோகத்தர்- கோப்பாய் பொலிஸ் நிலையம்)

கற்கோவளம் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், புலோலி மேற்கு பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் சிவகுரு மணிமாறன் 05.10.2015 திங்கட்கிழமை மாலை அகால மரணமானார்.


அன்னார் சிவகுரு-நேசமலர் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் பரமகுரு-தனலக்குமி தம்பதியரின் மருமகனும், தமிழ்ச் செல்வியின் (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.) அன்புக் கணவரும், டபிகாவின் அன்புத் தந்தையும், ராமஜெயம், ராமேஸ்வரன், தர்சினி, குகனொளி, டினேசினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், யசிதா, சரளா, மணிவண்ணன், ரஜீத்பாலன், மணிவண்ணன் (பொறியியலாளர் சவுதி), ரவிவண்ணன் (பொறியியலாளர் கட்டார்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விசாலினி, நிஷா, ரேகா, டிலானி ஆகியோரின் சித்தப்பாவும், கோபிநாத், சர்மிகா, நிராஜ் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.10.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

021 226 4758 (C/18709) (10.17) குடும்பத்தினர்.

### பொன்னையா கணபதிப்பிள்ளை



பழையகமம் முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும், தற்போது நாவற்காடு வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கணபதிப்பிள்ளை நேற்று (06.10.2015) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பொன்னாச்சியின் அன்புக் கணவரும், அன்னப்பிள்ளை, பரிபூரணம், காசிநாதன், சுப்பிரமணியம், வரதராசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசையா, சின்னையா, குமுதவதி, குகனேஸ்வரி, பிறேமலதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2015) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

நாவற்காடு, வரணி. (65242) (10.17) குடும்பத்தினர்.

# வாகனங்கள் இறக்குமதி சட்டம் கடுமையாகிறது

***கடன் கடிதங்களுக்கு 100 வீத வைப்பு அவசியம்***

வாகன இறக்குமதியாளர்கள் கடன் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யும்போது பெறுமதியின் 100 வீதத்தை வைப்புச்செய்ய வேண்டிய கட்டாயம் சட்டமாக்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த நிதியமைச்சர் இந்தப் புதிய விதிமுறை வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருமெனவும் கூறினார்.

இவ்வருடத்தின் கடந்த எட்டு மாத காலத்தில் இலங்கைக்கு மொத்தமாக 4 இலட்சத்து 91 ஆயிரத்து 628 (4,91,628) வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான இறக்குமதிகளால் நாட்டுக்குள் ஏற்படக்கூடிய மிதமிஞ்சிய வாகன நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்தப் புதிய விதிமுறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (த)



சர்வதேச ஆசிரியர் தினமான நேற்று, பதவியுயர்வுகள் முறையாக வழங்கப்படாமை, வழங்கப்பட்டவற்றில் பெரும் முறைகேடுகள் இடம்பெற்றமை ஆகியவற்றுக்குஎதிராகக்கொழும்புபொறளை கன்னங்கர மகா வித்தியாலயத்தில் கையெழுத்துப் போராட்டம் ஒன்றை இலங்கை ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கையெழுத்துக்கள் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. (த-4)

# வெலிக்கடை சிறைச்சாலை தூக்குமரம் உயிர் பெறுகிறது

கொழும்பு, ஒக் 6

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள பழைய தூக்குமரம் தற்சமயம் பழுதுபார்க்கப்பட்டுவருவதாக சிறைச்சாலைகள்தலைமையகத்தின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 40 வருடங்களாக செயற்படாமல் இருந்த இந்தத் தூக்குமரத்தைப் பழுதுபார்க்க 50 ஆயிரம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் சாவுத்தண்டனை அரசால் நடைமுறைப்படுத்தப்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனை நிறைவேற்றத்தயாராகஇருப்பதற்காகவே இந்த பழுதுபார்ப்பு வேலை நடந்து வருவதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின்அனுமதிகிடைத்ததும் சாவுத்தண்டனை நடைமுறைக்குவருமென ஜனாதிபதி அண்மையில்தெரிவித்திருந்தகருத்தின்அடிப்படையிலேயேதூக்குமரம் தயார் செய்யப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(த-சி)

# வளலாயில் துறைமுகம் அமைப்பது ஏற்றதல்ல

***பாதுகாப்புத் தரப்பினரின் யோசனைக்கு டக்ளஸ் எதிர்ப்பு***

யாழ்ப்பாணம், ஒக். 07

யாழ்.குடாநாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த வலி.வடக்கு, மயிலிட்டி துறைமுகத்தை வளலாய் பகுதியில் அமைப்பது தொடர்பான பாதுகாப்புத்தரப்பினரின்யோசனையை ஏற்கமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி.யினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரி வித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது கடற்றொழில் துறைசார்ந்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மயிலிட்டி துறைமுகம் மக்கள் பாவனைக்காக விடு விக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்தத் துறைமுகத்தை விடுவிப்பது தொடர்பில் நான் பல முயற்சிகளை எடுத்து வந்திருப்பது உங்களுக்குத் தெரியும்.

அந்த முயற்சிகள் உரிய பயனை எட்டுவதற்கு முன்பாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆனாலும், எனது முயற்சிகளை நான் கைவிடவில்லை. இந்த அரசுடன் கதைத்து இதற்கொரு நல்ல தீர்வை எட்ட முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இந்த நிலையில், மயிலிட்டி துறைமுகத்தைவேறுஇடத்துக்குமாற்றுவதை நாம் அனுமதிக்கப் போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாக அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



உதிப்பு 13.09.1939 — உதிர்வு 09.09.2015

அமரர்

### மகேஸ்வரி சிவசம்பு

(ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர்)

கடந்த 09.09.2015 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி மகேஸ்வரி சிவசம்பு அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் அவரது இல்லதில் 09.10.2015 வெள்ளிக்கிழமை காலை 4.00 மணியளவில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து அன்று நண்பகல் 12.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண நிகழ்வும் அதன்பின் மதியபோசன நிகழ்வும் நடைபெறும். தங்களை இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

மந்திகை, புலோலி தெற்கு, புலோலி. (C/18707)(10.17) குடும்பத்தினர்.

Sa HAPONS EDUCATION CENTRE

தரம் 5 புலமைப்பரிசில்

விசேட வகுப்புக்கள்- 2016

திரு. ச. சுகர்ணன் Dip.Teach(Spl.Ed)

அவர்களின் வழிகாட்டலில் 09.10.2015

பி.ப 3.30 மணி (வெள்ளிக்கிழமை)

முதல் நடைபெறும்.

பதிவுகள் இன்று முதல்



0773095176

தொடர்ச்சி

## மகிந்த

இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் டலஸ் அழகப்பெரும, பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன்பில உள்ளிட்டோர் கலந்துகொண் டுள்ளனர்.

விசேடமாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் களுக்கு நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட வழங்கப்பட்டுள்ள காலம் குறித்து இதில் அவ தானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை- சபாநாயகருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட சம்பவம் தொடர்பில் உதய கம்மன்பிலவை நாடாளுமன்றச் சிறப்புரிமைக் குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலும் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக இதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவுத்

சமர்ப்பித்து உரையாற்றியபோது மேற்கண்ட வாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1995ஆம் ஆண்டு எனது தந்தை, சாவுத் தண்டனை, தூக்குத்தண்டனையை மீண்டும் செயற்படுத்தப் படவேண்டும் என்று கோரினார். 20 வருடங்களின் பின்னர் இன்று நானும் அந்த விடயத்தைக் கொண்டுவந்துள்ளேன். 1976ஆம் ஆண்டு மாத்தறை மேல் நீதிமன்றத்தால் இறுதியாக சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இன்று சாவுத் தண்டனை என்று கூறப்பட்டாலும் 20 வருடகால சிறைத் தண்டனை தான் குற்றவாளிகளுக்கு வழங்கப்படுகிறது. அதிலும் விசேட தினங்களில், ஜனாதிபதியால் மன்னிப்பு என்று அவர்களுக்கு தண்டனை விலக்களிக்கப்படுகிறது.

மக்கள் சட்டத்துக்கும், தண்டனைக்கும் பயப்படுகின்றனர். ஆனால், நாட்டில் சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு சரியான தண்டனை வழங்கப்படுவதில்லை. இப்படி யான குற்றவாளிகளுக்கு 7 முதல் 20 வருடகால தண்டனையே வழங்கப்படுகிறது. இந்தத் தண்டனை போதாது. சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம், கொலைச் சம்பவம் தொடர்பான குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனையே வழங்கப்படவேண்டும்.

பெண்கள் தொடர்பான எண்ணம் வீட்டிலிருந்து மாற்றப்படவேண்டும். ஆண், பெண் பிள்ளைகள் இருக்கும் வீட்டில் உணவு, கல்வி உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் பெண் பிள்ளைகள் பெற்றோர்களால் இரண்டாம் பட்சமாக நடத்தப்படுகின்ற இந்நிலை முழு நாட்டிலும் மாற்றப்பட வேண்டும்.

பிரிட்டிஷ் பிரஜை குரம் சேஜக் கொலை மற்றும் அவரது காதலியை துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிகளுக்கும் போதுமான தண்டனை வழங்கப்படவில்லை என மேன்முறையீடு செய்த சட்டமா அதிபர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவியை (வித்தியா) கொடூரமாகக் கொலை செய்த குற்றவாளிகளுக்குப் போதுமான தண்டனை வழங்கப்படவில்லை எனக் கோரவில்லை.

இன்று வேறு ஒரு பிள்ளைக்கு நடப்பது நாளை உங்கள் பிள்ளைக்கும் நடக்கும். இந்த விடயத்தில் சமயம், நீதி என்று குழப்பிக்கொள்ள வேண்டாம். சமயம் வேறு நீதி வேறு. இந்த விடயத்தில் நீதி சரியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகக் குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு சாவுத்தண்டனை வழங்க நெஞ்சில் இரக்கமுள்ளவர்கள் முன்வரவேண்டும்- என்றார். (த-சி)

## தீவுப் பகுதி

3 கோடியே 70 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாக வும், பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மக்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்துக்கு வருவதில் எதிர்நோக்கும் சிரமங் கள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. இதற்காக அம்புலன்ஸ் படகு கொள்வனவு செய்வதற்காக விலைமனுக் கோரல் செய்யப்பட்டது. அதன் போது 75 மில்லியன் ரூபா இதற்காகத் தேவைப்பட்டது. குறித்த பெருந்தொகை நிதி சுகாதார திணைக்களத்திடம் இல்லை என்று வடக்கு மாகாண ஆளு நருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்குஅமைவாகவடக்குமாகாண ஆளுநர் கடற்படையினரிடம் மேற் படி கோரிக்கையை முன் வைத்துள்ளார். ஆளுநர், இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக, அவரது ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலில் இந்தப் படகு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அம்புலன்ஸ் படகு 47.5 அடி நீளமானது.

வெலிசரவிலுள்ள இலங்கைக் கடற்படையின் கரையோர ரோந்து படகு நிர்மாணத் திட்டப் பிரிவினரால் தயாரிக்கப்பட்ட இந்தப் படகில் 15 நோயாளிகளைக் கொண்டு செல்ல முடியும். மூன்று மருத்துவப் படுக்கைகள், இரண்டு ஒட்சிசன் சிலிண்டர்கள், நோயாளிகளைக் கண்காணிப்புச் செய்யும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன் மேலும்தேவையானபொருள்களும் இந்தப் படகில்காணப்படுகின்றன.

இந்தப் படகு கையளிப்பு நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி இந்தப் படகை கையளிக்க, ஜனாதிபதிஅதனை வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி எஸ். ஆர்.ஜுட்டிடம் கையளித்தார். (த-5)


**காணி விற்பனைக்கு**

பலாலி வீதி, தபால் பெட்டி சந்திக்கருகில் நி.பர.2 குளி 12.37 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

(64794) (13.16. தொடர்புகளுக்கு

077 977 3375, 0047 400 42067

**பெயர் மாற்றம்**

நாவற்குழி தெற்கு, கைதடியைச் சேர்ந்த சிறிகாந்தன் கிரிசா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை சிறிகாந்தன் றொசாந்தினி என பெயர் மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(65232)(10.15.17) சிறிகாந்தன் றொசாந்தினி

**உயர் கணக்கியல் கல்லூரி (H.A.C) சித்தன்கேணி**

புலமைப்பரிசில் வகுப்பு

ஆரம்பம்: 10.10.2015

சனிக்கிழமை

பி.ப 2.00 மணி

ஆசிரியர்

S. சுபாஷ்

(65234)(12.15)

**சிங்களம்**

**புதிய பிரிவுகள் மற்றும் O/L PAST PAPER CLASS**

**யாழ்ப்பாணம்/சாவகச்சேரி**

சிங்களம் பேச, எழுத, வாசிக்க புதிய பிரிவுகள் ஆரம்பம் காலம் 09.10.2015 வெள்ளியன்று பி.ப 5.00 மணிக்கு (இராமநாதன் வீதியில்) சனி, ஞாயிறு மற்றும் வார நாள்களிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன.

ஸ்ரீ மாஸ்டர்

(2nd Batch)

O/L Past PAPER CLASS (இராமநாதன் வீதியில்)

ஆரம்பம் : 10.10.2015 சனிக்கிழமை

பி.ப 6.00 - 7.00 வரை (சனி/ஞாயிறு மட்டும்)

சாவகச்சேரியில் புதன்கிழமை நாட்களில் மட்டும்

ஆரம்பம் : 07.10.2015 பி.ப 6.00-8.00 வரை

விபரங்களுக்கு : 0776150596

(சாவகச்சேரி விபரம் மட்டும்)

(65243)(10.17)

ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்

இல.72, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

இல.41, நகர லேன், கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

விபரங்களுக்கு: 0777033729

**வாடகைக்கு உண்டு**

சாவகச்சேரி நகர் மத்தியில் (BOC இயங்கிக் கொண்டிருக்கும் கட்டடம்) 2016 தை மாதம் தொடக்கம் வாடகைக்கு விடப்படும். (அரச/ தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு:

077 784 9369, 021 222 8063

**வேலையாள்கள் தேவை**

எமது நிறுவனத்தில் வேலை செய்வதற்கு கீழ்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

1. சமையலாளர் 2. பூஸ் தயாரிப்பாளர்

3. பண்ணை முகாமையாளர் 4. வரவேற்பாளர்

தொடர்புகளுக்கு: 077 500 6769

(65240)(10.17)

**தசாக கிருஹயக்ஞ அழைப்பு**



நிகழும் மன்மத வருடம் புரட்டாதித் திங்கள் 11ஆம் நாள் (28.09.2015) திங்கட்கிழமை பூரணைத் திதியில் சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை

அமரர் பிரம்மஸ்ரீ தியாகராஜ ஐயர் பாலசுப்பிரமணியக் குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் இடம்பெறும்.

புரட்டாதித் திங்கள் 20ஆம் நாள் (07.10.2015) புதன்கிழமை - தசாகம் 10.00 மணிக்கு

புரட்டாதித் திங்கள் 21ஆம் நாள் (08.10.2015) வியாழக்கிழமை - ஏகோதிஷ்டம், மாசிகம்

புரட்டாதித் திங்கள் 22ஆம் நாள் (09.10.2015) வெள்ளிக்கிழமை - சபிண்டீகரணம்

புரட்டாதித் திங்கள் 23ஆம் நாள் (10.10.2015) சனிக்கிழமை - கிருஹயக்ஞம் (சமாராதனை)

மேற்படி தினங்களில் நடைபெறும் கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கத் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

6/8, விதானையார் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 0432 குடும்பத்தினர்.

(C/19200)(10.15.17)

**31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்**



தோற்றம் 10.01.1953 மறைவு 08.09.2015

அமரர்

கந்தர் கிட்டிணபிள்ளை

கடந்த 08.09.2015 இறைபதமடைந்த அமரர் கந்தர் கிட்டிணபிள்ளை அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (08.10.2015) வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

வள்ளுவதி, [illegible] கிழக்கு, [illegible] 077 899 8901

கி.சுதாகரன் (மகன்) பொலிஸ் உத்தியோகத்தர் சாவகச்சேரி பொலிஸ் நிலையம்

(60621)(10.15.17)

**நியத்த ஜய**

வெற்றி வாரம் : 399 திகதி : 2015-10-06 வர்ணம் : மஞ்சள்

03 29 44 52 J

காற்றில் வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை ரூ.13,640,700/-

**இம் முறை தனயோகம் உங்களுடையதா?**

திகதி 2015-10-06 வெற்றி வாரம் 1886 வர்ணம் நீலம்

கும்பம் வெற்றி இலக்கங்கள் 13 16 20 42

வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/-

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.

ஆரம்பம் விரைவில்... உடன் அழைத்து பதியவும்...

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF(வெள்ளை மாடிக்கட்டடம்)

குறிப்பு : யாழில் பல பொய்களை கூறி மோசடி செய்வோரிடம் ஏமாந்த பலர் எமது AF க்கு வந்துள்ளனர். நம்பிக்கை, கற்றல் கற்பித்தல் தரம், சர்வதேச அங்கீகாரம் உள்ள எமது நிறுவனத்தை தெரிவுசெய்யுங்கள். வெளிநாடு ஒன்றில் இருக்கும்போது பிரெஞ் பேச தேவையான ஆற்றலை வழங்குகிறோம்.021 222 8093

**வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல Hotel இற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

1. Room Boy 2. Waiter 3. Cleaner

சம்பளம் 15,000/= இற்கு மேல்.

உணவு/ தங்குமிடம் இலவசம்.

தொடர்பு: 076 601 7302

(63529) (10.17)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரான

பேரின்பநாதன் ஜெயகாந்தன்

அவர்களுக்கு சிறந்த ஆசிரியர்களுக்கான "பிரதீபா பிரபா" விருது 06.10.2015 பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டுவதோடு மேலும் பல பதவிகள், பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்

யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, வல்வெட்டித்துறை.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



Best Wishes

06.10.2015 செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் வைபவத்தில் ஆசிரிய சேவையில் அரும்பணியாற்றி "பிரதீபா பிரபா" எனும் நல்லாசிரியர் விருதுபெற்ற

திருமதி தர்மதேவி மனோகரன்

அவர்களைப் பாராட்டி மேலும் பல விருதுகள் பெற்றுச் சிறந்து பார்புகழ நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். பெருமையுடன் வாழ்த்துவோர் குடும்பத்தினரும், உறவினர்களும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கலப்பு

உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் சபைக்குள் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. மோதல் நிலையும் உருவாகியது. இதையடுத்து, சபைநடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார் பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்குப் பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, 23/2 நிலையியல் கட்டளைச் சட்டத்தின்கீழான விசேட கூற்று ஆகியன முடிவடைந்த பின்னர் சட்டப் பிரச்சினையொன்றை எழுப்பி சர்ச்சைக்குப் பிள்ளையார் சுழி போட்டார் விமல் வீரவன்ஸ .

இராணுவத்தை பலியெடுக்கும் கலப்பு நீதிமன்றம் வேண்டாம்

சட்டப் பிரச்சினையின்போது ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் அவர் மிகவும் ஆக்ரோசமான முறையில் கருத்து வெளியிட்டார்.

ஜெனிவா தொடரில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் கலப்பு நீதிமன்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும் என நான் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். ஆனால், அதற்குரிய திகதி இன்னும் ஒதுக்கப்படவில்லை. இவ்வாரத்துக்குரிய நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலிலும் விவாதத்துக்குரிய திகதி வழங்கப்படவில்லை. இது பெரிய பிரச்சினையாகும். இன்று இராணுவ முகாமுக்குள் நுழைந்து பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். இராணுவத்தினரை எம்மால் பலிகொடுக்க முடியாது என்று விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டினார்.

போராட்டத்தை ஆரம்பித்த விமலின் சகாக்கள்

இவ்வாறு விமல் வீரவன்ஸ உரையாற்றிக்கொண்டிருக்கையில் அவரது கட்சியைச் சேர்ந்த நான்கு எம்.பிக்கள் திடீரெனச் சபைக்குள் பதாகையை விரித்து கோசம் எழுப்பத் தொடங்கினர். இராணுவத்தைப் பலியெடுக்கும் கலப்பு போர்க்குற்ற விசாரணை வேண்டாம் என்று அந்த பதாகையில் எழுதப்பட்டிருந்தது.

இவர்களுக்க சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவும் இறங்கினார். ரஞ்சித் சொய்சா உள்ளிட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் விமல் அணிக்குச் சார்பாக சபைக்குள் முழக்கமிட்டனர்.

ஆளுங்கட்சி உறுப்பினர்களும் ஆவேசம்

விமல் அணியினரின் இந்த நடவடிக்கையால் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் கடுப்பாகினர். கதிரையிலிருந்து எழுந்து நின்று கூச்சலிட்டனர்; கண்டனம் தெரிவித்தனர். மறுபுறத்திலிருந்தும் சொற்கள் தொடுக்கப்பட்டன. இதனால் பெரும் சொற்போர் மூண்டது.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக அனைவரையும் அமைதி காக்குமாறு பிரதிச் சபாநாயகர் கோரிக்கை விடுத்தார். ஆனால், இரு தரப்பினரும் சொற்போரை நிறுத்தவில்லை. மீண்டும் மீண்டும் பிரதிச் சபாநாயகர் கோரிக்கை விடுத்தார். அதற்கும் செவிசாய்க்கவில்லை.

லக்ஷ்மன் கிரியெல்ல, சுஜீவ சேரசிங்க, நளின் பண்டார, பாலித தெவரப்பெரும உள்ளிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் விமல் அணிக்குப் பதிலடி கொடுத்துக்கொண்டிருந்தபோது விமல் அணியினர் திடீரெனச் சபையின் நடுப்பகுதிக்கு வந்தனர்.

பதாகை சகிதம் விமல் அணியினர் சபையின் மையப்பகுதிக்கு வந்ததையடுத்து, உதய கம்மன்பிலவும் ஓடோடி வந்து அவர்களுடன் இணைந்து கொண்டார்.

பதாகையை பறித்த ஆளுந்தரப்பினர்

இதையடுத்து, ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் மையப்பகுக்கு வரத் தொடங்கினர் படைக்கல சேவிதரும், நாடாளுமன்ற உதவியாளர்களும் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சித்தனர்.

விமல் அணியினர் ஏந்தியிருந்த பதாகையை நளின் பண்டாரவும், பாலித்த தேவரப்பெருமவும் பறிக்க முற்பட்டதால் மோதல் நிலை உருவாகியது. எனினும், அவ்விடத்துக்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே இரு தரப்பினரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் இறங்கினார். ஆனால், நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. இதனால் பிற்பகல் 1.35 மணியளவில் சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்கள் ஒத்திவைத்தார் பிரதிச் சபாநாயகர்.

மஹிந்தவை காணோம்

இந்தச் சர்ச்சை ஆரம்பமாகும்போது சபைக்குள் இருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சர்ச்சை உக்கிரமடையும்போது சபைக்குள் இருக்கவில்லை. அங்கிருந்து அவர் வெளியேறிவிட்டார்.

மீண்டும் 1.45 மணியளவில் சபை கூடியது. அதன்பின்னர் சபை நடவடிக்கைகள் அமைதியான முறையில் நடைபெற்றன. (த-வ-சி)

## பெருவுக்கு

நாளைமறுதினம் முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மஹேந்திரன், திறைசேரி மற்றும் நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர். எச்.எஸ். சமரதுங்க ஆகியோரும் பெரு நோக்கிச் சென்றுள்ளனர்.

நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக இலங்கைக்கான வருடாந்தக் கடனுதவியை அதிகரித்துக் கோரும் வகையில் நிதி அமைச்சரின் இவ்வருடத்துக்கான கலந்துரையாடல்கள் அமையவுள்ளன.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பன இலங்கைக்கு நீண்டகால அடிப்படையில் கடனுதவிகளை வழங்கியுள்ளதாகச் செயலாளர் கலாநிதி சமரதுங்க கூறினார். இவை 40 வருடங்களுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை. முதல் 7 வருடங்களுக்கு வட்டியில்லாமலும் பின்னர் ஆகக் குறைந்தது 2 சதவீத வட்டி அடிப்படையிலும் இக்கடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டுமெனவும் அவர் கூறினார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்க, இச்சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய நிதியுதவிகள் குறித்து நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவார். தற்போது வருடாந்தம் 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்குக் கிடைக்கின்றது. (த-வ)

## முகாமைத்துவ

முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கொழும்பு, சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நியமனக் கடிதங்கள் பெற்றவர்கள் மாவட்ட செயலாளர்களின் கீழ் பயிற்றுவிக்கப்படுவார்கள் என்றும், இது தவிர முகாமைத்துவ உதவியாளர் சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ள ஆயிரத்து 61 நியமனங்கள் இவ்வருட இறுதிக்குள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அதற்கமைய 3ஆயிரத்து 969 நியமனங்கள் முழுமையாக வழங்கப்பட்ட பின்னர் அரச சேவையின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றில் காணப்படும் 80 வீதமான வெற்றிடங்கள் நிரப்பப்படும் என அவர் மேலும் கூறினார். (த-வ)

## ரணில் -மங்கள

ழைப்பதில்லை எனவும், எதிர்ப்பை வெளியிட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலைமை சில காலங்களாக நீடித்து வருகின்றது. வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளின் நடவடிக்கைகளினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுமை இழந்துள்ளார். பெரும்பாலும் ஜப்பான் பயணத்தின் பின்னர் இருவருக்கும் இடையிலான முரண்பாடு பூதாகரமாக வெடிக்கக்கூடிய அபாயம் காணப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் அண்மையில் மேற்கொண்ட இரண்டு வெளிநாட்டு (இந்தியா, ஜப்பான்) பயணங்களிலும் வெளிவிவகார அமைச்சின் ஒரு அதிகாரியையேனும் இணைத்துக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவுக்குப் பயணம் செய்வதற்கு முன்னதாக வெளிவிவகார அமைச்சிடமிருந்து பிரதமர் அறிக்கை ஒன்றைக் கோரியிருந்தார்.

சாதாரண தர மாணவர் ஒருவரினால் எழுதப்படும் அறிக்கை ஒன்றை விடவும் மோசமான தரத்தில் குறைந்த அறிக்கை ஒன்றே வெளிவிவகார அமைச்சிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமுற்ற பிரதமர், இந்தியப் பயணத்தில் எந்தவொரு வெளிவிவகார அமைச்சு அதிகாரியையும் இணைத்துக் கொள்ளவில்லை.

ஜெனிவாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவின் நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் கடும் அதிருப்திஅடைந்துள்ளார். ஐ. நா மனித உரிமைகள் சபை அமர்வுகளின்போது கள நிலவரங்களை அவ்வப்போது முன்னாள் ராஜதந்திரி ஒருவருக்கும் முன்னாள் அமைச்சர் ஒருவருக்கும் இரகசியமாகத் தொலைபேசி ஊடாக தகவல்களை வழங்கியிருந்தார் என ஆரியசிங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ரவிநாத் ஆரியசிங்க மகிந்த, ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரின் மிக நெருங்கிய விசுவாசியும், முன்னாள் ராஜதந்திரி தயான் ஜயதிலக்கவின் நெருங்கிய நண்பருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளினால் ஆயா அம்மா என அழைக்கப்படும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சித்திராங்கனி வாகீஸ்வரா, பிரதமரின் உத்தரவுக்குக் கட்டுப்படவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் சட்ட உதவி பெற்றுக் கொள்ளல் குறித்த உடன்படிக்கையில் கையொப்பமிடவில்லை என வகீஸ்வரா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பின்னர் பிரதமரின் உத்தரவுக்கு அமைய குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சுடன் தொலைதொடர்பு அமைச்சினையும் மங்கள சமரவீர கோரி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கோரிக்கையைப் பிரதமர் நிராகரித்துள்ளதாகவும் இதனால் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொலைத்தொடர்பு அமைச்சின் ஊடாகவே மங்கள, தனது தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கி வந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் ஜனாதிபதியிடம் கூறி தமக்கு மேலும் ஓர் அமைச்சுப் பதவியை மங்கள சமரவீர கோரியுள்ளார்.

எனினும், பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் அபயக்கோனுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து அவ்வாறு எந்தவொரு மேலதிகப் பதவியையும் மங்களவுக்கு வழங்கக் கூடாது எனக் கேட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமருக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் முரண்பாடுகள் எதுவும் கிடையாது என வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த-வ)

## இன்ரபோல்

ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தப் படுகொலை தொடர்பாக மூன்று கடற்படையினர் மற்றும் முன்னாள் பொலிஸ் சார்ஜன்ட் என நால்வர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு, இது தொடர்பிலான அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களில் ஒருவராகக் கருதப்படும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவரைச் சர்வதேசப் பொலிஸார் (இன்ரபோல்) ஊடாக நாட்டுக்குக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவே அது தொடர்பிலான விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

தற்போது சுவிற்சர்லாந்தில் உள்ள சந்தேகநபர் ரவிராஜ் கொலையுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர் எனப் புல னாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ள நிலையிலேயே, மேலதிக விசாரணைகளுக்கான இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவரைக் கொழும்புக்கு அழைத்து வருவதற்கான அழைப்பாணையை விடுக்கும் செயற்பாடுகள் தற்போது சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம், கொலையாளி வந்ததாகக் கருதப்படும் ஓட்டோ உள்ளிட்டவை புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த விசாரணைகள் பெரும்பாலும் நிறைவுற்றுள்ளன. வெளிநாட்டில் உள்ள சந்தேக நபரை நாட்டுக்கு அழைத்து வந்ததும் ரவிராஜ் படுகொலை விசாரணைகளில் திருப்பம் ஏற்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (த-வ)

## அரசியல்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜப்பானிய நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றினார். இதன் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைஏற்படுத்துவதற்காக இலங்கை அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஜப்பானின் ஆதரவை நாங்கள் எதிர்ப்பார்த்திருக்கின்றோம். சமூக மற்றும் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான நிதி திரட்டுவதற்கான மாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கும் ஜப்பா னின் ஆதரவை எதிர்ப்பார்க்கின்றோம்.

இலங்கையின் புதிய அரசு நாட்டின் நிலையான பொருளாதாரத்தைத் தக்க வைத்துக்கொள்ளவும் அதன் வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கும் ஜப்பானின் முதலீடுகள் அதிகமாக எதிர்பார்க்கின்றது.

எனது பயணத்தின் மூலம் இரு நாடுகளினதும் பூரண ஒத்துழைப்புக்களைப் பரிமாறிக் கொள்வதை எதிர்பார்க்கின்றேன். அரசியல், பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் ஏனைய உறவுகளையும் எதிர்காலத்தில் இந்த பயணத்தின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

தேசிய அரசானது தெற்காசியாவில் வேகமான பொருளாதார நாடாக இலங்கையை மாற்றியமைப்பதற்கான முன்னெடுப்புக்களைச் செய்து வருகின்றது. இந்நிலையை அடைந்து கொள்ள ஜப்பானின் உதவி அத்தியாவசியமானதாகும்.

இலங்கை மக்கள் ஜனவரியில் புதிய ஜனாதிபதியையும் ஒகஸ்டில் புதிய பிரதமர் ஒருவரையும் தெரிவு செய்துள்ளனர். ஜனநாயக ரீதியிலான நல்லாட்சி, சட்டத்துக்கு முன்னுரிமை, நீதிமன்ற சுதந்திரம் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கி அரசு செயற்படுகின்றது.

கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையில் நல்லிணக்கத்தை மேம்படுத்து வதற்காக மனித உரிமைகள் யோசனைகள் மூலம் அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு வரவேற்பைப் பெற்றன.

பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு மே அரசினை இணைந்து நடத்துகின்றன. புதிய தேசத்தை உருவாக்குவதற்காகவே பகைமைகளை மறந்து இவ்விரு கட்சிகளும் இணைந்து செயற்படுகின்றன.

புதிய அரசமைப்புத் திட்டத்தை உருவாக்கல், மனித உரிமைகளை உறுதிப்படுத்தல், நிறுவன அமைப்புக்களை மேலும் வலுப்படுத்தல் என்பன எமது அரசியல் கொள்கை ரீதியில் முதன்மைச் செயற்பாடுகளாகும், எனினும், தேசிய ஒற்றுமை, மத, இன ரீதியாக உள்ள பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே எமது பிரதான நோக்கமாகும்.

அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய கட்சிகளுடனும் பேச்சுகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம்.

மொழி மற்றும் இனப் பிரச்சினையானது கடந்த ஐந்து தசாப்தங்களாக மிகப் பிரதான பிரச்சினையாக இருந்ததுடன் கடந்த காலங்களில் மத ரீதியிலான பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

தேசிய நல்லிணக்கம் மற்றும் சுதந்திரத்தை ஏற்படுத்து வதற்காக ஜப்பானிய அரசின் உதவியை நாங்கள் எதிர் பார்க்கின்றோம். விசேடமாக பிரச்சினைகள் நிலவிய பகுதிகளில் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்காக நிதி திரட்டும் மாநாடு ஒன்றை நடத்துவதற்கு ஜப்பானின் ஆதரவை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (த-வ-சி)

## வடக்குக்கான

அத்துடன் வடக்கு பகுதிக்கான தபால் ரயில் சேவைகள் நேற்றிரவு நிறுத்தப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் 03.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதோடு, இரண்டு ரயில் பெட்டிகள் இவ்வாறு தடம் புரண்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிச் செல்லும் ரயில்கள் மஹவ வரையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் வடக்கில் இருந்து கொழும்பு நோக்கி வரும் ரயில்கள் கல்கமுவ ரயில் நிலையம் வரையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை, கொழும்பு - வடக்குக்கான பாதையில் நேற்றுப் பயணிக்க விருந்த நான்கு தபால் ரயில்களும் நிறுத்தப்பட்டன.

இதன்படி நேற்றிரவு 07.40 மணி மற்றும் 08.40 மணிக்கு தலைமன்னார் மற்றும் காங்கேசன்துறை நோக்கிப் புறப்படவிருந்த ரயில்கள், 06.00 மணிக்குக் காங்கேசன் துறையில் இருந்து கோட்டைக்கும், 10.00 மணிக்கு தலைமன்னாரில் இருந்து கோட்டைக்கும் பயணிக்க விருந்த ரயில்களே இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் முன்கூட்டியே ஆசனங்களை பதிவு செய்த பயணிகள் தங்களது பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் ரயில்வே கட்டுப்பாட்டு மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

(த-வ)

## ஐ.நா.

டோர் அடங்குகின் றனர்.

இதற்கு மேலதிகமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் குறித்த குழுவில் உள்ளார். இதன்படி இவர்கள் விரைவில் கூடி ஐ.நா தீர்மானம் தொடர்பில் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு குறித்து இறுதி இணக்கப்பாட்டுக்கு வரவுள்ளனர். (த-வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வழித்தட அனுமதி இல்லாத பஸ்களை பறிக்கப் பணிப்பு

## பொலிஸாருக்கு விடுத்தார் அமைச்சர் நிமல்

கொழும்பு, ஒக். 7

இலங்கை தேசிய போக்குவரத்து அதிகார சபை வழித்தட அனுமதிப் பத்திரமின்றி வடபகுதியில் சேவையில் ஈடுபடும் பஸ்களை விசேட சோதனைக்கு உட்படுத்திக் கைப்பற்றுமாறும் அத்தகைய சட்டவிரோத போக்குவரத்துச் சேவைகளைத் தடுத்து நிறுத்துமாறும், அத்தகைய சேவைகளைமேற்கொள்வோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது.

அரசை ஏமாற்றி, திறைசேரிக்குச் சேரவேண்டிய பணத்தைச் செலுத்தாதுபஸ்உரிமையாளர்கள்இவ்வித சட்டவிரோதச் செயற்பாட்டில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவு தமக்குண்டு எனக் காட்டிக் கொள்ளும் வகையில் அவர்களது படங்களைத் தமது பஸ்களில் காட்சிப்படுத்தியும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மிரட்டல் விடுத்தும் பஸ் உரிமையாளர்கள் இத்தகைய சட்டவிரோத பஸ் சேவைகளை நடத்தி வருகின்றனர்.

வடபகுதிக்கு இத்தகைய வழித்தட அனுமதிப்பத்திரமின்றிப் பயணிக்கும் பஸ்களை இனம் கண்டு பொலிஸாரும் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகளும் பஸ் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இத்தகையோரது குற்றத்துக்காக அறவிடப்படும் பத்தாயிரம் ரூபா அபராதத்தொகையை ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிக்க நான் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன்.

அதேவேளை கேள்விகோரல் நடைமுறைமூலம் வழித்தட அனுமதிப் பத்திரம் பெறுவோர் சட்டபூர்வமற்ற பஸ்சேவையைமேற்கொள்வோரது செயற்பாடுகளால் பாதிப்பை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது. எனவே வடபகுதிக்கு பஸ் சேவைகளை மேற்கொள்ளும் பஸ் உரிமையாளர்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்குரிய கட்டணங்களைச் செலுத்தி வழித்தட அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு பஸ் உரிமையாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டில் சமாதானச் சூழல் உருவாக்கப்பட்ட பின்னர் நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் வடபகுதிக்குப் பயணம் மேற்கொள்வது அதிகரித்துள்ளது. எனவே தேசியபோக்குவரத்து ஆணைக்குழு முக்கியத்துவம் வாய்ந்ததான வவுனியா நகரில் இலங்கைபோக்குவரத்து ஆணைக்குழுவின் மத்திய நிலையமொன்றை நிறுவ முன்வந்தது.

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர் இவற்றில் நிலவும் குறைபாடுகள் நேர்சீர் செய்யப்பட்டு மக்கள் தமது பயணங்களை இலகுவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

(த)

# அமெ. தீர்மான எதிர்பார்ப்பு பொய்யாக இடமளிக்கக்கூடா

## இந்து நாளிதழ் சுட்டிக்காட்டு

புதுடில்லி, ஒக். 7

ஐ. நா. மனித உரிமைகள் சபையில் என்ன எதிர்பார்புகளின் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோ அந்த எதிர்பார்ப்புகள் பொய்யாவதற்கு இடமளிக்கக்கூடாது என இந்தியாவின் இந்து ஆங்கில நாளிதழ் தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் பெரும் எதிர்பார்ப்புகள் என்ற தலைப்பில் வரையப்பட்டுள்ள அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பயணிக்க வேண்டிய பாதை இலகுவானதாகயிருக்காது. நம்பகத்தன்மை மிக்க நீதிப்பொறிமுறையை உருவாக்கவேண்டும். மேலும் அதற்குள் நீதிபதிகள் போன்ற வெளிநாட்டு வளங்களை மிகவும் அவதானமாக உள்வாங்கவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் தாங்களாக முன்வருவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய விசாரணை நடைமுறையை உருவாக்கவேண்டும்.

பொதுமக்கள் மீதான குண்டுத் தாக்குதல் மற்றும் சரணடைந்தவர் கள் படுகொலை செய்யப்பட்டது (குறிப்பாக அரசியல் செயற்பாட்டாளர் கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ) போன்றவற்றுக்கான கட்டளைப் பொறுப்பைத் தீர்மானிப்பது இலகுவானதாக அமையாது. எனினும் இதனை உரிய முறையில் முன்னெடுக்கவேண்டும். அரசியல் தீர்வை உருவாக்குவதற்கான சவாலை விட இது மிகவும் கடினமானது.

போர்க் குற்றங்கள் குறித்து விசாரணைசெய்து தண்டனை வழங்குவதற்காக வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய பொறிமுறை என்பது முழுமையான சர்வதேச விசாரணையை வலியுறுத்தியவர்களுக்கு ஏமாற்றமளிக்கலாம். வேறு சிலருக்குத் தீர்வு காணப்படாமல் உள்ள பல விடயங்களுக்குத்தீர்வைக்காண்பதற்கான கிடைத்தற்கரிய சந்தர்ப்பமாக இது காணப்படலாம். இலங்கை குறித்த தீர்மானம் நல்லிணக்கத்தையும், உண்மையை கண்டறிதலை யும் ஊக்குவிக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இது வரை கிடைக்காத நீதியை வழங்கலாம். அந்த அவலங்கள் மீண்டும் நிகழாமலிருப்பதை உறுதிசெய்யலாம். இது அரசியல் தீர்வுக்கான இன்னொரு வாய்ப்பை உருவாக்குகின்றது என்ற நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே நிறைவேற்றப்பட்டது .இந்த நம்பிக்கைகள் பொய்யாகக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# பிரேமதாஸவின் கிராம எழுச்சி மீண்டும் செயற்படுத்தப்படும்

பிரேமதாஸகாலத்துகிராமஎழுச்சித் திட்டத்தை மீண்டும் நாடு முழுவதும் செயற்படுத்தவுள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இம்முறை வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி 240 மில்லியன் ரூபாவில் 38 எழுச்சிக் கிராமங்களைச் செயற்படுத்தவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்தியதர வர்க்க மக்களுக்காக 5 இலட்சம் வீடுகளைநிர்மாணிக்கவுள்ளோம். 100 நாள்களில் 38 ஆயிரம் வீடுகளைநிர்மாணிக்கும்பணிகளை ஆரம்பித் தோம். இந்த மாத இறுதிக்குள் அந்தப்பணிகள்நிறைவடையஉள்ளன. அடுத்தவருடத்தில்மீதமுள்ளவீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும். இதனை தவிர ஊடகவியலாளர்களுக்காகஊடகக்கிராமமும் மருத்துவக்கிராமமும்நிர்மாணிக்கப்படும் எனவும் அமைச்சர் பிரேமதாசமேலும்தெரிவித்துள்ளார். (த-வ)

# மகிந்த மீது இன்னமும் ஊடகங்களுக்கு அச்சம்

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கருத்து

கண்டி, ஒக்.7

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச மீது ஊடகங்கள் இன்னமும் அச்சம் கொண்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மனித உரிமைகள் குறித்து உள்நாட்டு விசாரணைகளை நடத்த முதலில் இணங்கியவர் மகிந்த ராஜபக்சதான் என்று ஒரு நாளி தழுக்கு அளித்திருந்த செவ்வியில் நான் குறிப்பிட்டிருந்தேன். அந்த நாளிதழ், செவ்வியின் அந்தப் பகுதியைப் பிரசுரிக்கவில்லை.

மகிந்தராஜபக்சவின் பெயரைக் குறிப்பிட்டபோது சில ஊடகவியலாளர்கள் அவருக்கு எதிராக எதையும் கூறவோ, பிரசுரிக்கவோ பயப்படுவதாகத் தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கு வந்திருந்த ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனிடம், உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்வதாக மகிந்த ராஜபக்ச இணங்கியிருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(த-வ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரளி கிண்ணத் தொடரில் இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 7
நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத் தொடர் இன்று முதல் நடைபெறவுள்ள நிலையில், இன்றைய நாளின் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளதும் ஆட்டங்கள் இடம்பெறவுள்ள மைதானங்களின் விவரங்கள் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். மாவட்ட இணைந்த அணியை எதிர்த்து டி.எஸ். சேனநாயக்க கல்லூரி அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மலியதேவ கல்லூரி அணியை எதிர்த்து மொனராகல இணைந்த அணி மோதவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். சென்.ஜோன்ஸ்கல்லூரி அணியை எதிர்த்து நுவரேலியா, கேகாலை இணைந்த அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டேப்றவேவா மத்திய அணியை எதிர்த்து மட்டக்களப்பு,திருகோணமலை இணைந்த அணி மோதவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொழும்பு ஆனந்தாக்கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி, முல்லைத்தீவு இணைந்த அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வத்தளை சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து சர்வதேச பாடசாலை இணைந்த அணி மோதவுள்ளது.

ஓட்டுசுட்டான் மகா வித்தியால மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றிச்மன் கல்லூரி அணியை எதிர்த்து பி.டி.எஸ். குணரத்ன கல்லூரி அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார், வவுனியா இணைந்த அணியை எதிர்த்து தர்மராஜா கல்லூரி அணி மோதவுள்ளது.

**பெண்கள் பிரிவு**

மாங்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டங்களில் காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சீநிகம மகளிர் அணியை எதிர்த்து மாத்தளை அணி மோதவுள்ளது. முற்பகல் 11மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நித்தம்புவ மகளிர் அணியை எதிர்த்து வடக்கு-கிழக்கு இணைந்த அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலன்றுவை அணியை எதிர்த்து சக்தி மகளிர் 'ஏ' அணி மோதவுள்ளது. (ம-23)



வருடாவருடம் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையினால் முரளி கிண்ணத்தொடர் பெரும் எடுப்பில் நடத்தப் படுவதுண்டு. அந்த வகையில் நடப்பு வருடத்துக்கான தொடர் இன்று முதல் எதிர்வரும் 11ஆம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையில், கடந்த வருட முரளிக்கிண்ணத் தொடரின் சில பதிவுகள்.

# வாய்ப்பைத் தக்கவைத்துள்ளது பொம்மர்ஸ்

## யங்ஹென்றிஸுக்கு எதிரான ஆட்டத்தை சமநிலையாக்கி

மாங்குளம், செப். 7
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்டுவரும் அணிக்கு ஏழு வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடரில் யங்ஹென்றிஸ் எதிர் பொம்மர்ஸ் அணிகள் மோதிய ஆட்டமொன்று சமநிலையில் முடிவடைந்துள்ளது.



குறித்த தொடரில் ஏற்கனவே அரையிறுதிக்கு முன்னேறியிருந்தது யங்ஹென்றிஸ். இதனால் பதற்றமான சூழலில் இருந்து அந்த அணி விடுபட்டிருந்தது. ஆனால் இந்த ஆட்டத்தில் தோற்றால் தொடரில் இருந்து வெளியேறவேண்டு மாதலால் வென்றேயாக வேண்டும் அல்லது ஆட்டத்தை குறைந்த பட்சம் சமநிலையில் முடித்தேயாகவேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது பொம்மர்ஸ்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தின் நான்காவது நிமிடத்திலேயே யங்ஹென்றிஸ் அணியின் ஞானம்ஸ் கோல் கணக்கை ஆரம்பித்து வைக்க பொம்மர்ஸ் அணிக்கு பேரிடி உண்டானது. நிலமையின் தீவிரத்தை உணர்ந்து 13வது நிமிடத்தில் பழிதீர்த்தார் பொம்மர்ஸின் சாரங்கன். மற்றுமொரு கோலை போட்டார் ஞானம்ஸ். ஹென்றிஸின் ஆதிக்கம் மீண்டும் மேலெழுந்தது. மேலதிகமாக கோல்கள் எவையும் பதிவாக வில்லை. 2:1 என்ற கோல் யங்ஹென்றிஸின் வாய்ப்புக்களுடன் முடிந்தது முதல் பாதி.

பதில் கோலை போட வேண்டும் என்ற கட்டாயத்தில் பொம்மர்ஸ் களமிறங்கியதனால் இரண்டாம் பாதியில் அந்த அணியின் போராட்ட வேகம் சற்றுதீவிரமடைந்தேகாணப்பட்டது. இரண்டாம் பாதியின் 4ஆவது நிமிடத்திலேயே மீண்டும் ஒரு கோலை போட்டார் சாரங்கன். ஆட்டம் சமநிலையானது. மேலதிக கோலுக்கான இரு அணிகளதும் முயற்சி தோல்வியி லேயே முடிய, ஆட்டத்தின் முடிவு சம நிலையானது. இதனால் தனது வாய்ப்பை தொடர்ந்தும் தக்க வைத் துள்ளது பொம்மர்ஸ். (ம-422)

# சம்பியனாகியது சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்



யாழ்ப்பாணம், ஒக். 7
அடுத்த வருடம் 15வயதுக்கு உட்பட்ட அணிகளில் இடம்பிடித்து சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும் விதமாக வீரர்களைத் [illegible] படுத்தும் நோக்கத்துடன் தேசிய விளையாட்டு அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தற்போதைய 13 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான அணிகளுக்கிடையில் மாகாண ரீதியாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் சங்கானை சிவப்பிரகாச [illegible] சந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தை எதிர்த்து கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் மோதியது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தின் முதல் இரண்டு செற்களையும் கைப்பற்[illegible] மட்ட சம்பியனாகியது. (ம-108)

## திருமகளிடம் வீழ்ந்தது ஐக்கியம்

யாழ்ப்பாணம், ஒக். 7
அராலி வானவில் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் அராலி ஐக்கிய அணியை எதிர்த்து அராலி திருமகள் அணி மோதிக்கொண்டது. இதில் அராலி திருமகள் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எரங்க இல்லை

இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த எரங்க காயத்தில் இருந்து குணமடையாத காரணத்தினால் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் இருந் தும் நீக்கப்பட்டுள்ளார்.

முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக சமிந்த எரங்க இலங்கை அணியில் கடந்த ஜனவரி மாதம் முதல் இடம்பெறவில்லை. அவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் அவருக்கு மீண்டும் முதுகுப் பகுதியில் காயம் ஏற்பட் டுள்ளதாகவும், அதனால் ஏரங்கமேற்கிந்திய தீவுகள் அணிக்கு எ்திரான தொடரிலும் விளையாட மாட்டார் என்றும் இலங்கைக் கிரிக்கெட்கட்டுப் பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. (ம)

# முதலிடத்தில் அதிக வாரங்கள்

## மூன்றாவது இடத்துக்கு முன்னேறினார் செரீனா



சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் பெண்கள் ஒற்றையர் பிரிவில்; அதிக வாரங்களாக முதலிடத்தில் இருந்தவர்கள் பட்டியலில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் மூன்றாவது இடத்துக்கு முன்னேறி யுள்ளார். நேற்று வெளியான சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் பெண்கள் ஒற்றையர் பிரிவில், அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். இதன்மூலம் அதிக வாரங்கள் முதலிடத்தில் இருந்த வீராங்கனைகளின் பட்டியலில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறி சாதனை படைத்துள்ளார். கடந்த 2013ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி தரவரிசையில் முதல் இடத்தை பிடித்த செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து 138ஆவது வாரமாகமுதலிடத்தில் நீடிக்கிறார். மட்டுமல்லாது செரீனாவின் ரென்னிஸ் வாழ்வில் அவர் 261 வாரங்கள் முதலிடத்தில் இருந்துள்ளார். இதனால் அதிக வாரங்கள் முதலிடத்தில் இருந்தவர்கள் பட்டியலில் 3ஆவது இடத்தில் இருந்த அமெரிக்க வீராங்கனை கிறிஸ் இவரெட் என்பவரை (260 வாரங்கள்) பின்னுக்கு தள்ளிவிட்டு செரீனா வில்லி யம்ஸ் 3ஆவது இடத்தை தனதாக்கினார். அதிக வாரங்கள் முதலிடத்தில் இருந்தவர்கள் பட்டியலில் டெபிகிராப் (377 வாரங்கள்) முத லிடத்திலும், அமெரிக்காவைசேர்ந்தமார்ட்டினாநவரத்திலோவா (332வாரங்கள்)2ஆவதுஇடத்திலும்உள்ளனர். (ம)

## ஆட்டம் சமநிலையில்



யாழ்ப்பாணம், ஒக். 7

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்ட உள்ளரங்கதிறப்பு விழாவை முன்னிட்டு இடம்பெற்ற நட்பு ரீதியிலான கரப்பந்தாட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

கடந்த சனிக்கிழமை மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்ட உள்ளரங்கில் இடம்பெற்ற நட்பு ரீதியிலான கரப்பந்தாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதிக் கொண்டது. முதலாவது செற்றை மன்னார் மாவட்ட அணி 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்ற இரண்டாவது செற்றை யாழ். மாவட்ட அணி 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது. இரண்டு செற்களைக் கொண்ட ஆட்டம் என்பதால் 1:1 என்ற அடிப்படையில் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)



நடைபெற்று வரும் லாலிகா தொடரில் நேற்று நடைபெற்ற [illegible] ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் அணியின் கோல் காப்பாளரான கெய்லர் நவாஸ் அத்லட்டிக்கின் பனால்டி உதை ஒன்றைத் தடுக்கும் காட்சி.

## சென்.மேரிஸ், றோயல் இறுதியில் மோதத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 7

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் சென்.மேரிஸ், றோயல் அணிகள் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் மாலை 4மணிக்கு இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியைஎதிர்த்துஊரெழுறோயல் அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது. (ம-23)

## இந்தியக் கிரிக்கெட் வெட்கிக்க வேண்டிய நாள்

தென்னாபிரிக்கா – இந்தியா அணிகள் மோதிய இரண்டாவது ரி–20 ஆட்டத்தில் மைதானத்தில் தண்ணீர்ப் போத்தல்களைத் தூக்கி எறிந்த ரசிகர்களின் செயலுக்கு அதிருப்தி தெரிவித்துள்ளார் தென்னாபிரிக்க ரி–20 தலைவர் பிளஸிஸ்.

பிளாஸிஸ் தெரிவித்ததாவது 'இந்திய ரசிகர்களின் மோசமான செயல் எனக்குவருத்தம்அளிக்கும்விதமாக அமைந்துள்ளது. இது பார்ப்பதற்கு நன்றாக இல்லை. நான் 5–6 வருடங்கள் இந்தியாவில் கிரிக்கெட் விளையாடுகிறேன். இது போன்று மோசமான நிகழ்வுகளை இதற்கு முன்பு பார்த்தது இல்லை. சிறந்த அணி வெற்றி பெற்றுவிட்டு செல்லும். இதற்காக இப்படி நடந்து கொள்வதுசரியல்ல. இது நல்ல விடயமாகத் தெரியவில்லை. ரசிகர்களின் இது போன்ற மோசமான நடத்தை வருத்தம் அளிக்கும் விதமாக இருக்கிறது. ரசிகர்களின் மோசமான செயலுக்காக இந்தியக் கிரிக்கெட் வெட்கிக்கும் படிதாக அமைந்து விட்டது– என்றார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெர்டிச்சிடம் கிண்ணம்

சீனாவில் நடைபெற்றுவந்த ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், செக்குடியரசின் தோமஸ் பெர்டிச் கிண்ணம் வென்றுள்ளார். இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் கில்லர்மோ கார்சியா லோபசுடன் மோதிய பெர்டிச் 6–3, 7–6 என்ற நேர் செற்களில் 1 மணி, 47 நிமிடங்கள் போராடி வென்று கிண்ணத்தைக் கைப்பற்றினார். (ம)

# முன்னேறுகிறார் ரத்வன்ஸ்கா

சீனாவில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்றில் விளையாட, போலந்து வீராங்கனை அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா தகுதி பெற்றுள்ளார்.

இரண்டாவது சுற்றில் ஜேர்மனியின் மோனா பார்தெலுடன் நேற்று மோதிய ரத்வன்ஸ்கா 4–6 என்ற கணக்கில் முதல் செற்றை இழந்து பின்தங்கினார். பின்னர் சுதாகரித்துக் கொண்டு விளையாடிய அவர் 6–1, 6–4 என்ற கணக்கில் அடுத்த 2 செற்களையும் கைப்பற்றி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)




**Jaffna Central College Education Care Trust**

**யாழ். மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்**

**தரம் 6 முதல் A/L வரை தமது கல்வியைத் தொடரும் 20 மாணவர்களுக்கு அனுசரணை**

**யாழ் மத்திய கல்லூரி ஆரம்பித்து 200 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு இந்தத் திட்டம் எம்மால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.**

- 2016 ஆம் கல்வி ஆண்டுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள்
- நிலையத்தால் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பறைகள் வழங்கப்படும்.
- புலமைப்பரிசில் வெகுமதிகள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் மாதாந்தம் தலா 1200 ரூபா.
- விண்ணப்பதாரிகள் 170 புள்ளிகளுக்கு மேல் புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி : 30.11.2015
தொடர்பு : S.Sukirathan - 021 2222184
விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்
யாழ்.மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.



**Sky Computers (Pvt) Ltd**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

*Dip.Ms Office - 2 Months
*Certificate in Sinhala - 3 Months

TP:021-222-1417

உங்களிற்கு விருப்பமான நேரத்தைத் தெரிவுசெய்து கற்க முடியும்

89.கண்டி றோட், யாழ்ப்பாணம்.(கச்சேரிக்கு அருகாமையில்)



FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ... International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM ...
MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1002 மாணவர்கள் French கற்றுள்ளனர்
0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி. | 181, பிரதான வீதி நெல்லியடி. TP: 021 320 2973 | கண்டி வீதி, சாவகச்சேரி
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre



**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L , O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், இணைய முடியும்.

எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 10.10.2015 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 | 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 | 4. மாலை 03.00-05.00

வார நாள் (திங்கள்,புதன்) பிரிவுகள் ஆரம்பம் 12.10.2015
1. காலை 8.00–10.00 | 2. காலை 10.00–12.00

10.10.2015 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு சான்றிதழ் மற்றும் அனுமதிக்கட்டணம் என்பன இலவசம்!

SAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 021 320 3313
கொறகாமம் வீதி, நெல்லியடி. 077 621 4567



## கிண்ணத்தைக் கைப்பற்றியது உடுவில் மகளிர் கல்லூரி கொக்குவில் இந்துவின் தொடரில் இந்துவையே வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஒக். 7

கொக்குவில் இந்துக்கல்லூரியின் மாணவனும் கூடைப்பந்தாட்ட வீரனுமான அமரர் கீர்த்திகன் ஞாபகார்த்தமாக கொக்குவில் இந்துக்கல்லூரியினால் யாழ். மாவட்டபாடசாலைஅணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி அணி சம்பியனானது.

நேற்று செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 51:41 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம-23)








**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
வழங்கும்

**After AL What Next?**

உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற
பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?
உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு

**Spoken English with Grammar** 1½ Months

100% பயிற்சி | 100% வெற்றி

**Diploma In English** 2½ Months

ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்படுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

- Excellent Teachers' Panel & Individual Attention

| Spoken English with Grammar | | Diploma in English | |
|---|---|---|---|
| Rs.10'000 | Rs.7'500 | Rs.14'000 | Rs.9'500 |

Batches Start On
08.10.2015@ 9.00am | 12.10.2015@ 9.00am
09.10.2015@ 9.00am | 10.10.2015@ 2.00pm | 13.10.2015@ 9.00am

BCHS
No.15, Chirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)
Tel : 021-2224550, 0777222422,0776555677



**CCTV துறையில் வல்லுனர் ஆக....**

100% தொழில் சார் செயன்முறை பயிற்சி நெறி

*Real Equipments இனால் பயிற்சி வழங்கப்படும்
*அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

ICS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
021- 4926222, 076-7013060
Next Batch 9th October 2015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பெண்களின் முன்னேற்றத்தின் வழிகாட்டியாக....



உடுவிலூர் கலா.

மெகா தொடருக்கு முன்னுரிமை அளிக் கும் பெண்கள் அவற்றுக்கான நேரத்தை கருத்தில் கொண்டு செயற்படுகின்றனர். பெண்ணிய வளர்ச்சிக்கு தேவையான நிகழ்ச்சி களை விடுத்து மெகா தொடர்க ளுக்கு பெண்கள் அடிமையானது தமது வளர்ச்சிக்குத் தாமே போடும் முட்டுக்கட்டை. பெறுமதிமிக்க நேரத்தை மெகா தொடர் களுக்காக விரயம் செய்து ஓய்வு நேரமாக மாற்றும் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் ஒன்று மட்டுமே. மெகா தொடர்களுக்கு வரவேற் பளிக்கும் பெண்களால் வளர்ச்சிய டைவது தயாரிப்பாளர்களும், நடிகர் களுமே. முன்னேற்றம் எதுவுமின்றி குடும்பத்தில் பிரச்சினையை எதிர் நோக்குவதும் நேரயத்தை விரய மாக்குவதுமே இவர்களுக்கு மிஞ்சும். ஆக மெகா தொடர் மேல் ஆர்வம் காட்டாது பெண்களின் முன்னேற்றத் துக்கான நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் பார்ப்பதன் மூலம் பெண்களாகிய எமது அறிவு விருத்தியடையும்.

பெண்களின் வளர்ச்சிக்கு சிறந்த வழி காட்டியாக தொலைக் காட்சியுள்ளது. அதனைத் தவறாகப் பாவித்து நேரத்தை விரயமாக்காமல் வளர்ச்சிக்கான ஏணிப் படியாக மாற்ற வேண்டும். மாற்றம் ஒன்றே நம்மை முன்னேற்றும். புரிந்து கொள்வீர்கள் பெண்களே..

மனித மூளையின் சிந்தனை வளர்ச்சி அறிவியலின் பிரசவம். அறிவியலின் அதீத வளர்ச்சி தொலைக்காட்சி, தொலை நகல், இணையம் போன்ற நவீன கண்டு பிடிப்புக்கள். எந்தவொரு அறிவியல் சாதனமும் மனிதனின் வாழ்வை அழிப் பதற்கெனக் கண்டுபிடிக்கவில்லை.

மனிதன் பயன்படுத்தும் வழிகளே தவ றானவை. தொலைக்காட்சி பெண் களின் வாழ்வை நாசமாக்குகிறது. நேரத்தை சூறையாடுகிறது என்று குற்றம் சொல்கிறது சமூகம். நாண யத்தின் இரு பக்கங்கள் போல் தொலைக்காட்சியால் நன்மையும், தீமையும் இருக்கின்றன.

தொலைக் காட்சியில் மெகா தொடர் கள் மட்டும் ஒளிபரப்பப்படுவதில்லை. மெகா தொடரில் கூட பல நன்மையான விடங்கள் இருக்கின்றன. அவற்றை சரிவரப் பயன்படுத்தாது வெறுமனே தொடர்களைப் பார்த்து விட்டு தமது நேரத்தை வீணடிக்கின்றனர் பெண்கள். ஆனால் வளரத் துடிக்கும் பெண் களுக்கு சிறந்தொரு வரப்பிரசாதம் தொலைக் காட்சி.

டிஸ் ரீவியில் 370 சனல்கள் பல மொழி களில் உள்ளடங்கலாக உள்ளன. தமிழ் மொழிச் சனல்களில் பெண்களின் வளர்ச்சிக்குத் தேவையான பல நிகழ்ச் சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. தினசரி புதுப்புது சமையல், நோய்கள் பற்றிய விளக்கங்கள், உளவள ஆலோசனை, கைவேலை, தையல், வீட்டுத்தோட்டப் பராமரிப்பு போன்ற நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்படுகின்றன.

பணவிரயமின்றி வீட்டில் இருந்தவாறே சுயதொழில் செய்யக்கூடிய அளவுக்கு நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இவை ஒளிபரப்பபப்படுவது பல பெண்களுக் குத் தெரிவதில்லை.

பெண்களின்
முன்னேற்றத்தின்
வழிகாட்டியாக....

அன்னை ஓர் ஆலயம்
அன்னை என்பவள் கோயிலடா– அவள்
மனமே என்றும் தெய்வமடா
அன்பால் ஆன உருவமடா– அதைப்
பேணுதல் எமது கடமையடா

பெண்ணின் பெருமை தாய்மையடா– அந்தத்
தாயின் உள்ளம் தூய்மையடா–அவள்
வாயில் வருவது வாய்மையடா–இதை
உணர்வது எமது கடமையடா

துளியாய் எம்மை ஏற்று நின்று
தூய நல் உடம்பில் வளர்த்திருந்தாள்
உயிரை உடலில் புகுத்தி நின்று
உலகில் படைத்து உவகையுற்றாள்

பத்தியம் பலவும் பார்த்திருந்தாள்
பண்பாய் எம்மை வளர்த்திருந்தாள்
பாடசாலைக்குச் செல்ல வைத்திருந்தாள்
பாரினில் எம்மை உயர்த்தி வைத்தாள்

எத்தனை வயதே ஆனாலும்
எவ்வகைத் துன்பம் வந்தாலும்
அருகினில் இருந்து அரவணைத்து
ஆறுதல் பலவும் தந்திடுவாள்
உவகை படைத்தவன் இறைவனென்றால்
மனிதனைப் படைத்தவள் அன்னையன்றோ
உலகினில் தெய்வம் இறைவனென்றால்
மனிதரில் தெய்வம் அன்னையன்றோ

தூய்மையின் குலமே பெண்களடா
அந்தப் பெண்களை நீயும் பேணிடடா
சீதனக் கொடுமை நீ ஒழித்து
சீரான வாழ்வைக் கொடுத்திடடா



நா.ஸ்ரீகிருஷ்ணா
யாழ்ப்பாணம்.

சு.சிவாஜினி, சுன்னாகம்.



# ஏன் இந்தப்பாகுபாடு

இன்று எங்கு பார்த்தாலும் ஆணுக்கு பெண்கள் சளைத்தவள் இல்லை. எதிலும் சமவுரிமை என்று தானே அனைவரும் வாய்ப்பு வரும் இடமெல்லாம் முழங்கித் தள்ளுகின்றோம். பெண் களுக்கு அனைத்து உரிமைகளும் உண்டு என்று வாதிடும் பெரி யோர்களும் துறைசார் அதிகாரிகளும் இந்த விடயத்தை சற்று சிந்தியுங்கள்.

ஆணும் பெண்ணும் செய்கின்ற தொழில் சமஅள வாக இருந்தாலும், அங்கே ஆண் தொழிலாளிக்கு கிடைக்கின்ற ஊதியம் பெண் தொழிலாளிக்கு கிடைப்பதில்லை. இன்று கூலித் தொழில் புரிகின்ற எமது பெண்கள் ஆண்களோடு சமமாக அதே அளவு தொழில் செய்கின்ற போதும் சம்பளம் குறையவே கிடைக்கின் றது. ஏன் இந்த நிலை?

பெண்களிடமிருந்து உழைப்பை உறிஞ்சப் பெறும் முதலாளி வர்க்கத்தினர் கொஞ்சம் யோசிக்க வேண் டும். பெண்கள் என்றால் கொடுக்கிறதை வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள் என்று பெரிய முதலாளிகள் கூறுவார்கள். இன்று அரச உத்தியோகம் பார்க்கும் பெண்களின் நிலை என்பது பிரச்சினை இல்லை. கூலிக்கு போகும் பெண்கள் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்து போவது தான் மிச்சம்.


கடைகளில் தொழில் புரியும் பெண்களின் நிலை ஏதோ கொடுப்பதை வாங்கிக் கொண்டு போவது தான். கூலிக் காரர்களை ஏய்த்து ஏதோ முதலாளி வர்க்கம் வசதி படைத் தவர்களாக வாழ்கிறார்கள். தனது வறுமையை விரட்டப் பாடுபடும் எமது பெண் தொழிலாளர்களின் சம்பள உயர்வுகள் பற்றி யாரும் கதைப்பது இல்லை. அவர்களும் காலை கூலி வேலைக்குப் போனால் ஏதோ கிடைப்பதைக் கொண்டு வந்து எமது பிள்ளை குட்டிகளை பார்ப்பது என்று இருந்து விடுவார்கள்.

எது எப்படியோ எமது பெண்களின் நிலை மீதும் அக்கறை கொள்ளுங்கள். ஆண்களோடு சரி நிகராக தொழில் புரியும் பெண்களுக்கு சமமான பாகுபாடு அற்ற சம்பளத்தைப் பெற்றுக் கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சித் தவிப்பு

புத்தூர் விஸ்வம்



குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு என்பார்கள். தான் பேசியதை அவனால் நினைவில் வைத்துக்கொள்ள முடியாத மதி மயங்கிய நிலையை இது குறிக்கும். அதுபோல குடிக்கும் நேரம் வந்ததும் அதற்காக அந்தரப்படுவதும் எந்த வேலையானாலும் அதைவிட்டு விட்டு தவிப்புடன் குடியைத் தேடி ஓடிப்போவதும் அவனது தணியாத தாகம்.

தொலைக்காட்சித் தொடர் நாடகம் பார்க்கும் தங்காவின் நிலையும் இதுதான். மாலை ஆறு மணிக்கு மரகதவீணையுடன் தொடங்கி தென்றல் தொடர் முடிந்து, புதிதாகத் தொடங்கிய இது காதலா அதையடுத்து 7 மணிக்குப் பிரியமானவள், 7.30 மணிக்கு தொடங்கும் மூன்று முடிச்சு நாடகமும் பார்த்துத்தான் இரவுச் சாப்பாட்டுக்கான தயாரிப்புக்கள் தொடங்கும். தாயும் மகளும் இந்த விடயத்தில் ஒற்றுமை.

மகள் அருகிலுள்ள ஊர்ப் பாடசாலையில் ஆசிரியையாகப் பணிபுரிகிறாள். உயர்தர வகுப்புகளின் கணித ஆசிரியை. இன்னும் திருமணம் ஆகவில்லை. கணித ஆசிரியையின் நேரக் கணிப்புப்படி இரவு 8.30 மணிக்கு சமையல் அறைக்குள் அம்மா புகுந்தால் போதும் தான் தேங்காய் துருவுதல் போன்ற சில சிறிய ஒத்துழைப்புகளைச் செய்துவிட்டு பாடசாலை முன்னாயத்த வேலைகளைக் கவனித்துக் கொள்வாள்.

மூன்று நேரமும் சமையல் வேலைகளைக் கவனிக்கும் அம்மா, இடைநேரங்களில் தன் மன ஆறுதலுக்காகத் தொலைக்காட்சியைப் பார்த்துக்கொள்ளட்டுமே என்பதில் அவள் உடன்பாடாக இருந்தாள். அதற்காகச் சில சமயங்களில் தந்தையுடனும் வாதாடிப் பெண் உரிமைகளை நிலை நிறுத்துவாள்.

தந்தை லோகநாதன் மட்டும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் பார்ப்பதற்கு சிடுசிடுப்புக்காட்டுவார். தென்னை மரங்களில் விழுந்த தேங்காய், ஓலைகள் பொறுக்க நேரமில்லை. என்ன திரைப்படம், எப்பபோடுவார்கள், என்ன நாடகங்கள், எப்ப எப்ப என்பது மட்டும் அவவுக்குத் தெரியும் என்று சினந்துகொள்வார்.

காங்கேசன் சிமெந்து ஆலையில் ஒரு காலத்தில் பணியாற்றிய லோகநாதன் ஓய்வு நிலையில் இப்போது தனியார் மின்சாரக் கடையில் தொழில் பார்த்து வருகிறார். மகளின் திருமணச் செலவுகளுக்காக உழைப்புச் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்தவர். அவர் வேலையால் வரும்போது தேநீர் சிற்றுண்டி கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் மனுசன் கடுமையாகப் புறுபுறுப்பார் என்பதை விளங்கி, இடைவேளை விளம்பரங்களின் போது எழுந்தோடி சமையலறையையும் சற்றுக் கவனித்துக்கொள்வாள் தங்கம்.

நாளைமறுதினம் பக்கத்து வீட்டுப் பங்கயம் அக்காவின் மகளுக்குத் திருமண எழுத்து. அதற்குப் பலகாரம் சுட உதவி ஒத்தாசைக்கு வரச்சொன்னவை. நாங்கள் உதவினால்தான் நாளைக்கு அவர்களும் உதவுவார்கள் என்பது தெரிந்த தாயும் மகளும் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்க்காமல் போவதில் பெரும் தவிப்பு அசௌகரியத்தை உணர்ந்தனர். அதுவும் பிரியமானவள் நாடகத்தில் அவந்திகா மணப்பெண் தப்பியோடிய பின் என்ன ஆனாள் என்பதை அறிந்துகொள்ளும் தவிப்பு அதிகரித்தது. அதை மட்டுமே பார்த்து விட்டுப் போவம் என்ற நினைப்பில் தொலைக்காட்சியை இயக்க முனைந்தனர். ஆனால் என்ன அநியாயம் பெட்டிக்குள் இருந்து ஏதோ கிறுகிறு என்று இரையும் சத்தம் கேட்டது.

"மகள்! ஏதோ கிறுகிறு என்று இரையும் சத்தம் கேட்கிறதே. இங்கே வா! பார்!" என்று தாய் குரல்கொடுத்தாள். "அம்மா! அவதானம் பகல் மழை பெய்தது. ஏதேனும் மழைத் தண்ணீர் ரி.வி. வயர் வழிய வந்து கரண்ட் பாயுதோ தெரியாது" என்கிறாள் மகள். "அப்ப நீ கிட்டப் போகாதை பிள்ளை. உதயன் பேப்பரிலை படிச்சனான். மழை வெள்ளத்துக்கைபோன தகப்பனும் மகனும் அறுந்த கரண்ட வயரிலை தடக்கி உயிரிழந்ததாம். வேறு எங்கையோ மின்சார சபைப் பொடியன் தூணிலை ஏறி வயரோ பல்போ மாத்தேக்கை கரண்ட் அடிச்சுச் செத்ததாம்" என்று தாயார் பய முறுத்தி எச்சரிக்கைகள் விட்டார்.

கிர்.... எனத் தொடரும் சத்தம் மட்டும் இருவர் மனதிலும் பயப் பீதியைமூட்ட செய்வதறியாது திகைத்தனர். அந்தளவில் அரை மணித்தியாலம் முடிந்து அடுத்த நாடகம் தொடங்கும் நேரத்தைச் சுவர்மணிக்கூடு காட்டியது.

"அம்மா நில்லுங்கோ! நான் 'றிப் சுவிச்' பார்த்திட்டு வாறன்" என்று மகள் விரைந்தாள். "எல்லாம் ஒழுங்காய்தானே கிடக்கு 'றிப்' விழவில்லை. கரண்ட் ஒழுங்காய்த் வாறதுக்கான சிவப்புச் சமிக்ஞையும் எரியுது. அப்ப என்ன சத்தமாயிருக்கும்" என மகள் சொல்லும்வேளை வெளியே இருமல் சத்தம் கேட்கிறது.

"அம்மா! அப்பா வந்திட்டார்" என்ற குரல் கேட்ட தாய் தங்கம் ஓடி வந்தாள். "வாருங்கோ! வாருங்கோ!" என்று அன்புடன் குரல் கொடுத்தாள். "என்ன! ஒருநாளும் இல்லாத திருநாளாகப் பலமான வரவேற்புக் கொடுக்கிறாய்" என்று அதிசயமாகக் கேட்டார் லோகநாதன். "ஏன் இன்றைக்கு நாடகங்கள் இல்லையோ அல்லது அடுத்த வீட்டுப் பலகாரச் சூட்டுவேலை பார்க்கப் போறதோ" என்றார் லோகநாதன்.

"ஓமப்பா! நீங்கள் கால் முகம் கழுவிப் போட்டு வாங்கோ. தேத்தண்ணி குடிக்கலாம்" என்றாள் மகள். உபசரிப்புப் பலமாக இருப்பதைப் புரிந்துகொண்ட லோகர் கிணற்றடிக் குழாயில் கால்முகம் கழுவித் துவாய்த் துண்டால் துடைத்துவிட்டுச் சாமியறைக்குச் சென்று, "அப்பா முருகா! இன்று என்ன வரம் கொடுத்தாய் அன்னந் தண்ணி நேரத்துக்குக் கிடைக்கப் போகுதே" என்று மகிழ்ந்தபடி உள்ளே சென்றார்.

> "இந்த மனுசனுக்கு எங்கை நேரம்! உதயன் பேப்பர் படிச்சனீங்களே?" என்றாள்தாய். "உதயனிலை என்ன புதினம்? எதைச் சொல்லுறாய் அப்பா!" என்றார் லோகர். "அது தானப்பா! அண்டைக்கு ஒரு தகப்பனும் மகனும் கரண்ட் அடிச்சு செத்தது. பிறகு மின்சாரக் கம்பத்திலை ஏறின பெடியன் செத்தது. இதுதான் புதினங்கள்.

மகள் அன்புடன் கொண்டு வந்த தேநீரை சிற்றுண்டியை அருந்தியபடியே, "அம்மாவின்றை தொடர் நாடகங்கள் இல்லையே? வலு ஆறுதலாய் நிக்கிறியள்!" என்று நக்கல் அடித்தார்.

"இல்லையப்பா! நாடகங்கள் நடக்கும். எங்களுக்குத்தான் பயம்" என்றாள். "நாடகத்திலை என்ன பயம்பிள்ளை?" என்றார் அப்பா. "இந்த மனுசனுக்கு எங்கை நேரம்! உதயன் பேப்பர் படிச்சனீங்களே?" என்றாள் தாய். "உதயனிலை என்ன புதினம்? எதைச் சொல்லுறாய் அப்பா!" என்றார் லோகர். "அது தானப்பா! அண்டைக்கு ஒரு தகப்பனும் மகனும் கரண்ட் அடிச்சு செத்தது. பிறகு மின்சாரக் கம்பத்திலை ஏறின பெடியன் செத்தது. இதுதான் புதினங்கள். வாசிக்கேல்லையோ!" என்றாள் தாயார் தங்கா. "உதுகள் கதைச்சவை பேப்பரிலும் வாசிச்சனான். அதுக்கு ஏன் நீங்கள் அழுறியள்" என்றாள் லோகர்.

"அப்பா! நாடகம் பார்க்க அம்மா ரீ.வி. போட்டா ஏதோ கிறுகிறு என்று சத்தம் வந்தது. என்னைக் கூப்பிட்டுப் பார்க்கச் சொன்னா. பிறகு உந்தக் கதையளைச் சொல்லி தொடாதை மழைத் தண்ணி நிக்கும் கரண்ட் அடிக்கும் என்று பயமுறுத்தினா" என்றாள் மகள்.

"எடே இதோ சங்கதி!" என்று கூறி லோகர் ரி.வி. பெட்டியை நெருங்கி ரி.வி. கரண்ட சுவிச்சை நிறுத்தினார். அப்போதும் கிர் சத்தம் தொடர்ந்தது. ஸ்குறு சாவியை எடுத்து மேல் மூடியை கழற்றினார். கிர் சத்தம் போட்ட குளவி வெளியே பறந்து வந்தது. மூவரும் வாய் விட்டுச் சிரித்தனர்.


நேரம் 8.30 தாண்டிவிட்டது. தொடர் நாடகங்கள் பார்க்காமல் தவிப்படைந்த அம்மா அற்பக் குளவியை விளக்குமாற்றால் அடித்தாள்.

பிரியமானவள் நாடகத்தில் ஓடிப்போன அவந்திகா திருமணம் என்ன ஆச்சுதோ என்று மகள் அம்மாவின் தவிப்பை மீண்டும் கிளறினாள். "அடுத்த வீட்டுத் திருமணப் பதிவுக்குப்போக உதவ மனமில்லை. கதையிலை வாற திருமணத் தொடருக்காக கவலைப்படுறியளே!" நாளைக்கு ஆர் உங்களுக்கு உதவுறது என்று ஆதங்கப்பட்டார் அப்பா. நாளைக்கு இரண்டு மூன்று குளவி பிடிச்சு விட்டிட்டுத்தான் தான் போறதென்றார் லோகர். தாயும்மகளும் சிரித்துக்கொண்டே அடுத்த வீட்டுத் திருமணத்துக்குப் புறப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது காதலா?

அ.பைந்தமிழ்



அதிகாலைக் குளிரில் நடுங்கியபடியே தன் வீட்டுத் தோட்டத்தில் மலர்ந்த பூக்களின் வாசனையை சுவாசித்து மெல்ல நடந்து வருகின்றாள் நிகிதா. பனித்துளியில் நனைந்த மலர்களை ஒவ்வொன்றாய் இரசித்தவாறு, மணல்மேட்டில் அமர்ந்த அவளின் நினைவுகள் கல்லூரியை நோக்கி பயணிக்கின்றன.

எந்தவித கவலைகளுமின்றி சுதந்திரமாய் சிறகடித்துத் திரிந்த கல்லூரிக் காலத்தில் கல்வெட்டுக்கள் இல்லாமல் பொறிக்கப்பட்ட பெயர்கள் அஸ்வின், அரவிந்த், றோசி, நிகிதா. நால்வரும் வெவ்வேறு ஊரிலிருந்து உயர் கல்விக்காக ஒரே கல்லூரியில் இணைந்தவர்கள். முதல்நாள் அறிமுகத்திலேயே நால்வரும் நல்ல நண்பர்களாகினர். தாயிடமும் சில தயக்கங்கள் இருக்கும் தோழமையில் அது கிடையாது என்பது இவர்களது நட்பில் முற்றிலும் உண்மை.

இரண்டு வருடகால உயர் கல்வியில் உயிர்கொண்ட புதிய நட்புக் கிடைத்ததில் அனைவருக்கும் மகிழ்ச்சிதான். அவர்களின் நட்பு பலரின் சந்தோஷத்துக்கும், சந்தேகத்துக்கும் வழிவகுத்தது. ஆனாலும், இவர்களின் இலக்கு கல்வியிலும் நிலை தவறா நட்பில் தடம்மாறாது வாழ வேண்டும் என்பதிலுமே இருந்தது.

உயர்தரப் பரீட்சையை எழுதிவிட்டு பெறுபேறுக்காகக் காத்திருந்த காலத்திலும் நால்வரும் பிரத்தியேக வகுப்புகளுக்கு சென்று வந்தனர். அரவிந் எப்பொழுதும் அமைதியான, சிந்தனையாற்றல் மிகுந்தவனாகக் காணப்பட்டான். அவ்வப்பொழுது சிறுசிறு சண்டைகள் வந்தபோதிலும், இவர்களுக்கிடையில் பிரிவு என்ற வார்த்தையைக் காண எவராலும் முடியவில்லை. பரீட்சை முடிவுகள் வெளியாகின. நால்வரும் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெற்றனர்.

ஒவ்வொருவரும் தமது சொந்த ஊருக்குச் செல்ல வேண்டிய காலம் வந்தது. அப்பொழுதுதான் நிகிதாவின் மனதில் இனம் புரியாத தடுமாற்றம். அவளால் நண்பர்களின் பிரிவைத் தாங்க முடியவில்லை. அதிலும் அஸ்வினைப் பிரிந்து செல்வதை எண்ணுகையில் உயிர் உருகியது. அவளால் பிரியாவிடை கூட பகிர நண்பர்களிடம் செல்ல முடியவில்லை. அஸ்வின், அரவிந்த், றோசி மூவரும் சந்தித்து வாழ்த்துக்களைக் கூறி நினைவுப்பொருள்களை வழங்கி, தங்கள் ஊர்களுக்குப் புறப்பட்டனர்.

நிகிதாவின் மௌனம் அனைவருக்கும் புரியாத புதிராகவே இருந்தது. அவள் தொலைபேசி அழைப்புகளுக்குக்கூட பதிலளிக்காது துண்டித்து விட்டாள்.

"நிகிதா" எனத் தாயார் அழைக்கும் சத்தம் கேட்டு நினைவலைகளைப் புறந்தள்ளி தோட்டத்திலிருந்து வேகமாக நடந்து சென்றாள். அவளின் பாதங்கள் மணலில் பதித்த தடயங்களை வேகமாய் வீசிய தென்றல் அழித்துச் சென்றது. ஆனால், அவள் மனதில் பதிந்த அஸ்வினின் நினைவுகளை மட்டும் அவற்றால் அழித்து விடமுடியாது. மனதின் நினைவைக் கூறி சாவு வரை தொடரும் நட்பை இழக்க நிகிதா விரும்பவில்லை. மீண்டும் நண்பர்களைச் சந்திக்கும் போதும் நட்புடன் மட்டுமே உரையாடுவாள் அவள். இதுவும் காதலா?

## சொற்சிலம்பம் - போட்டி இல: 372

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ✿ | 4 | 5 |
| | ✿ | 6 | | ✿ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | ✿ |
| 11 | | ✿ | 12 | | | ✿ | 13 |
| | ✿ | 14 | | | ✿ | 15 | |
| ✿ | 16 | | | ✿ | 17 | | |
| 18 | | | ✿ | 19 | | ✿ | |
| 20 | | | | | ✿ | 21 | |

அனுப்புபவர் பெயர்:..............................................

பூரணமான தபால் விலாசம்: ..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. மிகச் சிறப்பு
4. ஒருவகைத் தானியம்
6. நில்
7. ஒரு வகை மீன்
8. வல்லமை
11. கண், வாய் முதலிய உறுப்புக்கள் உள்ள பகுதி
12. திறன் மிக்க தன்மை
14. சாரீரம்
15. இருபால் இண்ணவில் உருவாவது
16. தீயைத் தொட்டால்
17. மனைவி
18. வேள்வி
19. முக்கனிகளில் ஒன்று
20. துதிக்கை
21. வழுவழுப்புத் தன்மை கொண்டது

### மேலிருந்து கீழ்

1. நைவேத்தியம் செய்த உணவு வகை
2. பெண்கள்
3. வறுமை
4. பூச்சாகப் படிவது
5. ஓர் தூர அளவீடு
7. பண்பற்ற தன்மை
9. பர்வதம்
10. திறன்
13. ஒரு வகைத் தாவர ஒட்டுண்ணி
14. காதுக்குள் சேரும் அழுக்கு
15. அம்பு
16. நலம்
17. கிணற்றில் நீர் அள்ளுவதற்கு உதவுவது
18. என்ன
19. குரோதம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன். அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 370 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) தாமதம் (4) நகாசு (7) கருவி (8) தகுந்த (9)சாவித்திரி (11)தன் (12) தரித்தல் (14) திகில் (16) திரு (18) ஆரம்பம் (20) சக்கரம் (22) சுப (23) மகுடம் (24)அமைதி

### மேலிருந்து கீழ்

(1) தாகசாந்தி (2)மருவி (3)தவித்தல் (4) நகு (5) காந்தல் (6) சுதன் (8) தரித்திரம் (10) திரி (13) தரும் (15) கிழக்கு (17) தம்பதி (18) ஆரம் (19) பசுமை (20) சம (21) கட (22) சுமை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.372
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர். (17.06.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.372 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 21.06.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 370 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
கே.சுதர்சினி,
இல.154, கே.கே.எஸ்.வீதி,
குளப்பிட்டி சந்தி, கொக்குவில்.

**2 ஆம் பரிசு**
கி.வயித்திலிங்கம்,
முதலாம் பகுதி, திருவையாறு,
கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**
சா.ராதிகா
யாசோ ரெக்ஸ்,
நெல்லியடி,
கரவெட்டி.

**4 ஆம் பரிசு**
ப.சகுந்தலராணி
வேலணை மேற்கு,
வேலணை 06.

**5 ஆம் பரிசு**
ச.சாருஜா,
இடைப்பிட்டி,
காரைநகர்.

**பாராட்டுப் பெறுவோர்**

ய.ரேணுகா,
கொற்றாவத்தை,
அ.மி.த.க.பாடசாலை,
வல்வெட்டித்துறை.

வி.நிர்மலாதேவி,
இணுவில் வீதி,
மானிப்பாய்.

உமா சங்கர் நவீன்
பிரதான வீதி,
மந்திகை அம்மன் கோவிலடி
புலோலி

சொற்சிலம்பம் போட்டி 370 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாணயங்கள்

ஆஸ்திரியா – ஷில்லிங்
அல்பேனியா – லெக்
அல்ஜீரியா – தினார்
கனடா – டொலர்
சிலி – பிசோ
லாவோஸ் – கிப்
மாலைதீவு – ருபியா
மொராக்கோ – டிர்காம்
ஈரான் – றியால்
நோர்வே – கிரோன்



# அப்பா

*அப்பா என்பவர் ஆலமரம்*
*அன்பாய் குடும்பம் தாங்கும் மரம்*
*தப்பு செய்தால் கண்டிப்பார்*
*தவறை உணர்ந்தால் மன்னிப்பார்.*

*நம்மைக் காக்க உழைத்திடுவார்*
*நாளும் நன்றாய் வளர்த்திடுவார்*
*செம்மை நமக்குத் தந்திடவே*
*சிறுகச் சிறுக சேமிப்பார்.*

*படிக்கச் சொல்லி அனுப்பிடுவார்*
*படிப்பதைப் பார்த்து மகிழ்ந்திடுவார்*
*இடித்து நம்மைத் திருத்திடுவார்*
*ஏற்றம் கண்டு களித்திடுவார்.*

*சுத்திய வழியில் நடந்திடவே*
*சரியாய் நமக்கு உதவிடுவார்.*
*நித்தமும் சுகத்தை நாம் பெறவே*
*நித்திரை மறந்து பார்த்திடுவார்.*

# பொது அறிவுத் தகவல்கள்

- சுண்டெலியின் ஆயுள் காலம் 3 வருடங்கள்
- கரையான் அரிக்காத மரம் தேக்கு
- பாம்புக்கு ஒரு நுரையீரல் மட்டுமே உண்டு.
- தக்காளியின் தாயகம் அமெரிக்கா.
- நமது உடலின் பெரிய சுரப்பி கல்லீரல்.
- இங்கிலாந்து, ஈரான் நாடுகளின் தேசிய சின்னம், ரோஜாமலர்.
- இந்தியத் தேசியக் கொடியில் உள்ள அசோக சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டதாகும்.
- நில நடுக்கத்தின் கடுமையை துல்லியமாக அறிந்து கொள்ள ரிக்டர் ஸ்கேல் என்ற கருவி பயன்படுகிறது.
- உலகிலேயே மிகப் பழைமையான பல் கலைக் கழகம் மொரர்க்கோ நாட்டில் உள்ளது.
- மண்புழுவுக்கு கண்கள் கிடையாது.





## கண்டுபிடிப்புக்கள்

பொஸ்பரசை கண்டுபிடித்தவர் – பிராண்ட் (1669)
பொட்டாசியத்தை கண்டுபிடித்தவர் – டேவி (1807)
ரேயானை கண்டுபிடித்தவர் – கார்டனேட்
மிதிவண்டியை கண்டுபிடித்தவர் – கிர்க்பாடிரிக் மாக்மிலென் (1839-40)
மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடித்தவர் – டெய்ம்லர் (1885)

# முல்லாவிடம் இருந்த சக்தி



தற்பெருமை பேசுவார்களைக் கண்டால் முல்லாவுக்கு பிடிக்காது. அவர்களை எவ்விதமாவது மட்டம் தட்ட அவர் முயற்சி செய்வார். ஒரு தடவை ஒரு மதச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக வெளிநாட்டில் இருந்து மதத் தலைவர்கள் சிலர் வந்திருந்தார்கள்.

அவர்கள் மக்கள் மத்தியில் சொற்பொழிவாற்றும் போது மதத்தைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ அதிகம் பேசமால் தங்களுக்கு அதிசய சக்திகள் உண்டு என்றும் தாங்கள் விரும்பினால் நீரில் நடக்க முடியும், நெருப்பில் புகுந்து வெளி வர முடியும், மணலைக் கயிறாக திரிக்க முடியும் என்றும் அவர்கள் புராணத்தை தம்பட்டமடித்தே காலத்தை ஒட்டினர். கடைசியாக நன்றி கூறுவதற்காக வந்த முல்லா தனக்கும் சில சக்திகள் உண்டு என்றும் குறிப்பாக நல்ல இருளில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் வழிநடக்க முடியும் என்றும் கூறினார்.

விளக்கே இல்லாமல் அடர்ந்த காட்டில்கூட நல்ல இருளில் உம்மால் நடந்து செல்ல முடியுமா? என்று மதத்தலைவர்கள் கேட்டனர். முடியும் என்று முல்லா கூறினார். அன்று இரவு உணவுக்குப் பிறகு, முல்லாவின் அந்தச் சிறப்பு ஆற்றலைப் பரிசோதனை செய்து பார்ப்பது என்று முடிவாயிற்று. மதத் தலைவர்களும் உள்ளூர் பிரமுகர்கள் சிலரும் காட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆங்காங்கே நின்று முல்லாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.



அன்று உண்மையிலேயே இருள் மிகவும் அதிகமாக இருந்தது. மிகவும் அருகில் இருக்கும் பொருள் கூட கண்களில் படவில்லை. குறுக்கும் நெடுக்குமாக நிற்கும் மரங்களை அடையாளம் கண்டு முல்லா எவ்வாறு இருளில் வருகிறார் என்று பார்க்க எல்லோரும் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரம் கழித்து முல்லா ஒரு கைவிளக்கை எடுத்துக் கொண்டு நடந்து வந்தார்.

இது என்ன? கைவிளக்கு வெளிச்சத்தில் நடந்து வருகிறீர், இருளில் அல்வா நடப்பதாகசவால் விட்டீர் என்று மற்றவர்கள் கேட்டனர்.

நண்பர்களே, எவ்வளவு பயங்கர இருளாக இருந்தாலும் எனக்குக் கண் நன்றாகத் தெரியும், ஆனால் நடந்து வருவது நான்தான் என்று உங்களுக்கெல்லாம் தெரிய வேண்டாமா? எனக்குப் பதிலாக வேறு ஆளை நடக்க விட்டு நான் உங்களை ஏமாற்றி விட்டேன் என்ற அவப்பெயர் நாளை வரக்கூடாதல்லாவா? அதனால் என்னை நீங்கள் அடையாளம் கண்டுபிடிப்பதற்காகத்தான் கைவிளக்குடன் நடந்து வந்தேன் என்றார் முல்லா.

பின்னர் முல்லா அன்பார்ந்த மதத் தலைவர்களே உங்களிடமெல்லாம் ஏதேதோ அபூர்வ சக்தி இருப்பதாகக் கூறினீர்களே? அதற்கு என் சக்தி ஒன்றும் இளைத்ததல்ல என்றார். தங்களை மட்டம் தட்டவே இப்படி ஒரு நாடகத்தை முல்லா ஆடினார் என்பதை மதத் தலைவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.



அ.றெமிங்கன்
கொக்குவில் இந்துக் கல்லூரி



சு.ஸ்ரீகுருபிரசாத்
யாழ். இந்துக் கல்லூரி



உ.கனிஸ்ரன்
புனித ஜோன் பொஸ்கோ ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நல்ல செயலும், நல்ல எண்ணமும் முகத்தில் ஓர் அழகை — ஒளியைத் தருகிறது.

— ரஸ்கின்


# புதன் பொய்கை

உதயன்

07 ஒக்ரோபர் 2015 புதன்கிழமை




# மாய உலகில் சஞ்சரிக்கும் சினிமாக்கலை

ராஜராஜன்

> சினிமாவை சினிமாவாகவே நாம் பார்க்க வேண்டும். அங்கே தோன்றுகின்ற காட்சிகள் எதுவுமே நிஜமானதல்ல. எல்லாமே வெறும் நடிப்புத்தான். கதா நாயகன் தனி ஒருவனாக நின்று இருபது, முப்பது பேரை அடித்துச் சாய்ப்பது சினிமாவில்தான் முடியும். நிஜவாழ்க்கையில் நடக்கவே நடக்காது.

**பொ**ழுதுபோக்குச் சாதனங்கள் புதிது புதிதாகத் தோற்றம் பெற்றாலும் சினிமாப் படங்களின் மீது மக்கள் மத்தியில் உள்ள மோகம் குறைந்ததாகத் தெரியவில்லை. தொலைக்காட்சிகள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தபோது சினிமாவின் எதிர்காலம் இருண்டு விடுமெனக் கூறியவர்கள் இல்லாமல் இல்லை. ஆரம்பத்தில் தொலைக்காட்சிகளில் சினிமாப்படங்களைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டதால் தியேட்டர்களுக்குச் சென்று சினிமாப் படங்களைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படத்தான் செய்தது. ஆனால் நாளடைவில் இந்த நிலையில் மாற்றம் ஏற்படத்தான் செய்தது. சினிமாப் படங்கள் 1895 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் முதன் முதலாகத் தயாரிக்கப்பட்டன. ஆனால் பேசாத படங்களையே அப்போது தயாரிக்க முடிந்தது. பின்னர் சினிமாத்துறை படிப்படியாக வளர்ச்சி கண்டு 1927 ஆம் ஆண்டளவில் பேசும் படங்கள் வெளிவரத் தொடங்கின. தமிழில் 1931ஆம் ஆண்டு பேசும் படங்களைத் தயாரிக்க முடிந்தது.

ஆரம்ப காலத்தில் நாடகபாணியில் அமைந்த சினிமாப்படங்களே தயாரிக்கப்பட்டன. பின்னணி இசையைப் பதிவு செய்வதற்கான வசதிகள் இல்லாததால் நடிகர்கள் நடித்துக்கொண்டே பாடவேண்டிய நிர்ப்பந்தமும் அப்போது காணப்பட்டது. அத்துடன் இசைஞானமும நல்ல குரல் வளமும் உள்ளவர்கள் மட்டுமே சினிமாப்படங்களில் நடிக்க முடிந்தது. காலப்போக்கில் இந்த நிலை மாறியது. இசைஞானம் இல்லாதபோதிலும் நல்ல நடிப்புத்திறன் கொண்டவர்களால் சினிமா நடிகர்கள் ஆக முடிந்தது.

உலகளாவிய ரீதியில் பார்க்கும்போது தற்போது ஆண்டுதோறும் பெருமளவு படங்களைத் தயாரித்து வெளியிடும் நாடுகளில் இந்தியா முதலிடத்தை வகிக்கின்றது. அந்த நாட்டில் பல்வேறு மொழிகளில் சினிமாப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதில் ஹிந்தி, தமிழ் மொழிப் படங்கள் முதன்மை ஸ்தானத்தை வகிக்கின்றன.

தமிழ் நாட்டைப் பொறுத்தளவில் ஆரம்ப நாள்களில் எம்.கே.தியாகராஜ பாகவதர், தண்டபாணி தேசிகர், எஸ்.ஜி.கிட்டப்பா ஆகியோரே பிரதான கதாநாயகர்களாக விளங்கினார்கள். இவர்களில் தியாகராஜ பாகவதர் அன்றைய சுப்பர் ஸ்ரார் என்றே அழைக்கப்பட்டார். பின்னர் எம்.ஜி.இராமச்சந்திரன், சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன் ஆகிய நால்வரும் பிரதான இடத்தை வகித்தனர். தமிழில் தயாரிக்கப்பட்ட அனைத்துப் படங்களிலும் இவர்களையே காணமுடிந்தது. கதாநாயகிகள் வரிசையில் பத்மினி, சாவித்திரி, பானுமதி ஆகியோரைக் குறிப்பிட முடியும். இவர்களின் காலத்துக்குப் பின்னர் புற்றீசல்கள் போன்று ஏராளமான நடிக நடிகைகள் தோன்ற ஆரம்பித்தனர்.

சினிமாவை ஒரு மாய உலகம் என்று அழைப்பார்கள். மற்ற எல்லாத் துறைகளையும்விட அதிக பணத்தைச் சம்பாதிக்கின்ற வாய்ப்புக்கள் இங்கு அதிகம் உள்ளதால் பலரும் இந்தத்துறையை நாடத் தொடங்கினார்கள். ஆனால் சிலருக்கு மட்டுமே வாய்ப்புக்கள் கிடைத்தன. அன்றிலிருந்து இன்றுவரை வெறி பிடித்த ரசிகர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். தமது அபிமான நடிகரின் படம் வெளிவருகின்றபோது அந்த நடிகரின் உருவப் படங்களுக்கு குடம், குடமாகப் பாலாபிஷேகம் செய்வோரும் உண்டு. தமது அபிமான நடிகரின் படம் வெளிவருகின்ற திரையரங்குகளின் வாயிலில் வாழைமரத் தோரணங்கள் கட்டுவதும், வெடிகள் கொளுத்தி ஆரவாரிப்பதும் கண்கொள்ளாக் காட்சிகளாக அமைந்து விடுகின்றன.

நடிகை பானுமதி திரையுலகில் செல்வாக்குடன் வலம் வந்த அந்தக் காலத்தில் அவருக்கென ஏராளமான ரசிகர்கள் இருந்தனர். பானுமதியின் துடிப்பான நடிப்பும், குரல்வளமும் பலரை அவர்பால் ஈர்த்திருந்தது. அன்று ஒருநாள் முதியவர் ஒருவர் ஒரு பெரிய பொதி ஒன்றைத் தபாலகம் ஒன்றுக்கு எடுத்து வருகின்றார். அங்கே பணியில் இருந்த அலுவலர் பொதியைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கின்றார். அதில் திருமதி பானுமதி, சினிமா நடிகை, இந்தியா என்று முகவரி இடப்பட்டிருந்தது. அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. பொதியைக்கொண்டுவந்தவரிடமே கேட்கின்றார். ஐயா நான் பானுமதியின் பரம ரசிகன் எனது தோட்டத்தில் ராசவள்ளிக்கிழங்கை அறுவடை செய்துள்ளேன். பானுமதிக்கும் ராசவள்ளிக் கிழங்கு பிடிக்குமெனச் சொன்னார்கள். அதுதான் அதை அனுப்புவதற்காக எடுத்து வந்துள்ளேன் என அந்த முதியவர் கூறுகின்றார். இதைத் தான் சினிமாப் பைத்தியம் எனக் குறிப்பிடுவார்கள். பொதியைப் பெற்றுக்கொண்ட அந்தத் தபாலக அலுவலர் ஐயா நாங்கள் இந்தப் பொதியைப் பானுமதிக்கு அனுப்பி வைக்கின்றோம். நீங்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும் எனக் கூறிப் பணத்தையும் பெற்றுக் கொள்கின்றார். அந்த முதியவர் சென்ற பின்னர் பொதியில் இருந்த ராசவள்ளிக் கிழங்குகள் தபாலக அலுவலர்களுக்கிடையில் பகிரப்பட்டமை வேறு விடயம். ஆனால் பொதியை அனுப்பவந்தவர் பானுமதியின் பதில் கடிதத்துக்காகப் பல மாதங்கள் காத்திருந்ததாக பேசப்பட்டது. இந்த அளவுக்கு சினிமா நடிக, நடிகைகள் மீதான மோகம் காணப்படுகின்றது என்பதுதான் இங்கு சொல்லவந்த செய்தி.

நடிகர் விஜய்யின் புதிய படமொன்று அண்மையில் வெளியானபோது அவரது ரசிகர்கள் அதைக் கொண்டாடிய விதம் தொடர்பாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்ததை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். விஜய் இதைக் கேள்விப்பட்டிருந்தால் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பார். ஆனால் எமக்குத் தான் மனதில் வேதனை எழுகின்றது. எமது இளைஞர்களும் இப்படியா? என்ற விசனமும் கூடவே தலை தூக்குகின்றது.

சினிமாவை சினிமாவாகவே நாம் பார்க்க வேண்டும். சினிமாவில் நாம் காணும் காட்சிகள் எதுவுமே நிஜமானவையல்ல. எல்லாமே வெறும் நடிப்புத்தான். கதா நாயகன் தனிஒருவனாக நின்று இருபது, முப்பது பேரை அடித்துச் சாய்ப்பது சினிமாவில்தான் முடியும். நிஜவாழ்க்கையில் நடக்கவே நடக்காது.

இதைப்போலவே அறுபது வயதைக் கடந்த நடிகர்கள் இளம்வயதுக் காதலனாகத் தோன்றி இளவயது நடிகையுடன் காதல் காட்சியில் தோன்றி ரசிகர்களைச் சிலிர்க்க வைப்பதும் சினிமாவில்தான் முடியும். மேற்படி நடிகரை நேரில் பார்க்கும்போது பேரன் வேடத்துக்குக் கூடப்பொருத்தமற்றவராகக் காணப்படுவார்.

சினிமாவை ஒரு பொழுதுபோக்குச் சாதனமாகவே பார்ப்போம். அதில்வரும் காட்சிகளை ரசிப்பதுடன் நிறுத்திக் கொள்வோம். இதைவிடுத்து இதற்கு மேலும் அதற்கு ஓர் முக்கியத்துவத்தை நாம் வழங்குவோமாயின் எம்மை விட ஏமாந்தவர்கள் இருக்கவே முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லுப்பாட்டு தோற்றமும் வளர்ச்சியும்

கலைமாமணி கவிஞர்
சுப்பு ஆறுமுகம்

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப்பெற்றியனே! என்று மாணிக்கவாசகப் பெருந்தகையார், இறைவனுக்குச் சூட்டிய சொல்மாலையை நாம் வில்லிசைக் கலைக்கும் சூட்ட வேண்டும். முத்தமிழ்க் கலைகளிலே மூத்த கலை வில்லுப்பாட்டு; அது மட்டுமல்ல, முத்தமிழும் இணையும் ஒரு கூட்டுக்கலை, பாட்டுக்கலை, நாட்டுக்கலை!

மிகவும் மூத்தது வில்லுப்பாட்டு என்னும் ஒரு தகுதியால் மட்டும், இந்தக் கலை தனக்குரிய சிறப்பை எவரிடமும் இரந்து கேட்கவில்லை! முந்தியவை யாவுமே வந்தனத்துக்குரியவையல்ல. முந்தியிருக்கும் சகதியிலும் பிந்தி வந்த தாமரையே பெருமைக்குரியது. முந்தினாலும் ஒரு சிறப்போடு முந்தியிருக்க வேண்டும். அந்தச் சிறப்புத்தான் தந்தனத்தோம் வில்லிசையின் தலைமுறைச் சிறப்பாகும். மயிலின் மூத்த குஞ்சு தான் கொண்டைப்புகழ் கொண்டது என்பர். அவ்வண்ணம் புகழ் கொண் டது தான் பண்டைத்தமிழ் வில்லுப்பாட்டு!

மண்ணுக்குள் தங்கிய மரத்துண்டுகள், எவர் கவனிப்புமின்றியே பல்லாயிரம் ஆண்டுகள் புதையுண்டு கிடந்து, ஒரு கதையென்று வளர்ந்து, தன்னை நம்பியே தான் வாழ்ந்து தன்மான ஒளியேறியேறி, பின்னொரு நாளில் வைரமாக வளர்ந்துவிடுகிறதே; அந்த வைர வரலாறுதான் வில்லிசையின் வாழும் வரலாறு!

பாணர்கள் மீட்டும் யாழுக்கு அன்னையே வில்லிசைக் கருவிதான் என்பது இசைப்புலவர்களின் பொருந்தும் ஆராய்ச்சியாகும்! வில்லிலே மாட்டுத்தோலை உரித்து இரு துருவங்களையும் வளைத்து இணைத்துக் கட்டி கைக்கருவியாகிய வீசுகோலால் தட்டும்பொழுது பிறப்பதே தனத் – தனத் ஒலி! அதைத் தழுவிய வண்ணம் வில்லின் ஓரத்தில் தாயைத் தழுவிய குழந்தைகள் போலிருந்து ஒலிப்பதே மணிகளின் நாதம்! இதில் முதலில் பிறந்த ஒலியைத் தொடர்ந்த சிந்தனைதான். யாழ்! இன்றும் வில்லைக் குறிப்பிடும்போது, விவரம் அறிந்தோர் ஆதியாழ் என்றே சிறப்பாகச் சொல்வர். தோலை உரித்துக் கயிறு போலாக்கித் தட்டும் போது இந்த நாதமெனில், இதனினும் மெல்லிய நரம்பினைக் கட்டி விரலினால் மெதுவாக மீட்டிக் கேட்டுப் பார்ப்போமா? இதுவே வில்லைத் தொடர்ந்த சிந்தனை!

வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம் என்றாரே, அதுபோல் வில்லின் வழி யாழ் பிறக்க, அதில் வீணை மகள் என்றொரு நாதக் குழந்தை பிறந்தது! ஆக, வில்லிசைக் கருவி என்னும் பாட்டியின் செல்லப்பேத்திதான் சிங்கார வீணை!

இவ்வண்ணமே வில்லுப்பாட்டுக் கலையின் தோற்றமும் விரும்பி அறிந்துகொள்ள வேண்டிய கலைகளில் ஒன்றாகும்!

எந்த இசைக்கருவிக்கும் இல்லாத சந்தச் சுகம் மட்டுமல்ல, இறைமையும் வில்லுக்கு உண்டு! கதைகள் பல கூறுகையையே பிறவிக்கடமையாகக் கொண்டிருக்கும் வில் தோன்றிய கதை வணக்கத்துக்குரியதாகும்!

தென்பாண்டி நாட்டிலே ஒரு குறுநில மன்னன் வீரர்களையும் தன் பரிவாரங்களையும் கூட்டிக் கொண்டு காட்டுக்கு வேட்டையாட வந்தான். அன்று நல்ல வேட்டை! சிங்கம், புலி, கரடி முதல் மான், நரி, மத்தகம் வரை அத்தனையையும் வேட்டையாடிக் களித்தான்! அந்த வனத்தின் மர(ற) நிழலில், மன்னனும் கூட வந்தோரும் குளுமையைச் சுவைத்துக் கொண்டிருந்தனர்! அந்தி வேளை வந்தது. அனைவரும் கூடாரங்களில் வந்து இளைப்பாறினர். எங்கோ ஒரு மான்! ஏதோ ஒரு புலி! ஒரு மத்தகம்! குற்றுயிராக கிடந்தழும் அவல அழுகைக் குரல்கள் மன்னனின் செவியைச், சிந்தனையை முற்றுகையிட்டன.....!

மேதினி ஆள்வோனின் மெழுகு உள்ளம் உருகியது. இரு விழிகளும் அதனை அள்ளி அள்ளி வெளியே கொட்டிக்கொண்டிருந்தன!

வாழும் உயிரினை வாங்கிவிடல் – இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்!
வீழும் உயிரை எழுப்புதலோ – ஒரு
வேந்தன் நினைக்கினும் ஆகாதய்யா!

என்னும் இருபதாம் நூற்றாண்டுக் கவிமணியின் இதய ஒலி, அந்த முடிவேந்தனின் இதயத்தில் முந்திப்போய் ஒலித்ததோ!

சிறுபிள்ளையைப்போல் தேம்பித் தேம்பி அழுதான்!

செத்துக்கொண்டிருந்த கால், அரை, முக்காற் புள்ளிகள் இதற்குள் முற்றுப்புள்ளிகள் ஆகிவிட்டன.

இறைவா! நான் மன்னனாம்! மனிதனாம்! மதியிலும் விதியிலும் உயர்ந்தவனாம்! தென்பாண்டி மாநில ஆட்சி என்னதாம்! என்னை மதிக்கிறார்கள்! துதிக்கிறார்கள்! வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறார்கள். ஆனால், வேட்டை என்ற பெயரால் வெறியாட்டம் நடத்திக்கொண்டிருக்கிறேனே; சாய்ந்துவிட்ட ஒரு மான் குட்டியின் உயிரைக்கூடத் திருப்பிக் கொடுக்க முடியாத என் கரங்களில்தான் எத்தனை எத்தனை சட்டங்களின் பின்னல் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது என் மனச்சான்று என்னை வேட்டையாடுகிறதே! ஆடட்டும்! நன்கு ஆடட்டும்! எனது கொல்லும் அறிவைக் கொல்லட்டும்! கொல்லாமை என்னுள் கொலுவிருந்து ஆடட்டும்! வாழட்டும் உலகை உயிர்கள்! ஆண்டவன் எழுதிய உயிர்ச் சித்திரங்களை அழிக்க நான் யார்? அவன் படைத்த உயிர்ப் பொம்மைகளை உடைக்க நான் யார்? ஊரும், நாடும், காடும், மலையும், என் மனைவியின் கொலுப்படிகள் அல்லவே! அமைச்சரே!

மன்னா! தன்னை உணரும் தங்களுக்குத் தகுந்த பரிகாரம் கூறுகிறேன் – கொலைக் கருவி, கலைக்கருவி ஆகட்டும்! இதுவரை தோளில் கிடந்த வில்லை மடியின் பக்கம் படுக்கப்போடுவதுபோல் போட்டு, கீழ் நுனியில் ஒரு கயிறு கட்டி, அசையாவண்ணம் வில்லின் அடிப்பகுதியை, அதோ காட்டுத்தேன் கொண்டுபோகக் கொண்டுவந்திருக்கிறோமே மண்குடம், வில்லோடு இணைத்துக்கட்டி, அம்பறாத் தூணியிலிருந்து அம்புகளை எடுத்துத் தாளத்தோடு தட்டித் தட்டி தமிழில் பாடுங்கள்! தலைமுறைப் பாவங்கள் எல்லாம் நீங்கும்! தமிழ் மறை திருக்குறளைப் பாடுங்கள். கம்பராமாயணத்தைப் பாடுங்கள் முத்தமிழ்க் காப்பியத்தைச் சிலம்பொலி செய்யுங்கள்! புறம், அகம் இதற்குப் புறம்பானதல்ல! ஒல்காப்புகழ் தொல்காப்பியம் முதல் நல்காப்பியங்களை எல்லாம் வில் காப்பியமாக – சொல் காப்பியமாக – வில்லிசைத்துப் பாடுங்கள்!

அவ்வளவுதான்!

அரசன் மடியிலே வில்லிசைக்கலை பிறந்துவிட்டது! அருகிருந்த அனைவரும் கூட்டுக் குரல் கொடுத்தனர்! ஆமோதித்தனர்! ச.....ரி.. ...சம.... மா......க.....ப......த.....மா..... க......நீ...... என்ற சப்த ஸ்வரம் வேண்டுமானால் ஏற்றத்தாழ்வோடு இசையாய் ஒலிக்கட்டும்! ஆனால் நாம் எமக்குள் பதமாக நீ சரிசமமாக...... அமர்ந்து பாடுவோம்! என்று கதை பாட ஆரம்பித்தான் பூவேந்தன்! காளிதாசன் நாவில் எழுதிய சக்தித்தாய் இந்தக் காவலன் நாவிலும் எழுதினாளோ! அவன் கவியரசன்! இவன் புவியரசன் – என்ற கட்சிபேதம், கலைமகளிடம் ஏது......?

இவ்வாறு ஒரு வித்தையையே வேட்டையாடி வந்த வேந்தன், இயலிசைப் புலவர்களை அழைத்தான்! இந்த வில்லிசைக் கலைக்கு ஒரு புதிய உருவம் வேண்டினான்! இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கேட்டான்!

வில், உடுக்கை, குடம், தாளம், கட்டை ஆகிய ஐந்து கருவிகள் தொடக்கத்தில் பயன்பட்டன. வளர வளர பம்பை, உருமி, தக்கை, துந்துமி ஆகிய கருவிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. தன்தன் என்று குடம் ஒலிக்க தனத் தனத் என்று வீசுகோல் பேச ஓம் ஓம் என்று உடுக்கை ஓங்கார நாதம் முழங்க தந்தனத்தோம் – என்று சொல்லியே வில்லினில் பாட வந்தருள் புரிந்து கொண்டிருந்தாள் கலைமகள்!

ராஜகம்பீர நாடாளும் நாயகனிடம் தோன்றிய நாட்டுப்புறக்கலை, ராஜகம்பீரத் தோடு நாடாண்டு, வீடாண்டு, நல்ல பலகோயில் சன்னிதிகளை ஆண்டு, ஆளும் மன்னனின் கொலு மண்டபங்களை ஆண்டு, பல்லாண்டு பல்லாண்டு வளர்ந்து வந்தது.

குமிழின் புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி

என்ற கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படை (வரிகள் 180 – 182) வில்லின் மூத்த புகழைக் காத்து வைத்திருக்கிறது. வைணவம் ஓங்கிய காலத்தில் வில்லை நேசித்து இராமபிரானை நினைத்து இக்கலைக்கு இடம் கொடுத்தனர். சைவம் கொடிகட்டிப் பறந்த மண்டலங்களில் சிவபெருமானின் உடுக்கை ஒலியை இதில் கேட்டுச் சிவனே வந்தது போல் கருதிக்கொண்டாடினர். இரண்டும் ஒன்றே என்னும் பெருமக்கள் இந்தக் கலை இரண்டையும் இணைக்கும் பாலம் என்று போற்றிப் புகழ்ந்தனர்.

இன்னொரு சிறப்பும் இந்தக் கலைக்கு உண்டு. தேசிய ஒருமைப்பாட்டையே வில்லுப்பாட் டில் காணலாம். வில் என்றால் எமக்கு உடன் நினைவு வருவது இராமேசுவரம் உடுக்கை யயனில் காசி விசுவநாதர் வடக்கையும் தெற்கையும் இவ்வாறு வாழ்த்தி இணைத்து வரும் கலையைச் சுவைப்பது மட்டுமா? வணங்கவும் வேண்டுமே. தெய்வீகத்தின் மூலம் தேசியத்தைக் காணவும் இந்தக் கலை வழிவகுக்கிறது.

'மோனத்து இருந்த முன்னான் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே'

என்ற சாத்தனாரின் கூத்த நூல் உடுக்கை யின் மிடுக்குப்பற்றி அடுக்கியுரைக்கின்றதுவே!

உடுக்கையில் பிறந்தது ஓம் எனும் ஒலியே
ஓம் எனும் ஒலியே நாட்டியத்து ஒலியாம்

(E பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# கவிதை நூல் வெளியீடு

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டம், விசுவமடு மகாவித்தியாலய உள்ளக கலையரங்கத்தில் கிளி/முருகானந்தாக் கல்லூரியில் கலைப்பிரிவில் கல்விகற்றுக் கொண்டிருக்கும் பங்கயன் தனுஜாவின் ஒரு பூவின் மடல் எனும் கவிதை நூல் வெளியீடு இடம்பெற்றது.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராசா மங்கலவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து இந்த நிகழ்வுக்கு வருகைதந்திருந்த பிரமுகர்கள் மற்றும் நூலாசிரியர் மங்கல விளக்கேற்றினர்.

அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை விசுவமடு மகா வித்தியாலய அபிவிருத்தி சங்க உறுப்பினர் திருமதி கேதினி நிகழ்த்தினார். தலைமையுரையை சிதம்பரக்கல்லூரி ஆசிரியர் க.முருகமூர்த்தி வழங்கியதைத்தொடர்ந்து முல்லைவலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி முனீஸ்வரன் வாழ்த்துரையை வழங்கினார். அதனைத் தொடர்ந்து வாழ்த்துக் கவிதையை கவிஞர் முல்லைத்தீபன் வழங்கினார். அதனைத்தொடர்ந்து பிரதம விருந்தி னராக வருகை தந்திருந்த அமைச்சர் த.குருகுலராசா சிறப்புரையை வழங்கி விழாவை மேலும் சிறப்பித்து வைக்க, கவிஞர் யோ.புரட்சி மற்றும் ஆனந்தரூபன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்க, நூல் வெளியீட்டுரையை விசுவமடு மகாவித்தியாலய ஆசிரியை திருமதி கைலாசநாதன் நிகழ்த்தினார், பின்னர் அமைச்சர் த. குருகுலராசா 'ஒரு பூவின் மடல்' கவிதை நூலை வெளியிட்டு வைக்க முதல்பிரதியை விசுவமடு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆனந்தன் பெற்றுக்கொண்டார், சிறப்புப் பிரதியை முல்லைத்தீவு வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி முனீஸ்வரன் பெற்றுக்கொண்டார். மதிப்பீட்டு உரையை முல்லை வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.பீதாம்பரம் வழங்கினார். வாழ்த்துக் கவிதையை நெடுந்தீவு அரவிந்தன் நிகழ்த்த, இந்த நிகழ் வின் இறுதி நிகழ்வாக ஏற்புரையை இளம்கவிஞர் பங்கஜன் தனுஜா வழங்க கவிதை நூல் வெளியீட்டு விழா சிறப்புற நிறைவு பெற்றது. பெருந்திரளான பொதுமக்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பித்திருந்தனர்.

மேலும் இந்த நிகழ்வில் தொடர்வரிசையில் நின்று அனைவரும் 'ஒரு பூவின் மடல்' எனும் கவிதை நூலை பெற்றுக்கொண்டமை இலக்கிய ஆர்வம் மக்களிடையே இன்னமும் குறையவில்லை என்பதைப் பறைசாற்றி நின்றது.

# நற்பண்புகளுக்கு உறைவிடமான ஆசான் கே.சி.சிவசுப்பிரமணியம்

ந.சந்திரசேகரன்
சிட்னி பல்கலைக்கழகம்

என்னுடைய ஆசான் கே.சி.சிவசுப்பிரமணியம் நற்பண்புகளுக்கு உறைவிடமாக உள்ளவர். அவர் கற்பிக்கின்றபொழுது ஆங்கில இலக்கியமாக இருந்தால் என்ன, பிரெஞ்சு இலக்கியமாக இருந்தால் என்ன, இலத்தீன் இலக்கியமாக இருந்தால் என்ன அல்லது ஆங்கில இலக்கணமாக இருந்தால் என்ன பிரெஞ் இலக்கணமாக இருந்தால் என்ன இலத்தீன் இலக்கணமாக இருந்தால் என்ன ஏனைய ஆசிரியர்களைப் போல் நூல்களின் துணை கொண்டு விளக்கம் கொடுக்காமல் தன் னினைவில் இருந்தே அவற்றை மிகச் சிறப்பாக விளங்கப்படுத்துவதோடு மாணவர்களையும் விளங்க வைக்கின்ற ஆற்றல் உள்ளவராகத் திகழ்கின்றார். அவருடைய கற்பித்தல் மாணவர்களுடைய ஐயங்களை அறவே களைந்து அவர்கள் கற்கும்பாடங்களில்தெளிவான அறிவை வழங் குகின்றது என்பது எல்லோரும் அறிந்ததொன்றாகும்.




பழைய ஆங்கிலம், மத்திய கால ஆங்கிலம், எலிபேத்தின் கால ஆங்கிலம் ஆகியவற்றோடு தற்கால ஆங்கில இலக்கண இலக்கியங்களையும் தன்னுடைய மூளையிலே நிறைத்து வைத்திருப்பதன் விளைவாக எந்த நூலையும் தற்துணையாகக் கொள்ளாமல் இயல்பாகவே விளங்கப்படுத்துகின்ற ஆற்றலை அவர் கொண்டிருக்கிறார். அவர் தன்னுடைய 45 ஆண்டுகள் கால ஆசிரியப் பணியில் ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன் ஆகியவற்றில் பல அறிஞர்களை உருவாக்கியிருக்கின்றார். அவரை, என்னோடு கற்றவர்கள் ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாக வர்ணிப்பதுண்டு. அவரிடம் கல்வி கற்றுத் தேர்ந்த இன்னொரு மாணவர் அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பௌதிகவியல் பேராசிரியராக சிறப்புடன் பணியாற்றி வருகின்றார். அவர் யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் சேர்ந்த பேராசிரியர் செ.தங்கராசா ஆவார். அவருடைய மனைவி வசந்தினி ஒரு மருத்துவ நிபுணர். அவரும் எங்கள் ஆசானின் சிறப்பான மாணவியாவார். அவர் இடம் பெயர்ந்து சென்னைக்குச் சென்றபோது அங்கே 250 வருட பழைமை வாய்ந்த புகழ்பூத்த லயோலாக் கல்லூரியில் ஆங்கில இலக்கியம் இலக்கணம், பிரெஞ்சு ஆகிய மொழிகளை 8 ஆண்டுகள் கற்பித்து அங்குள்ள பேராசிரியர்கள், மாணவர்கள் அனைத்துப் பேரினதும் அன்பையும் மதிப்பையும் பெற்றவராகத் திகழ்கின்றார்.

அவர் அங்கே கற்பித்த காலத்தில் அவரிடம் தனிப்பட்ட முறையில் இந்திய உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளில் ஒருவரான கே.ஜி.பாலகிருஸ்ணனின் புதல்வி காயத்திரியின் உறவினர்களான மஞ்சுளா, சாவித்திரி ஆகியோர் அவர்களுடைய முதுகலைப் பட்டத்துக்கும் எங்கள் ஆசானிடம் கல்வி கற்று சிறப்புச் சித்தி பெற்றார்கள்.

இங்கு காலையிலிருந்து இரவு நேரம்வரை தொடர்ச்சியாக மாணவ மாணவிகளுக்கு ஆங்கில இலக்கண இலக்கியம் பிரெஞ்சு ஆகிய மொழிகளைச் சிறப்புடன் கற்பித்து வருகின்றார். 1980 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அவர் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இருந்த காலத்தில் TOFEL, IELTS ஆகிய மேல்நாட்டு பரீட்சைகளுக்கு அவரிடம் கற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பரீட்சைகளில் மிகச் சிறப்பான சித்திபெற உதவியுள்ளார். யோகநாதன், விஜயலட்சுமி, விரிவுரையாளர் கெங்காதரன், சுத்தானந்தன் ஆகிய விரிவுரையாளர்கள் அவரிடம் கற்று IELTS பரீட்சையில் ஆகக்கூடிய மதிப்பெண்களைப் பெற்றவர்கள் ஆவர்.

அவர் தமது இளமைக்காலத்தில் கற்பித்தது போலவே இன்றும் ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைச் சிறப்பாகக் கற்பித்து வருகின்றார். யாழ். குடாநாட்டில் உள்ள மாணவ மாணவிகள் அனுபவமும் திறமையுமுள்ள என்னுடைய ஆசானை நாடுவதை விடுத்து விளம்பரங்களைப் பார்த்துத் தங்களுடைய கற்கும் நாள்களை வீணாக்குகிறார்கள் என்பதுதான் என்னுடைய கவலையாகும். இன்று நான் ஆஸ்திரேலியாவில் சிட்னி பல்கலைக்கழகத்தில் சிறப்புற என்னுடைய பணி யைச் செய்வதற்கு என்னுடைய மொழி அறிவே எனக்கு பெரும் துணை செய்கின்றது என்பதை நன்றியோடு நினைவுகூர்ந்து என்னுடைய அனுபவத்தையும் கருத்துக்களையும் என்னுடைய சமூகத்தவர்களோடு பகிர்ந்து கொள்வதில் பேருவகை அடைகின்றேன். 'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்' என்ற வள்ளுவன் ஆற்றிய பொய்யாமொழிக்கு ஏற்ப அவருடைய புதல்வி பிரியதர்ஷினி இன்று அமெரிக்காவிலுள்ள புறூக்கிளின் மருத்துவமனையில் இருதய சிகிச்சை நிபுணராகப் பணியாற்றுகின்றார். அவருடைய மொழிப்புலமை காரணமாக அவர் இருதய சிகிச்சை பயிலும் மாணவர்களுக்கு விரிவுரைகளையும் தன்பணியின் மத்தியில் நிகழ்த்துகிறார். அவரிடத்தில் கல்வி பயின்றவர்கள் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாக [illegible] பணி என்று [illegible] பிரார்த்தனையும் என்றும் அவரோடு இருக்கும்.

# மறைந்தும் மறையாமல் ஒளிவீசும் நல்லாசான் பேராசிரியர் குணரத்தினம்



பேராசிரியர் குணரத்தினம் மறைந்த போது நான் கலிபோர்னியாவில் இருந்தேன். தினசரி உதயன் பத்திரிகையைப் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். செப்ரெம்பர் மாதம் ஒன்பதாம் திகதி வெளிவந்த அவரது மறைவுச் செய்தி என்னை மன வேதனைக்கு உள்ளாக்கியது.

பேராசிரியர் குணரத்தினத்தோடு நான் மிக நீண்ட காலம் யாழ்.பல்கலைக்கழகப் பேரவையில் பணியாற்றும்பேறு பெற்றேன். ஆனால் அதற்குமுன்னதாகவே, அவருடைய மதிநுட்பத்தையும் கற்பிக்கும் திறனையும் எனது மூத்த சகோதரன் மூலம் அறிந்து கொண்டேன். அவர் உதவி விரிவுரையாளராக இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அவருடைய கொள்கைப் பிடிப்பையும் அல்லற்படும் தமிழ்ச் சமுதாயத்தின் மீது அவர் காட்டிய பரிவையும் கண்டுகொண்டேன். துணைவேந்தர் துரைராசா நோய் காரணமாகப் பதவியிலிருந்து விலக விழைந்தார். தமக்குப் பின்னர் பேராசிரியர் குணரத்தினமே யாழ்.பல்கலைக்கழகத்தின் தலைமைப்பீடத்தை அலங்கரிக்க வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது. யாழ்.பல்கலைக் கழகத்தின் கல்வித்தரம் எந்த வகையிலும் குறைந்து போய் விடக்கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள்.




பேராசிரியர் குணரத்தினம் துணைவேந்தராக பணியாற்றியவேளை, இராணுவத்தினரின் அட்டகாசம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. நாகர்கோவிலில் விமானம் குண்டு வீசியதால் பல பள்ளிச்சிறார்கள் உயிரிழந்தனர். துணைவேந்தர் குணரத்தினம் அரசைப் பலமாகக் கண்டித்தார். இதுவே அவர் துணைவேந்தர் பதவியை இழப்பதற்கும் காரணமாயிற்று.

எனினும், துணைவேந்தர் தான் கொண்ட கொள்கையில் உறுதியாகவே இருந்தார்.

தூரப்பார்வைக்கு அவர் கண்டிப்பு நிறைந்தவராகவும், கடின உள்ளத்தவராகவும் தென்படுவார். ஆனால் நெருங்கிப் பழகியபின் அவருடைய இளகிய உள்ளத்தையும் நட்பு மனப்பான்மையையும் காண இயலும்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் அவர். அதிபர் ஐ.பி. துரைரத்தினத்தின் அபிமான மாணவர். பல்கலைக்கழகத்தில் முதலாவது பரீட்சை முடிந்ததும் பௌதிகத்தில் சிறப்புப் பட்டம் பெறவிழைந்தார். அப்பொழுது ஐ.பி.துரைரத்தினம், பௌதிகப் பேராசிரியர் ஏ.டபிள்யூ. மயில்வாகனத்தோடு உத்தரிக்க ஏலாது. நீ கணிதத்தைத் தெரிந்துகொள் என்றும், பேராசிரியர் எலியேசர் நல்லவழிகாட்டி என்றும் கூறினார்.

நான் ஐ.பி.ரி அவர்களின் ஆலோசனைப்படி நடவாமல் பௌதிகத்தைக் கற்பதற்குத் தீர்மானித்தேன். பேராசிரியர் ஏ.டபிள்யூ மயில்வாகனம் இறக்கும் வரை எனது இனிய நண்பராகவே இருந்தார். அவருடைய அன்பை நான் ஒருபொழுதும் மறக்க முடியாது என்று கூறினார் குணரத்தினம்.

பிரசித்தி பெற்ற இம்பீரியல் கொலீச் என்ற பல்கலைக்கழகத்தில் கற்று வெளியேறிய துணைவேந்தர் குணரத்தினம் எப்பொழுதும் எவருடனும் இனிமையாகவே பேசுவார்.

பௌதிக அறிவைத் தமிழ் மாணவர்கள் உள்ளங்களில் நன்கு பரப்பிய மகான். மறைந்தாரன்றி முடிந்தாரில்லை. அவர் நண்பர்கள், மாணவர்கள், பிள்ளைகளின் உள்ளங்களில் தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டேயிருப்பார்.

சமீப காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றிய பலபல மேதைகள் மறைந்தனர். செப்ரெம்பர் மாதம் இன்னொரு மாணிக்கம் கண்ணுக்கெட்டா கருத்தொளியில் சென்று மறைந்துவிட்டது.

வணக்கத்துக்குரிய
கலாநிதி எஸ்.ஜெபநேசன் (ஜே.பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்சுவைத் தகவல்களோடு காமராஜ தரிசனம்

செ.மகேஷ்

கல்வி என்பது வாழ்க்கையின் ஒரு வளமான வழிகாட்டியாகும். கற்றலும், கற்றறிந்ததன்படி ஒழுகுதலும் ஒவ்வொருவரையும் வாழ்க்கையின் உன்னத நிலைக்கு உயர்த்திப் பெயரும் புகழும் நிலைக்கச் செய்யும் வலிமை மிக்கனவாகும்.

முன்பள்ளிக் கல்வி தொடங்கி ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி என நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்விக் கூடங்கள் யாழ்ப்பாணத்தில் ஆற்றி வருகின்ற கல்விப் பணிகள் பாராட்டுக்குரியனவாகும். புதிய உயர் கல்லூரி காமராஜர் பல்கலைக்கழகம், 2003ஆம் வருடத்திலிருந்து ஆற்றிவரும் பணிச் சிறப்பை வெளிப்படுத்தி அதன் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள 'காமராஜ தரிசனம்' எனும் நூல் சிறந்த எழுத்தாளர்களால் எழுதப்பட்ட பல்சுவை மிகுந்த ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.




மனித வாழ்க்கை, தேடல் நிறைந்ததாகக் காணப்படுகிறது. தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும், எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்காகவும் தேடல் தொடர்ந்து கொண்டிருக்கிறது என 'நிறம் மாறும் உணர்வுகளும்' நிலைமாறும் உறவுகளும் என்ற தலைப்பிட்ட கட்டுரையின் தொடக்கத்திலே அ. போல் ராஜேஷ் கூறியிருப்பதைப் போல, எமது தேடல், தேவை, எதிர்பார்ப்பு என்பவற்றுக்குத் திருப்திகரமான தீனியைக் கொண்டதாக நூலின் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

சமூகம், கல்வி, சமயம், சுகாதாரம் எனவும், வறுமை, அரசியல் வரலாறு எனவும் பல்துறை சார்ந்த ஆக்கங்கள் வாசகனுக்குப் பயனுள்ள பல தகவல்களைத் தருகின்றன.

பாவேந்தர் பாரதிதாசனின் அழகின் சிரிப்பை விரிக்கும் கட்டுரையில்–

**கிளையினிற் பாம்பு தொங்க**
**விழுதென்று குரங்கு தொட்டு**
**வெடக்கெனக் குதித்ததைப் போல்**
**கிளைதொறும் குதித்துத் தாவிக்**
**கீழுள்ள விழுதையெல்லாம்**
**ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி**
**உச்சி போய்த் தன்வால் பார்க்கும்**

என்ற ஒரு கவிதைத் துளியை பாரதிதாசனின் கவிச் செல்வத்தினுள்ளே கண்டவாறு அதனை இலக்கியச் சுவைக்கு உதாரணமாக்கிக் கட்டுரையாளர் விளக்கியுள்ளார்.

ஆங்கிலேயப்புரட்சி, அமெரிக்கப் புரட்சி, பிரான்சியப் புரட்சி என்பன குறித்த வரலாறுகளை உலக வரலாற்றில் இடம்பிடித்த முக்கிய மூன்று புரட்சிகள் என்ற தலைப்பிலே தரப்பட்டுள்ளன. கலை, கலாசாரம் என்பவை குறித்தும் தமிழ் மொழியின் தொன்மை தமிழ் இலக்கணம் இலக்கியம் சிறுவர் இலக்கியம் எனவும் விரியும் கட்டுரைகளின் கோவையாகக் காமராஜ தரிசனம் அமைந்துள்ளது.

**மெய் சொன்னாலும் பொய் சொன்னாலும்**
**வாயால் சொல்லிப் பயனில்லை**
**மையிலே நனைச்சு பேப்பரில அடிச்சா**
**எதிர்த்துப்பேச ஆளில்லை**

என்ற கவிதையோடு தொடரும் இதழியல் துறைக்கு அழைத்துச் செல்லும். கட்டுரை இதழியற்றுறை சார்ந்து கற்பவர்களுக்கும் இதழியற்றுறையில் ஈடுபாட்டுடன் தொழில் புரிபவர்களுக்கும் பல்வேறு தகவல்களைத் தருகின்றன. ஆக்கங்கள் தருகின்றன. ஏசுவார்கள், எரிப்பார்கள்; உண்மையை எழுது, உண்மையாகவே எழுது என்ற யோகர் சுவாமிகளின் கருத்தோடு ஊடகத் துறை ஆற்றும் பணிகளையும், அவற்றைக் கற்க வாய்ப்புக்கள் வழங்கும் நிறுவனங்கள் குறித்தும் கட்டுரை தெரியத் தருகின்றது. இனிய கவிதைகளோடு இரண்டு ஆங்கில மொழிக் கட்டுரைகளும் நிரம்ப, தமிழ் நாட்டின் முதலமைச்சராக விளங்கிய கர்மவீரர் காமராஜர் பற்றிய ஒரு கட்டுரையோடு தரிசனம் நிறைவு பெற்றுள்ளது. இது பயன்மிகுந்ததும் பாதுகாத்துப் பலருக்கும் அறிவூட்டம் வழங்க உகந்ததுமான நல்லதோர் படைப்பாகும்.

# வயலின் மேதை உ.இராதாகிருஷ்ணன் ஓர் இசைப்பெட்டகமே



கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கையின் இசைப் பொக்கிஷங்களாக வைத்து வணங்கப்பட வேண்டிய இசைப் பேரறிஞர்கள் வரிசையிலே, இசைஞான திலகம் உருத்திராபதி இராதாகிருஷ்ணன் வயலினிசையால் உலகை வலம் வந்த சர்வதேசக் கலைஞராகப் போற்றப்படுகின்றார். ஐம்பதுக்கும் மேற்பட்ட பட்டங்களுக்கு அவர் உயிராகின்றார் என கடந்த வார புதன் பொய்கையில் அவர் குறித்து வெளியாகியிருந்த கட்டுரையின் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.

இலங்கையில் இசை ஜாம்பவான்களான, பரம் தில்லைராஜா, சண்முகரத்தினம், ஐயாக்கண்ணு தேசிகர், பாலசிங்கம், கணபதிப்பிள்ளை ராம்குமாரசாமி, வால் நடராஜா, சரஸ்வதி பாக்கியராஜா, சத்தியபாமா இராஜலிங்கம், ஊரிக்காடு நடராஜா, வி.கே. நடராஜா, திலகநாயகம்போல், சண்முகராகவன், கருணாகரன், பத்மலிங்கம், வர்ணகுலசிங்கம், செல்லத்துரை, முத்துக்குமாரு, ஞானகுமாரி, பொன்.சுந்தரலிங்கம், பொன்.சுபாஸ் சந்திரன், குமாரசாமி, நா.வி.மு.நவரத்தினம், உருத்திரன், பொன்.ஸ்ரீ.வாமதேவன், கெங்காதரன், பரமா கணேசன், ஜகதாம்பிகை, அம்பிகா, மேரி சரோஜா, மாதுசிரோன்மணி, இராமநாதன் ஐயா, சாரதா, அருந்ததி, வேலாயுத பிள்ளை, தவநாதன் றொபேட், முத்துக்குமாரசாமி சர்மா, கமலா, மல்லிகா, பூமணி, நேசபூபதி, நாகம்மா கதிர்காமர், வீரமணி ஐயர், திலகேஸ்வரன், பிரேமா, சுபத்திரா, வி.ரி.வி.சுப்பிரமணியம், ஸ்ரீரங்நாதன், கிருபாசக்தி, சிவபாலன் மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா, சிவானந்தராஜா, சிவஞானசேகரம், பாலச்சந்திரன், கிருஷ்ணானந்தன், நித்தியானந்தன், ஸ்ரீராம்குமார், இலட்சுமணகுமார், திருஞானசம்பந்தன், சக்திதேவி இன்னும் சொல்லப்படாத வாய்ப்பாட்டுக் கலைஞர்களுக்குப் பக்கபலமாக வாசித்து கலைஞர்களைப் பேறாக்கியவர். பலரைப் பேறாக்கிய இராதாகிருஷ்ணனை பல்கலைக்கழகம், வடமாகாண சபை, கல்வி அமைச்சு ஆகியவை வரலாற்று இசை மேதைகளின் பட்டியலில் இடம்பெற ஆவன செய்தல், அவரது ஆத்மாவுக்கு நாம் செய்ய வேண்டியது சாந்தியும் நன்றியும் ஆகும்.

**கச்சேரி தர்மம்**

ராதா சபையறிந்து, காலமறிந்து, பாத்திரமறிந்து, பின்னணியறிந்து, குரலறிந்து வாசிக்க வல்லவர். சோலோவாக இருந்தால், தனது கட்டுப்பாட்டுக்குள் மேடையையும், சபையையும் வைத்திருப்பார். இசைக் கச்சேரியொன்றிலே பக்கவாத்தியப் பொறுப்பைத் தாங்கி வாசிக்கும் பட்சத்தில், பாடகரை அனுசரித்து, அவரது மனோதர்மத்துக்கு இடையூறு விளைவிக்காதவாறு அவரது கற்பனைக்கு அனுசரணையாகவும் அவர் கொடுப்பதைத் திருப்பித் தருபவராகவும் சுருங்கச் சொல்வதானால், மிகச் சிறந்த பக்கவாத்திய பின்னணிக் கலைஞராக, கச்சேரி பிரமாதமாக மிளிர்வதற்கு வாய்க்கப் பெற்ற முன்னோடி தர்மவானாக விளங்கியுள்ளார். இவரது சீடர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை இவரது கச்சேரி தர்மம் இன்றும் காப்பாற்றப்பட்டு வருகிறது. மேலும், குரல், விரல் அரங்கேற்றங்களாகட்டும், அரங்கேற்ற வார்ப்புக்களையும், ஒத்திகைகளையும் மீறாமல் அரங்கேற்ற தர்மம் வெற்றிபெற தாம் சார்ந்த அனைவரும் ஒன்றுபட அழைத்துச் செல்லும் ஆட்சியும், பலமும், வல்லமையும் அமையப்பெற்றவர். இராகங்களில் அருமையாகவும் அசௌகரியமாகவும் ஏற்படுகின்ற ஸ்வரஸ்தான விலகலை சம்பந்தப்பட்டவர்களுக்கு முற்கூட்டியே உணர்த்தித் திருத்துவதில் மிகவும் நாகரிகமான சமர்த்தர் இவரை விட வேறு யாருமே இருக்க முடியாது.

**இராதாவைச் சோபிக்க வைத்த மல்லாரி**

இறைவனுக்கும் மற்றையோருக்கும் ஆன்மிக எழுச்சியையும், கோலோச்சும் வல்லமையையும், அடியவர்களை சரணாகதி அடையச்செய்யும் ஒன்றிப்பையும், படைபல ஆரவாரங்களோடு இருப்பிடத்தைவிட்டு வெளியுலா வரும்செய்தியையும், கேட்டதை வழங்கும் கருணா உபதேச திருவருட் கடாட்ச கைங்கரியசகிதம் இந்த உலக ஆன்மிக வாழ்வுக்கு ஒரு வைராக்கியப் பேறை அள்ளித்தருவதே இந்த மல்லாரியாகும். இராகம், தாளம் , பல்லவி போல் திடகாத்திரமான உருப்படி. நாதஸ்வரம் வயலின் இரண்டிலும் பிரகாசிக்கும் உருப்படி இது. லயப்பிடிப்புள்ளவர்களாலேயே இது நிலைநிறுத்தப்படுகிறது. தவில் நாதஸ்வரக் கலைஞர்களும் குறிப்பாக வயலின் கலைஞர்களும் மல்லாரியினால் கல்லாதவர்களையும், கற்றவர்களையும் வெல்லும்படியாகக் கவர்ந்து விடுகிறார்கள். பிரதம சிவாச்சாரியார்களையும் விரதம் அனுஷ்டிப்பவர்களையும் புளகாங்கிதமடையச் செய்து விடுகின்றது இந்த மல்லாரி. இவற்றை மிகுந்த பரீட்சயம் செய்து, பக்குவம்செய்து அரங்கேற்றுவதில் இராதாவுக்கு நிகர் இராதாவேதான்.

அதீத இடப்பல்லவிகள்
அனாகத இடப்பல்லவிகள்
இராகமாலிகாப் பல்லவிகள்
தளமாலிகைப் பல்லவிகள்
மணிப்பிரவாளப் பல்லவிகள் எனப் பல்லவிகள் பலவற்றை அச்சொட்டாக அரங்கேற்றுவதில் சாதனை படைத்தவர் இராதா.

இணுவிலில் இசைமேதைகளாகச் சோபித்து இன்றும் புகழோடு வாழ்கின்ற தெட்சணாமூர்த்தி, சின்னராசா, இராதாகிருஷ்ணன் ஆகிய மூவருக்கும் அமரத்துவ தேகாந்த நிலையில் கலாநிதிப் பட்டமளிப்பது காலத்தின் வேண்டுதலும், தூண்டுதலும் ஆகும். மற்றவர்களுக்குக் கலாநிதிப் பட்டம் கொடுப்பதற்கு ஏனோ சிலருக்கு இதயம் பலமுறை அடிக்கிறதோ புரியவில்லை. விரல்கள் பேசுவதைப் புரிந்தால் இது சாத்தியமாகும். பதம்கெடாத இந்தக் கலைஞனின் பாதமே எமக்கு நல்லதோர் சாதகமாகும் அதுவே நமக்கு வேதமுமாகும்.

# நூல்கள் வெளியீடு





வவுனியா கிருஷ்ணிகா வெளியீட்டகத்தின் அனுசரனையில், திருமதி மைதிலி தயாபரன் அவர்களின் நான்கு நூல்களின் வெளியீட்டு விழா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் அண்மையில் பிரதம மின்பொறியியலாளர் எஸ். பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜாவும், சிறப்பு விருந்தினராக வவுனியா, கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கு. சிதம்பரநாதன், கௌரவ விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் வவுனியா தெற்கு சி. உதயகுமார், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லுப்பாட்டு தோற்றமும் வளர்ச்சியும்...

**B பக்கத் தொடர்ச்சி**

கூத்த நூலில் தொடர்ந்து வில்லி சைக் கருவியாகிய உடுக்கையின் வெற்றிக் குரலைக் கேட்க முடிகிறது.

கால வெள்ளத்தில், எத்தனையோ கதைகள் வில்லிசையில் பிறந்தன நீலி கதை, கண்ணகி கதை, மகிடாசூரன் கதை, இரணியன் சம்ஹாரம், சுடலைமாடன் கதை, ஐயனார் கதை, வள்ளியம்மன் கதை, பார்வதியம்மன் கதை, மார்க்கண்டன் தபசு, அரிச்சந்திரன் கதை, கிருஷ்ணசாமி கதை, குசேலர் கதை, பெருமாள்சாமி கதை, மாகாளியம்மன் கதை, வில்லடிச்சான் கதை (அதாவது இராமாயணத்துக்கு மறுபெயர்), மகாபாரதக் கதைகள் எல்லாம் வில்லிசையில் மலர்ந்த சொல்லிசைகள்! நாட்டுப்புறத்து இசையிலே மலர்ந்த காட்டுப்பூக்கள்! இவ்வாறு நுகர்வோர் சிலருக்காக மட்டும் மலர்ந்திருந்த காட்டுப்பூ போன்ற வில்லிசைக் கலையை, நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன்படும்வண்ணம் பண்படுத்தித் தந்த முதல் பெருமை – இந்த இருபதாம் நூற்றாண்டில் – கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களையே சாரும். பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களின் சீர்திருத்தக் கருத்துக்களை வில்லுப்பாட்டு மூலம் நாட்டு மக்களுக்குச் சொன்ன அழியாப் புகழும் இவருக்கே உரியது!



வில்லிசை உலகில் வித்தகர்களாகப் புகழ் பெற்ற இன்னும் சில மேதைகளை இங்கு நினைவில் கொள்வது பொருந்தும். எனது தமிழாசிரியர் நெல்லை வித்துவான் அ.க. நவநீதகிருஷ்ணன் அவர்களின் கப்பலோட்டிய தமிழன் – வில்லுப்பாட்டு நூல் வில்லிசை உலகுக்கே ஒரு கலங்கரை விளக்கம். தமிழ்ப் பேராசிரியர் தி.சி.கோமதிநாயகம் எழுதிய தமிழ் வில்லுப்பாட்டுக்கள் எனும் ஆராய்ச்சி ஏடு நமக்குக் கிடைத்த பெரும்பேறு.

தோவாளை சுந்தரம்பிள்ளை, நெல்லை புலவர் ஐயம் பிள்ளை, சாத்தூர் புலவர் பிச்சைக்குட்டி, கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு முதலியோருக்கு இக்கலையின் வரலாற்றில் பெரும் பங்கு உண்டு. தனித்தனிப் பாணியில் இவர்கள் வில்லிசையைக் கண்ணாகப் போற்றி வளர்த்தார்கள். வாத்தியக் கருவிகளை இவர்கள் கையாள்வதில் வேறுபாடு இருந்தபோதும் வில்லிசைத் தாளமே இவர்களின் நாடித் துடிப்பாக இருந்து நாட்டு மக்களை மகிழச் செய்தது. எமது வானொலி நிலையம், தொலைக்காட்சி நிலையம் இவ்விரண்டு அமைப்புக்களுக்கும் வில்லிசைக் கலையின் வளர்ச்சி வரலாற்றிலே மிகச் சிறந்த இடம் உண்டு. இன்றும் தேசியத் தலைவர்கள், தேச முன்னேற்றத் திட்டங்கள் ஆகியவற்றை மக்களுக்கு நன்கு எடுத்துச் சொல்ல வில்லிசைக் கலை பயன்பட்டு வருகிறது.

நமது தமிழக அரசு, கிராமியக் கலைகளுக்கு ஊக்கம் அளிக்கும் பொழுதெல்லாம் வில்லிசைக் கலைக்கு சிறப்பிடம் தந்து வளர்த்து வருகிறது. தமிழக அரசின் சார்பில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னையில் நடத்திய கிராமியக் கலைவிழாவில் (1978) வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை இரண்டு நாள்கள் நடத்திச் சிறப்பித்தது. இன்னும், இன்றும், எங்கும் நடக்கும் அரசு விழாக்களில் வில்லிசை முழக்கத்தைக் கேட்கலாம்.

வில், வயிரம் பாய்ந்த பனையில் செய்யப்பட்டதாயினும், வானவில் போல வளைந்து கொடுத்துக் காட்சியளிக்கிறது. அவ்வண்ணமே இந்தக் கலையும் சாதி சமய பேதமின்றி, மேலும் படித்தோர் பாமரர் வேற்றுமை யின்றி, மக்க ளுக்கு நடுநாயகமாக இருந்து, நல்ல கருத்துக்களை வழங்கி வருகிறது.

நாடு தழுவிய கலையாக, இந்தக் கலை நல்லதோர் ஏற்றம் பெற்றுவிட்ட இந்தக் காலத்தில், வில்லிசைக் கலைஞர்கள், முற்றிலும் மக்கள் கலையாகவே இதை மாற்ற வேண்டும். இதற்கென்றே இசைவளம் செழித்திருக்கும்போது, இரவல் இசையை இரந்து பெறுவானேன்?

நகைச்சுவை மன்னர் என்.எஸ். கிருஷ்ணன் தொட்ட நேரப்பலன் இந்தக் கலையிலிருந்த அவலச் சுவைகளெல்லாம் நீங்கிவிட்டன! சிரிக்கவும் சிந்திக்கவும் என்றே இந்தச் செந்தமிழ்க் கலையைக் கலைவாணர் சீர்திருத்தி வெற்றி பெற்றிருக்கிறார். ஆகவே, இயல், இசை, நாடகம் –முத்தமிழ் மட்டுமல்லாது, நான்காவது தமிழ் என்று ஒன்றை வகுத்தேனும், அதற்கு நகைச்சுவைத் தமிழ் – என்று பெயரிட்டேனும், நாலும் அறிந்துகொண்டு நாலும் தெரிந்தவராக வில்லிசைக் கலைஞன் மேடைக்கு வந்தால்தான், நாலுபேர் பாராட்டும் வண்ணம் நல்லபடி வளர முடியும்.

பேரறிஞர் அண்ணா, எனது வில்லிசை நிகழ்ச்சி ஒன்றுக்கு, கடலூரில், தலைமை தாங்கி வாழ்த்தும்பேறு எனக்குக் கிடைத்தது. பேரறிஞர் அண்ணா அன்புக் கட்டளைப் படியே, இன்னமும் வில்லிசை நிகழ்ச்சிகளை நான் நடத்தி வருகிறேன்.

அன்னாரை வணங்கித் தொடங்கும் வில்லிசைக் கலையிலே அவரது வாழ்த்துக்களையே எல்லா அரங்கங்களிலும் பெற்று வருவதாக நான் உணர்ந்து மகிழ்ச்சியடைகிறேன்.

பேரறிஞர் அண்ணாவின் வரலாறு எனும் வில்லுப்பாட்டில் எனது அன்புக் கவிதை. அவருக்கே காணிக்கையாக்கி, எனது கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

**(வில்லிசைப் பாடல்)**

**அன்பினில் சிறு குழந்தை!**
**அறிவினில் இமயமலை!**
**பண்பினில் திருக்குறளாம்! அண்ணா**
**பாசத்தின் இன்னுருவாம்!**

**பார்க்கப் பத்தாயிரம் பேர்**
**பழகப் பத்து லட்சம்பேர்!**
**பாதையில் எண்ணற்றபேர்! அவர்க்கு**
**பகையிடமும் நல்லபேர்!**

**அண்ணா வாழ்க! என்று சொல்லும்**
**ஆறெழுத்துக் குள்ளேதான்**
**தமிழர்கள் தலையெழுத்து இருக்கு**
**தம்பி நான் பாடவந்தேன்!**

## கூத்துக்கள் நூல் வெளியீடு

பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வரும் டேமியன் சூரியால் எழுதப்பட்ட யாழ்ப்பாணக் கூத்துக்கள் நூல் வெளியீட்டு நிகழ்வு, கடந்த மாதம் 2ஆம், திகதி மாலை 5:30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் எழுத்தாளர் கு. இராயப்பு தலைமையில் நடைபெற்றது.

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண. பிதா றோ. நேசராஜா அடிகளார் நூலை வெளியிட்டு வைக்க, முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர் பே. பிரான்சிஸ் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். நூலுக்கான மதிப்பீட்டுரையை யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குனர் யோ. யோண்சன் ராஜ்குமாரும், வெளியீட்டுரையை எழுத்தாளர் செ. அ. அழகராசாவும், வரவேற்புரையை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் யே. இக்னேசியஸ் பிரபாவும், ஆசியுரையை குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண. பிதா றோ. நேசராஜா அடிகளாரும் நிகழ்த்தினர். ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் டேமியன் சூரி நிகழ்த்தினார். (51)



அகவை எண்பதும் சேவை ஐம்பதும் கண்ட மூத்த பத்திரிகையாளர் "சண்"னைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில், வெள்ளவத்தை மிராஜ் ஹோட்டலில் இடம்பெற்றது. நிகழ்வில் பத்திரிகை ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர். (அ)





படைப்பாளிகள் உலகத்தின் மன்னார் மாவட்டப் பணி ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை மன்னார் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது. மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் பிரம்மஸ்ரீ மகாதர்மக் குருக்கள் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். படைப்பாளிகள் உலகம் ஈழத்தேச ஒருங்கிணைப்பாளர் யோ.புரட்சி அறிமுக உரை நிகழ்த்தி மன்னார் மாவட்ட படைப்பாளிகள் உலகம் ஒருங்கிணைப்பாளராக கவிஞர் பிரதீப் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். மன்னார் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்பணி தமிழ்நேசன் அடிகளார் கருத்துரை வழங்கினார். முஸ்லிம் படைப்பாளர்களும் கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர். மன்னார் மாவட்டத்தின் மூத்த, இளம் படைப்பாளர்களும் கலந்துகொண்டு நிகழ்வை ஊக்கப்படுத்தினர். இந்த நிகழ்வுகள் யாவும் படைப்பாளிகள் உலகம் நிறுவுனர் ஐங்கரன் கதிர்காமநாதனின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றது.



கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் கைதடியூர் வே.தபேந்திரன் எழுதிய யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 2 நூல் அறிமுக விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (04.10.2015) கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நூல் அறிமுக உரையை மக்கள் வங்கியின் பரந்தன் கிளை முகாமையாளர் க.சிறிதரனும், மதிப்பீட்டுரையை மூத்த எழுத்தாளரும் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய கே.ஆர்.டேவிட்டும் நிகழ்த்தினர். நூலின் முதற் பிரதியை திருமதி தேவி மார்க்கண்டு பெற்றுக் கொண்டார். (௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

# நீ துயரப்படுகின்றாய் சுகம் வரும்



மனிதன் மனிதனாக வாழ்ந்து தேவராக உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த வையகம் படைக்கப்பட்டுள்ளது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என்பதையே திருவள்ளுவரும் எமக்குக் கோடிட்டுக் கூறுகிறது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"**
(குறள் 50)

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்தப் பிறப்பில் உரிய பேறை அடைய வேண்டுமாயின், இல்வாழ்க்கையைச் சந்தித்தேயாக வேண்டும். அத்தகு நிலையில் இன்பமும், துன்பமும் மிகுந்து வரும். அதனால் இன்ப நிலையிலும் பார்க்க, துன்பத்தையே கூடுதலாக உன்னால் அனுபவிக்க நேரும் என்பதை உலகத்தில் நாளாந்தம் நடைபெறும் செய்திகளின் மூலம் உணர்ந்திட முடிகிறது. இந்த நிலைக்கு அடிப்படைக் காரணம் பேராசையே ஆகும். இதனை விட்டுவிடுவதென்பது இலேசான காரியமல்ல. அனுபவித்தாலன்றி விடுபட முடியாததே பேராசையாகும். அதற்கு ஒரேயொரு வழியாகவே இல்லறம் சிருஷ்டிக்கப்படுகிறது. அப்போது ஒரு கேள்வி எழலாம், இல்லறம் என்பது துன்பமா? இல்லை! துன்பத்தை நாமே சம்பாதிக்கின்றோமா, எப்படி? எமக்குக் கிடைத் ததைக்கொண்டு வாழத்தெரியாமையே அதற்குக் காரணமாகும். அதி உச்சமாக வாழ ஆசைப்படுகின்றோம். பூமாதேவியின் பொறுமையை ஒரு போதுமே எண்ணிப்பார்ப்பதில்லை. அதனையே மாசுபடுத்தி விட்டோம். புண்படுத்தி விட்டோமே.

சிறுகக் கட்டி பெருக வாழ் என்பது பொய்யாகி விட்டது. மாறாகப் பெருகக் கட்டி சிறுக வாழ்கின்றோம்.

**திருக்குறளாக வாழ முற்படுகின்றோமா?
தேவாரமாக வாழ முற்படுகின்றோமா?
திருவாசகமாக வாழ முற்படுகின்றோமா?
இந்துவாக வாழ முற்படுகின்றோமா?
நீதி நூலாக வாழ முற்படுகின்றோமா?**

ஆனால் இவ்வாறெல்லாம் வாழ ஆசைப்பட்டவர் தான் சைவசமயத்திற்கு வழிகாட்டியாக அமைந்த சிவப்பெரியார் அமரர் கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்களாவார். அவர் எமது சமயத்தை ஆரவாரப்படுத்தாது, புனிதமாக, எளிமையாக, வாழ்வாங்கு சிவநெறியில் வாழ்ந்தவர். அவருக்கு ஆதார சுருதியாக அமைந்தவை தேவார, திருவாசகங்களேயாம். கூடுதலாக அவரது மூச்சு திருவாசகமே. அதனாலன்றோ அவர் இறக்கும் தறுவாயில் அவரது வேண்டுகோளுக்கிணங்கத் திருவாசகம் பாடப்பட்டது. இவ்வுலக ஈடேற்றம் என்பது திருமுறைகளிலே சொல்லப்படுகிறது. அவற்றைத் தினமும் ஓதி வருபவர்களுக்கு யாதொரு துன்பங்களும், சங்கடங்களும், வில்லங்கங்களும் அணுகாது என்பதே இங்கு எழுதப்படும் செய்தியாகும். துயரப்படாதீர்கள்.

**சுகம் வரும்**

ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல, அடியாரவர்க்கு நாளும் கோள்களும் யாதொரு தீங்கும் செய்யாது என்பது சம்பந்தரின் உறுதியான வாக்காகும். சமணர்களை வாதில் வெல்வதற்கு வரமளித்த பதிகம் கோளறு பதிகம் ஆகும். இந்தப் பதிகத்தின் முதலாவது பாடல் வேயுறு தோளிபங்கன் என ஆரம்பித்து. பதினொரு பாடல்களிலும் நல்ல என்ற சொல்லை நாற்பது தடவை பாவித்து பாலித்திருக்கின்றார். நாம் நல்லது என்ற சொல்லை எப்போதாவது யாருக்காவது நல்லபடியாகப் பாவித்திருக்கிறோமா? பாவித்தால் குறைந்தா போய்விடுவோம்? ஒவ்வொரு நாளும் ஒரு பதிகத்தை ஓதுவதற்கு இந்து சமயிகளாகிய யாம் உறுதி பூண வேண்டும். எனக்காகவா சொல்கின்றேன். உங்களுக்காகத்தானே? (கோளறு பதிகத்தின்) பதினோராவது பாடலை ஓதிப்பாருங்கள். நவக்கிரகங்களால் ஏற்படும் எல்லாவித தோஷங்களும் தானாக விலகிப் போகும். ஓதாவிட்டால் எழுதிப்பாருங்கள். சுகம் வரும்.

**திருச்சிற்றம்பலம்**

**தேனமர் பொழில் கொள் ஆலை
விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான் முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்,
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்,
ஆனசொல் மாலையோதும் அடியார்கள்
வானில்**

**அரசாள்வர் ஆணை நமதே !
திருச்சிற்றம்பலம்**

நவக்கிரக தோஷ நிவர்த்திக்காக, கோளறு பதிகம் முழுவதுமாக இசையோடு பாடினால், ஒன்பது கிரகங்களும் பணிந்து உங்களுக்குப் பாதுகாப்பளிக்கும்.

**இலட்சுமி வருவாள்**

வீடுகளில் விளக்கேற்றும்போது பாட வேண்டிய இலட்சுமிகரப் பாடல். இதனைக் காலையும், மாலையும் பாடி வாருங்கள். (இலட்சுமி தரிசனமாவாள்) குமரகுருபர சுவாமிகள் இந்தப்பாடலடங்கிய மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழை மதுரையில் அரங்கேற்றம் செய்யும் போது, அந்த மீனாட்சியம்மையே மகிழ்ந்து குழந்தையாக வந்து, முத்து மாலையை அருளி மறைந்தாள் என்பது வரலாறாகும். நாம் செய்த புண்ணிய பலனாக இந்தப் பாடல் உங்களுக்காகத் தரப்படுகிறது. தினமும் ஓதுங்கள், இலட்சுமி சுகம் தருவாள்.

**பெருந்தே னிறைக்கும் நறைக் கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடு நல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமானந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும் பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்கு தலை
மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.**

இந்தப் பாடலைப் பாடிக் கொண்டே விளக்கேற்றினால் வீட்டில் சுகம் குடிகொள்ளும்.

**முயற்சி திருவினையாக்கும்**

எந்தத் தொழில் புரியினும், அந்தத் தொழில் வெற்றி பெறவும், வருவாய் பெருகவும், வழக்குகளில் வெற்றி பெறவும், விவசாயம் பயிர்வகைகள் செழிப்புறவும் ஓத வேண்டிய பதிகத்தின் முதல் நான்கு பாடல்களைப் பாடிப் பரவுங்கள். பஞ்சம் பறந்தோடும். சம்பந்தரின் பாடல்

**திருச்சிற்றம்பலம்**

(I)
வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே

(II)
இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே

(III)
செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே

(IV)
நீறு பூசினீர் ஏற தேறினீர்
கூறுமிழலையீர் பேறும் அருளுமோ

நெல் மணிகள் பொலிந்து, அன்னம் குவியும் பதிகமாகும்.

**திருமணம் நடைபெற**

பாம்பு கடித்த மணமகனை இறப்பிலிருந்து உயிர்ப்பித்த சம்பந்தருடைய பதிகமதால் உரியவாறு திருமணமும் நடைபெற்றது. திருமணமாகாத ஆண், பெண் இருபாலரும் மனம் ஒருமித்து இந்தத் திருப்பதிகத்தைப் பாராயணம் செய்தால், இனிதே திருமணம் அரங்கேறும். அந்தப் பதிகத்தின் முதல் பாடல்

**திருச்சிற்றம்பலம்**

**சடையாய்
எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும்
மருகல்உடையாய் தகுமோ இவள்
உள்மெலிவே திருச்சிற்றம்பலம்**

**குழந்தைப் பாக்கியம் பெற**

அச்சுதகளப்பாளரின் குழந்தை இல்லாக் குறையை நீக்கி, குழந்தைப் பேறைத் தந்தருளிய பதிகம். அரிய ஞானியாம் மெய் கண்டாரைப் பெறுவதற்கு வாய்த்த பதிக முதற் பாடலிதுவாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**கண்காட்டும் நுதலானுங் கனல் காட்டும்
கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும்
சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும்
புயலானும்
வெண்காட்டில் உறைவானும்
விடைகாட்டும் கொடியானே.**

**திருச்சிற்றம்பலம்**

**நல்ல வண்ணம் வாழ**

வீட்டிலும் சரி, நாட்டிலும் சரி நல்ல விடயம் எதுவாயினும் பாடவேண்டிய பதிகப் பாடலிதுவாகும். ஒரு பிள்ளைக்கு ஏடு தொடக்கல் வைபவத்தில் இருந்து மணிவிழா, பவள விழா, அமுத விழா, சதாபிஷேகம் வரை நல்லபடியாக வாழ வாழ்த்தி விடுகின்ற பாடல் இதுவாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர்
குறைவில்லை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை
இருந்ததே**

**திருச்சிற்றம்பலம்**

**உடல் நலம் பெற**

தீராத நோய்களைத் தீர்த்தருளும் பதிகங்கள் இரண்டைக் குறிப்பிடலாம்.
1. மந்திரமாவது – திருநீற்றுப் பதிகம்
2. கூற்றாயினவாறு – வீரட்டானத்துறைப் பதிகம்

ஒன்று பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்த பதிகம் அடுத்தது. திருநாவுக்கரசரின் வயிற்று வலியைத் தீர்த்தருளிய பதிகம். ஆயுள் பூராகவும் இந்த இரண்டு பதிகங்களையும் ஓதி வாருங்கள். நோய்கள் அறவே ஒழிந்து போகும். சம்பந்தரின் பதிகம் இதோ.

**திருச்சிற்றம்பலம்**

**மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருவாலவாயான் திரு நீறே**

**திருச்சிற்றம்பலம்**

நாவுக்கரசரின் பதிகம் இதோ. சரணடையும் பாடல்.

**திருச்சிற்றம்பலம்**

**கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே**

**திருச்சிற்றம்பலம்**

முன்வினை, பழவினை, செய்வினை, சூனியம், கொடுநோய் என அறியாத பலதுன்ப துயரங்களை விடுவிக்கவும் அதிலிருந்து சுகம் பெறவும் வழிப்படுத்தும் பதிக முதற் பாடல் இதுவாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**அவ்வினைக்கு இவ்வினையாம் என்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு
ஊனமன்றே
கைவினைசெய்துஎம்பிரான் கழல்
போற்றுதும்நாமடியோம்
செய்வினை வந்தெம்மைத்
தீண்டப்பெறாதிரு நீலகண்டம்**

**திருச்சிற்றம்பலம்**

**வறுமை நீங்க**

அப்பர் சுவாமிகள் தில்லையில் பாடிய இந்தப் பதிகத்தால், உலகம் அன்னத்தால் மகிழ்கிறது. ஆபிரிக்காவின் ஒரு சில நாடுகளுக்காக நாமும் ஓதலாம் அல்லவா? மற்றவர்களுக்காக ஓதுவதும் தர்மமல்லவா?

**திருச்சிற்றம்பலம்**

**அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை
என்னம் பாலிக்குமாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே**

**திருச்சிற்றம்பலம்**

**பிரசவம் இனிதே நடைபெற**

ஏழைப் பெண்ணுக்கு இறைவன் தாயாய் வைத்தியம் பார்த்த திருப்பதிகம். அதில் ஒரு பாடல் . எவரும் பாடலாம்.

**திருச்சிற்றம்பலம்**

**தாயுமாயெனக்கே தலை கண்ணுமாய்ப்
பேயனேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாயனார் என நம்வினை நாசமே**

**திருச்சிற்றம்பலம்**

**திருட்டுப்போன பொருள் மீண்டும் கிடைத்திட**

முழுநம்பிக்கையோடு இந்தப் பதிகத்தைப் பாடிட திருட்டுப் போனவை மீண்டும் கிடைக்கும். நம்பிக்கையோடு ஓதுங்கள்.

**திருச்சிற்றம்பலம்**

**கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக்
கூறைகொண்டு
ஆறலைக்கு மிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ் முருகன்
பூண்டி மாநகர் வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னோடும்
எத்துக்கிங் கிருந்தீர் எம்பிரானீரே**

**திருச்சிற்றம்பலம்**

**மனக் கவலை தீர சிவபுராணம்**

என்னதான் இருந்தாலும், வீட்டில் நிம்மதி இல்லாத போதும், துன்பங்கள் நிறைந்த போதும், குடும்பத்தில் சச்சரவுகள் வருகின்ற போதும் பாடுங்கள் சிவபுராணம்! வீட்டில் துன்பம் விலகி இன்பம் பெருகும். மேற் சொன்னவற்றையும் ஓதிப்பாருங்கள் துயரம் சுகமாகும்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
வேண்டத்தக்கதை அறியவல்ல இறைவன், வேண்டும் பரிசையும் விருப்போடு உவந்தருளுவான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புராண இதிகாசக் கதைகளுக்கு உயிரூட்டும் பிற்காலச் சுவரோவியங்கள்

**து.துசியந்தன்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்)
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்

பண்டைய காலத்தில் பாமர மக்களுக்கு சமயம் சார்ந்த கதைகளை விளங்க வைக்கும் வகையில் சுவரோவியங்களை ஆலயங்களில் வரையும் பண்பு காணப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரையில், பௌத்த சிங்கள





மக்களிடையே இந்த வழக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக கண்டியுக ஓவியங்கள் இதற்குச் சிறப்பான உதாரணமாக அமைகின்றன.

வடபுலத்தைப் பொறுத்த வரை இந்த மரபு மிகக்குறைவாகவே காணப்படுகிறது. காலத்துக்குக் காலம் ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்யும்போது பழையவற்றை அழித்தொழிப்பதால் எமது முன்னைய ஓவியங்களைக் காண்பதே அரிதாகிவிட்டது. 1982 காலப்பகுதியில் கலாகேசரி ஆ.தம்பித்துரை என்பவரால் எழுதப்பட்ட யாழ்ப்பாணத்துச் சுவரோவியங்கள் பற்றிய கள ஆய்வு 'பிற்கால சுவரோவியங்கள்' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பல ஆலய சுவரோவியங்கள் இன்று அழிக்கப்பட்டுவிட்டன.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை பண்டைய ஓவியங்கள் தொடக்கம் தற்கால ஓவியங்கள் வரை பாதுகாக்கப்பட்டு வருவதோடு காலத்துக்குக் காலம் அவை அழிவடையாது மீள் மெருகூட்டப்பட்டும் வருகின்றன. இதனால் அவர்களுடைய அடையாளங்கள் அடுத்த சந்ததிக்குக் கையளிக்கப்படுவதோடு சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கும் ஆதாரமாக அமைகின்றன.

யாழ்ப்பாணத்தில் 90 களின் பிற்பாடு வரையப்பட்ட ஓவியங்கள், குறிப்பிடத்தக்க சில ஆலயங்களில் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலில் உள்ள ஓவியங்கள்.

தமிழ் இராசதானி காலத்துக்குரிய பழைமையான கோயில்களில் கைலாசபிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். இருப்பினும் இன்று அந்தப் பழைய காலத்துக்குரிய வேலைப் பாடுகள் எதனையும் இங்கு காணமுடியாது. இருப்பினும் 90 களில் வரையப்பட்ட சுவரோவியங்கள் மகத்துவம்மிக்கதாக அமைகின்றன.

இங்கு எஞ்சியுள்ள ஓவியங்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற ஓவியரான ஆட்டிஸ்ட் மணியம் எனப் பலராலும் அழைக்கப்பட்ட பெரியதம்பி சுப்பிரமணியத்தால் வரையப்பட்டவையாகும். இங்கு காணப் படும் வேறு சில ஓவியங்கள் அவருடைய மாணவர்களினால் வரையப்பட்டுள்ளன. ஆட்டிஸ்ட் மணியத்தின் மற்றும் சில புகழ் பெற்ற ஓவியங்கள் இணுவில் பரராச சேகரப்பிள்ளையார் கோயிலிலும் வரையப் பட்டுள்ளன. நல்லூரில் கைலாச பிள்ளையார் கோயிலில் காணப்படும் சுவரோவியங்கள் புராணக்கதைகளுக்கு உயிரளிப்பதாகக் காணப்படுகின்றன. இவை பண்டைய சுதை மரபில் வரையப்பட்டவையல்ல. சாதாரண சிமெந்து மேற்பரப்பில் எனாமல் வர்ணம் கொண்டு பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. இந்த ஓவியங்களில் புகழ்பெற்ற இந்திய ஓவியரான ரவிவர்மாவின் ஓவியப்பாணியின் செல்வாக்குக் காணப்படுகிறது. அத்தோடு பழைய இந்தியத் திரைப்படங்கள் (பக்திப் படங்கள்) இந்திய நூல் சித்திரங்கள், கலண்டர் சித்திரங்கள் போன்றவற்றின் செல்வாக்கும் காணப்படுகிறது. கைலாச பிள்ளையார் கோயிலின் உட் சுற்றுப் பிரகாரத்தின் சுவர்களில் விநாயகரின் கதையுடன் தொடர்புடைய புராணக்கதைகள் சித்திரமாக்கப்பட்டுள்ளன. சுவரின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ள ஓவியங்கள் பார்வையாளர்களை வசீகரிக்கக் கூடியதோடு புராணக் கதைகளுக்கு உயிரூட்டுவனவாகவும் அமைகின்றன.

இங்கு வரையப்பட்டுள்ள ஓவியங்களில் திருத்தராசூரனை வதம் செய்தமை என்ற ஓவியம் மிகச் சிறப்பானதாக அமைகின்றது. இந்த ஓவியத்தில் கழுகு வடிவம் கொண்ட திருத்தராசூரன் விநாயகருடன் கடும் போர் புரிகின்ற விதம் தனித்துவம் வாய்ந்ததாகவும், கலைஞனுக்கே உரிய சிந்தனை வெளிப்பாட்டையும் காட்டுகின்றது. இதில் பிரமாண்டமான கழுகு (சூரன்) காலினாலும் அலகினாலும் விநாயரைத் தாக்கும் விதமும் விநாயகர் தனது கரங்களாலும் துதிக்கையினாலும் சங்காரம் செய்யும் விதமும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. இதன் பின்னணி இவ்விரு உருவங்களுக்கு ஏற்ற வகையில் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இங்கு காணப்படும் அனலாசூரனை வதைக்கும் ஓவியமும், மற்றுமொரு சிறப்பு வாய்ந்த ஓவியமாகும். விநாயகர் அனலாசூரனை விழுங்கியதால் அவன்அவரது வயிற்றில் நெருப்பாக எரிவதை கலைஞர் சிறப்பாக வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

இங்கு காணப்படும் மற்றுமொரு ஓவியத்தில் விநாயகர் தனது ஒரு தந்தத்தை உடைத்து



**தென்னிலங்கையைப் பொறுத்தவரை பண்டைய ஓவியங்கள் தொடக்கம் தற்கால ஓவி யங்கள் வரை பாதுகாக்கப்பட்டு வருவதோடு காலத்துக்குக் காலம் அவை அழிவடையாது மீள் மெருகூட்டப்பட்டும் வருகின்றன. இத னால் அவர்களுடைய அடையாளங்கள் அடுத்த சந்ததிக்கு கையளிக்கப்படுவதோடு சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கும் ஆதாரமாக அமைகின்றது.**

மகாபாரதம் எழுதிய விதம் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. இதில் வேதவியாசர் (முனிவர்) மகாபாரதத்தை கூறும் முகமாகக் காணப்படும் முக அமைப்பும், விநாயகர் தனது தந்தத்தால் பாறையில் வடமொழியில் பாரதக்கதையை எழுதும் விதமும் தனித்துவமானதாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

இங்கு வரையப்பட்டுள்ள முருகப் பெருமான் வள்ளியை ஆட்கொண்டமை, காவிரி நீர் பெருகியமை போன்ற ஓவியங்கள் இவரால் வரையப்பட்ட இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் ஓவியங்களைக் காட்டிலும் வித்தியாசமான பாணியில் வரையப்பட்டுள்ளன. விடயத்தெளிவு, பாவவெளிப்பாடு, சித்திரிப்பு, பொருத்தமான பின்னணி போன்ற எல்லா அம்சங்களையும் கொண்டுள்ள இந்த ஓவியங்கள் மாயாவாத வெளிப்பாட்டு முறையை (Illusionistic) வெளிப்படுத்தி நிற்பதாக சில விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

சுதை முறைமையற்ற சாதாரண வர்ணத்தைப் பயன்படுத்தி வரைந்தமையினால் இந்த ஓவியங்களில் சில அழிவடையத் தொடங்கிவிட்டன. தென்னிலங்கை பௌத்த பன்சலை ஓவியங்களுக்கு நிகராக சித்திரக்கலைப் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள இந்த ஓவியங்களைப் பாதுகாப்பது எமது இனத்துக்குச் செய்யும் பெரிய பங்களிப்பு ஆகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச.லலீசன், பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

# சிறுவர்களின் திறன் விருத்தியில் கிராமிய நிறுவனங்களின் பங்கு



சமூகத்தோடு பொருந்தி வாழும் மனிதர்களே வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றார்கள். சமூகத்தோடு பொருந்தி வாழ்தல் என்பது இலேசான காரியமல்ல. சமூகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் தனித்துவமான சிந்தனைகள், நடத்தைகள், செயல்களைக் கொண்டவர்கள். இதனைப் புரிந்து வாழ்பவர்களே வாழ்வில் வெற்றி பெறுகின்றார்கள்.

பிள்ளைகளுக்கு முதலாசான்களாக அமைபவர்கள் அவர்களுடைய பெற்றோரே ஆவர். இவர்களின் ஊடாகப் பாடசாலை மற்றும் சமூக நிறுவனங்களைப் பிள்ளைகள் தரிசிக்கின்றார்கள். இத்தரிசிப்பு சமூகமயமாக்கலுக்கான அடிப்படையாக அமைகின்றது.

அறியாப் பருவக் குழந்தை சுயவிழிப்புணர்வும் அறிவும் பெற்று மனிதனாக மலர்ச்சி பெறவும், தாம் பிறந்த சமூகத்தின் கலாசார நடைமுறைகளை அறிந்து அவற்றைப் பேணுவதில் திறன் பெறவும், வழிப்படுத்தும் செயன்முறையைச் சமூகமயமாக்கல் என அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார். அதாவது சமூக உறுப்பினராக நுழைவதற்கு ஏற்ற தகுதிப்பாட்டை வழங்கும் ஒரு செயற்பாடே சமூகமயமாக்கல் ஆகும். சமூகமயமாக்கலுக்கு உட்படாத எவரும் அவர் வாழுகின்ற சமூகம் விதித்த நியமங்களுக்கு ஏற்ப இயல்பான மனிதராகக் கருதப்படமாட்டார்.

உலகம் இன்று வேகமாக மாற்றம் கண்டு வருகின்றது. நாளைய உலகை வெல்வோம் என்பதே இன்றைய உலகினரின் கோஷமாக அமைந்திருக்கின்றது.

சமுதாய மாற்றத்தின் முக்கிய அம்சங்களாகப் பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

விவசாயப் பொருளாதாரம் இன்று கைத்தொழில் பொருளாதாரமாக மாற்றமுற்று அதையும் தாண்டி அறிவியல் பொருளாதாரமாக மலர்ச்சி கண்டுள்ளது.

எதனையும் அறிவியல் அடிப்படையில் விளக்கமளிக்கும் மனப்பாங்கு வளர்ச்சி பெற்றுள்ளது. இதனால் அறிவு பல்வேறு சிறப்புத் துறைகளாக விரிவு பெற்றுள்ளது.

நகரமயமாக்கலின் விளைவாக கிராம வாழ்வியல் தகர்க்கப்பட்டிருக்கின்றது. கிராமங்கள் நகரங்களின் சூம்பிய வால்களாக்கப்பட்டிருக்கின்றன.

மனிதரில் மனிதர் தங்கி வாழ்கின்றனர் என்ற எண்ணப்பாங்கு வலுக்குன்றியுள்ளது. இதனால் அயலவர்களை நேசித்தல், இணைந்து வாழ்தல் போன்ற பண்புகள் குன்றியுள்ளன. எதனையும் பணத்தினால் சாதிக்கலாம் என்ற மனப்பாங்கு விரிவு பெற்றுள்ளது.

எனவே இதற்கு ஏற்றாற்போல் அறிவு, திறன், மனப்பாங்குகளை அமைத்துக்கொள்ள வேண்டிய தேவை உணரப்படுகின்றது. மாற்றம் காணும் உலகில் பொருந்தி வாழும் தகைமையையும் சமூகத்துக்குத் தேவ்வயான பண்புகளையும் வளர்த்தெடுப்பதில் குடும்பம், பாடசாலை மற்றும் சமூக நிறுவனங்கள் ஆற்றும் பங்கு முக்கியமானதாக உணரப்படுகின்றது.

தனி நபர் ஒருவர் சமூகத்தில் வாழ்வதற்காகக் கொண்டிருக்க வேண்டிய திறன்களே சமூகத் திறன்கள் எனக் குறிப்பிடுகின்றார் கலாநிதி ஜெயலஷ்மி இராசநாயகம். இந்தச் சமூகத் திறன்களை வளர்த்தெடுப்பதில் குடும்பம், பாடசாலை, சமூக நிறுவனம் போன்ற காரணிகள் முக்கிய பங்கை ஆற்றுகின்றன. மொழி, கல்வி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், விழுமியங்கள், சமூகத் தொடர்புகள், சேர்ந்து வாழ்தலின் அவசியம், ஆபத்துக் காரணிகளை இனங்காணும் நிலை, பொருளாதாரச் சிந்தனைகள், தொழிலின் அவசியம் என பிள்ளைகள் பெற வேண்டிய சமூகத்திறன்களை அவர் அடையாளப்படுத்துகின்றார்.

எல்லாத்திறன்களையும் குடும்பத்தினராலும் பாடசாலையாலும் வளர்த்தெடுத்துவிட முடியாது. குடும்பத்தினரில் பெரும்பாலானோருக்குத் தக்கது எது? தகாதது எது? என்பது குறித்த தெளிவு போதியளவில் இல்லை. இன்றைய வாழ்வியலில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை சிதைவுற்றுள்ளது. கருக் குடும்ப அமைப்பே பெருகி வருகின்றது. இதனால் சுயநலம் சார்ந்த வாழ்வியல் முறைமைக்கு அதிக முக்கியத்துவம் ஏற்படுகின்றது. குடும்பத்தால் நிறைவேற்றப்பட முடியாத சமூகம் சார்ந்த திறன்களை பொது அமைப்புக்களே இன்று நிறைவேற்றி உதவுகின்றன.

பாடசாலைகளைப் பொறுத்த வரையில் அவை பொதுவான கலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களாகவே செயற்படுகின்றன. இலங்கையின் தெற்கு, வடக்கு, மத்தி, மலைநாடு என எல்லாப் பிரதேசங்களுக்கும் பொதுமைப்பாட்டைக் கொண்ட கலைத்திட்டத்தையே அவை நிறைவேற்றுகின்றன. ஆனால் வாழ்வியல் முறை, பிரதேசத் தேவைகள், கலாசார அடையாளங்கள், மொழி நடை முதலியன பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்ட தன்மையுடன் காணப்படுகின்றன. பாடசாலைகளில் இடம்பெறுகின்ற இணைக் கலைத்திட்ட மற்றும் புறக் கலைத்திட்ட செயற்பாடுகள் பிரதேசம் மற்றும் இனத்துவம் சார்ந்த அடையாளங்களை ஓரளவுக்காகவேனும் நிலைநிறுத்துகின்றன. பாடசாலைக் கலை விழாக்கள் பிரதேச மற்றும் இன மொழி அடையாளங்களைப் பேணும் விழாக்களாக அமைகின்றன. ஆயினும் பெரிய பாடசாலைகளில் கற்கும் பிள்ளைகளுக்கு இவற்றில் பங்கேற்பதற்கான வாய்ப்பு பூரணமாக அமைவதில்லை. அத்துடன் புலமைத்தேர்வு, உயர்தரத்தேர்வு எனப் போட்டித்தன்மை வாய்ந்த பரீட்சையை மையப்படுத்திய கல்வி முறைமையும் இயல்பான சமூகத்திறன் விருத்திக்குத் தடைக்கற்களாக உள்ளன.

குடும்பத்திலும் பாடசாலையிலும் பெறுவதற்குத் தவறுகின்ற அல்லது பெறுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாத திறன்களைக் கிராமிய நிறுவனங்கள் வழங்க முடியும். ஒரு கிராமத்தில் இருக்கக்கூடிய சமூக நிறுவனங்களாகப் பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

- கோவில்
- சனசமூக நிலையம்
- முன்பள்ளி
- தனியார் கல்வி நிறுவனம்
- விளையாட்டுக் கழகம்
- கலை இலக்கிய மன்றம்
- பொது அமைப்புக்கள்.(மணிமண்டபம்)

இங்கு குறித்துக் காட்டப்பட்ட கோவில் மற்றும் சனசமூக நிலையம் என்பவை மிகவும் வலுவான அமைப்புக்களாக உள்ளன. இவற்றை மையப்படுத்தியே பல்வேறு திறன் விருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சிறுவர்கள் தமது சகபாடிக் குழுக்களுடன் ஒன்றிணைவதற்கு வாய்ப்பான களங்களாக பாடசாலையைத் தவிர்த்துப் பார்த்தால் மேற்போந்த அமைப்புக்களே காணப்படுகின்றன.

இந்நிலையில் சிறுவர் என்போர் யாவர்? என்பது பற்றியும் விளக்குதல் பொருத்தம். பிறப்பு முதல் பருவம் அடைவது வரையான காலத்தையே பிள்ளைப் பருவம் எனக் கொள்வர். இதிலிருந்து சற்று வேறுபட்டு 18 வயதிற்கு உட்பட்ட அனைவரையும் (ஆண் பெண் இருபாலாரையும்) சிறுவர் என அழைக்கும் வழக்கம் உலகளாவிய ரீதியில் உள்ளது.

## கோவில் சார்ந்த பணிகள்

பண்பாட்டைப் பயிற்றுவிக்கும் நிலைக்களங்களாக ஆலயங்களே விளங்குகின்றன. ஓர் இனத்தின் பண்பாட்டுக் கூறை அடுத்த சந்ததிக்குக் கையளிக்க வேண்டிய முக்கிய நிறுவனம் ஆலயம் ஆகும். அத்துடன் வழிபாடு, வாழ்வியல் சார்ந்த நடைமுறைகளைப் பேணிக்காக்க வேண்டிய நிறுவனங்களாகவும் ஆலயங்கள் காணப்படுகின்றன. ஆனால் நடைமுறையில் நாம் தரிசிக்கும் ஆலயங்களும் அவற்றின் செயற்பாடு களும் திருப்தியளிப்பதாகத் தெரியவில்லை. வெறுமனே பூசை, அர்ச்சனை என்ற ஒற்றைப்படையான வாய்பாட்டிற்குள் தம்மை அமிழ்த்திச் செயற்படும் வலுக்குன்றிய அமைப்புக்களாகவே இன்று பல ஆலயங்கள் செயற்படுகின்றன. இது வேதனைக்குரிய ஒன்றாகும்.

சிறுவர்களின் திறன்களை வளர்க்கக்கூடிய போட்டிகள், பயிலரங்குகளை முன்னெடுப்பதில் ஆலய நிர்வாகங்கள் ஆர்வம் காட்டுவதில்லை. இவை தங்களுக்குரிய வேலை அன்று எனப் பல ஆலய நிர்வாகிகள் கருதுகின்றனர். ஆலயங்களைக் கலைகளின் வளர்ப்பிடமாகவே நம்முன்னோர்கள் கண்டனர். இன்று பண்பாடு சார்ந்த நம்பிக்கைகளும் வலுக்குன்றி விட்டன. குறைந்த பட்சம் பஞ்சாங்கம் பார்க்கக்கூடிய அறிவைத்தானும் தனது ஆளுகைக்கு உட்பட்ட பக்தர்களுக்குப் பயிற்றுவிக்க ஆலயங்கள் தவறிவிட்டன. போட்டிகளை ஏற்பாடு செய்து நடத்திவிடுவதால் சமயத்தை வளர்ப்பதாகவும் திறன்களை மேம்படுத்துவதாகவும் சில ஆலயங்கள் திருப்தி கொள்கின்றன. ஆனால் வெறுமனே போட்டிகளை நடத்துவதனால் மட்டும் சமயம், சமூகம் என்பன வளர்ச்சியடைந்துவிடாது. சமயம் என்பது வாழ்வியல் என்ற உணர்வைச் சமூகத்தினரிடையே ஏற்படுத்துவதில் ஆலயங்கள் அதிதீவிர சிரத்தை கொள்ள வேண்டும்.

## சனசமூக நிலையங்கள் சார்ந்த பணிகள்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற வாக்குக்கு அடிநாதமாகச் சனசமூக நிலையச் செயற்பாடுகளைக் கொள்ளலாம். இன்று பல சனசமூக நிலையங்கள் தனது உறுப்பினர்களின் சமூகமயமாக்கல் திறன் விருத்தி, பொருளாதார மேம்பாடு சார்ந்து பல செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. சனசமூக நிலையங்கள் சார்ந்து விளையாட்டுக் கழகங்கள், முன்பள்ளிகள், கலை இலக்கிய அணிகள் செயற்படுவதும் ஆரோக்கியமானதே. ஆயினும் சமூகமயமாக்கலுக்காக உதயமாகிய சனசமூக நிலையங்களிடையே சமூகம் சார்ந்த பிரிவினைகள் காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. காலவோட்டத்தில் இந்தப் பிரிவினைகள் வலுக்குன்றும் என எதிர்பார்க்கலாம்.

## பொது அமைப்புக்கள் (மண்டபங்கள்)

நகரமயமாக்கலின் ஓர் அங்கமாக எம்முள் முளைகொண்டிருப்பவை பொது மண்டபங்கள் ஆகும். பொது மண்டபங்களின் தோற்றத்துக்குப் பின்னரே ஒருவரில் ஒருவர் தங்கி வாழுகின்ற தேவை வலுக்குன்றியதாகக் கொள்ள முடியும்.

வீடுகளை மையப்படுத்தி நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதில் காணப்படுகின்ற ஆளணி வசதி, பொருளாதார வசதி என்பவற்றிற்குரிய பரிகாரமாகவும் மண்டபங்கள் காணப்படுகின்றன. கிராமிய நிலையில் காணப்படுகின்ற வர்க்க வேறுபாடுகளைக் களையும் நிலையங்களாகவும் எமது பிரதேசங்களில் இவை விளங்குகின்றன.

எமது பிரதேசங்களில் அமைந்துள்ள திருமண மற்றும் கலாசார மண்டபங்கள் அரச, பொது, தனியார் செல்வாக்குக்கு உட்பட்டு நடத்தப்படுகின்றன. பெரும்பாலான சுபகாரியங்கள் இவற்றை மையப்படுத்தியே நடத்தப்படுவதனால் இவை பொருளாதார வளம் மிக்க நிலையங்களாகவும் விளங்குகின்றன. இதனால் ஆலயம் சார்ந்து, சனசமூக நிலையம் சார்ந்து, பாடசாலைகள் சார்ந்து மணி மண்டபங்கள் அமைக்கும் கலாசாரம் உருவாகி வருகின்றது. இவற்றின் பெருக்கம் குறித்துக் கவலை கொள்வோரும் உள்ளனர். ஆனால் காலத்தின் தேவை காரணமாக இவை தவிர்க்க இயலாத அங்கங்களாக உருவெடுத்து வருகின்றன.

சிறுவர் திறன் விருத்திக்காகக் கிராமிய நிறுவனங்கள் பின்வரும் பங்களிப்புக்களை ஆற்ற முடியும்:-

மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என அமைகின்ற அடிப்படை மொழித் திறன் களை விருத்தி செய்யக்கூடிய வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்தல், துறைசார் வளவாளர்கள் ஊடாகப் பயிலரங்குகளை நடத்துதல், தகவல் தொடர்பாடல் வள நிலையம் அமைத்தல், கற்றல் வளநிலையங்களைக் கிராமிய மட்டங்களில் அமைக்க முடியும். நூலகங்களை அமைப்பதோடல்லாமல் காலத்துக்கு ஏற்ற விதத்தில் கணினி மையங்களையும் நிறுவ முடியும்.

அறிவியல் சார்ந்த கல்வி முன்னெடுப்புக்கு உதவுதல், பண்பாடு சார்ந்த கலைக்கற்கைகளை பயிற்றுவிப்பதற்கு உதவுதல் (இசை, நடன, ஓவிய, நாடக வகுப்புக்களை நடத்துதல், கல்விசார் சுற்றுலாக்கள் தல யாத்திரைகளை ஒழுங்கமைத்தல், முன்வந்து பொறுப்பேற்றல் மற்றும் ஆளுமைத்திறன்களை வளர்ப்பதற்கான பயிலரங்குகளை ஒழுங்குசெய்தல், முக்கியமான நிகழ்வுகளுக்கு வாகன ஏற்பாடுகளை மேற்கொண்டு அழைத்துச் செல்லல், அறநெறிப் பாடசாலைகளை ஒழுங்கமைத்து நடத்துதல்,மருத்துவ முகாம்களை ஒழுங்கமைத்தல், சுகாதாரப் பழக்கங்கள் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தல், சத்துணவு, சிறுவர் போசாக்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல், யோகாசனம் மற்றும் வாழ்வியல் சார்ந்த ஆரோக்கிய நெறிக்கான பயிற்சிகளை வழங்குதல், பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் இளவயதுத் திருமணத்தால் ஏற்படும் விளைவுகள் பற்றிய அறிவை வழங்குதல்.

சிறுவர் உரிமைகள் பற்றிய அறிவை வழங்குதல், வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குதல், முதியோரைப் பேணுதல், மரியாதை செய்தல் முதலிய உணர்வை ஏற்படுத்தல்.

மேற்போந்த நெறிகளை நடைமுறைப்படுத்துவது இயலுமான காரியமல்ல. இவற்றை நடைமுறைப்படுத்துவதில் பின்வரும் சவால்கள் எதிர்கொள்ளப்படலாம், பொருளாதார நெருக்கடி, சமூக ஒத்துழைப்பு, போதிய விழிப்புணர்வு இல்லாக் குழப்ப நிலைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் பொருத்தமான வளவாளர் பற்றாக்குறை இவற்றைத்தீர்ப்பதில்கிராமிய அமைப்புக்களும் ஊர்ப்பிரமுகர் களும் உதவ முடியும்.

## நிறைவுரை

உளப்பகுப்பாய்வாளரான சிக்மண்ட் புரொயிட், ஒரு மனிதன் தனது குடும்பத்தில் இருந்து கற்கும் விடயங்களையே சமூகத்தில் பிரதிபலிக்கின்றான் என்கிறார். எனவே சமூகத்தில் நற்பிரசைகளின் தோற்றத்திற்கு குடும்பத்தின் செல்வாக்கு மிகவும் பிரதானமானதாக அமைகின்றது. அதனை அடுத்துப் பாடசாலைச் சூழல் மிகப்பெரும் பங்களிப்பை நல்குகின்றது. நாடு முழுவதும் ஒரே விதமான கலைத்திட்டம் அமுற்படுத்தப்பட்டாலும் நல்ல சகபாடிகளுடனான தொடர்பாடலின் மூலம் சிறப்பான கவிவு நிலையில் ஆளுமை விருத்தியை ஏற்படுத்துவதற்காகவே பிரபல பாடசாலைகளில் அனுமதிக்கான கேள்வி வலுவானதாகக் காணப்படுகின்றது. குடும்பம் மற்றும் பாடசாலைகளுக்கு அப்பால் சிறுவர்களைச் சமூகமயமாக்குவதிலும், சமூகத் திறன்களை விருத்தி செய்வதிலும் கிராம நிறுவனங்களே பிரதான பங்கை ஆற்றுகின்றன. இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து இவற்றை வலுப்படுத்தி வாழ்வை வளப்படுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org